# குர்ஆனின் குரல்

صَفَر – ١٤٤٦

ஆகஸ்ட் – 2024

₹25/-



சீன நாட்டின் டுடியன் பள்ளிவாசல்

999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# சோதனையின்றி சுவனமா?

أَمْ حَسِبْتُمْ أَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَأْتِكُمْ مَثَلُ الَّذِينَ خَلَوْا مِنْ
قَبْلِكُمْ ۖ مَسَّتْهُمُ الْبَأْسَاءُ وَالضَّرَّاءُ وَزُلْزِلُوا حَتَّىٰ يَقُولَ
الرَّسُولُ وَالَّذِينَ آمَنُوا مَعَهُ مَتَىٰ نَصْرُ اللَّهِ ۗ أَلَا إِنَّ نَصْرَ اللَّهِ قَرِيبٌ

"உங்களுக்கு முன்னால் சென்று விட்டவர்களுக்கு ஏற்பட்டதைப் போன்று (சோதனைகள்) உங்களுக்கு வராமலேயே, சொர்க்கத்தில் நீங்கள் பிரவேசித்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா ? வறுமையும், பிணியும் (முன்னோர்களாகிய) அவர்களைப் பீடித்தன; அந்த இறைத் தூதரும், அவருடன் (ஓரிறை) நம்பிக்கைக் கொண்டவர்களும், "அல்லாஹ்வின் உதவி எப்பொழுது (வரும்) ?" என்று கேட்கும் வரை (பல்வேறு துன்பங்களால்) அவர்கள் அலைக்கழிக்கப்பட்டனர். அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்தில் இருக்கிறது (என்று அவர்களுக்கு பதில் கூறப்பட்டது)" – அல்குர்ஆன் (2 : 214)

---

கண்ணியத்திற்குரிய ஸஹாபாக்கள் பல்வேறு சோதனைகளுக்குள்ளானார்கள். நெருக்கடிகளும், கஷ்டங்களும், வறுமையும் அவர்களை சூழ்ந்தன. யா ரஸூலல்லாஹ்! அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்? என எதிர்பார்ப்புடன், ஏக்கத்துடன் கேட்கும் அளவிற்கு எதிராளிகளின் தொந்தரவுகள் இருந்தன. எப்பொழுது இந்நிலை ஏற்படுகிறதோ அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் உதவி நெருக்கத்தில் உள்ளது என அல்லாஹ் கூறி நிம்மதியை உலகத்திற்கு ஏற்படுத்துகிறான். அதே நேரத்தில் பல்வேறு சோதனைகளுக்கு பிறகுதான உதவியும், சுவனமும், வெற்றியும் என்பது தெரிகிறது. ஹள்ரத் நபி தாவூத் (அலை), மன்னர் தாலூத் ஆகிய இருவரும் சேர்ந்து ஜாலூத் என்னும் அரக்கனான அரசனை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை! ஜாலூத் அரசனோ மிகப் பெரும் உருவமைப்பை கொண்டவனாக இருக்கிறான். அவனை எப்படி எதிர்ப்பது, மிகக் கடினம் எனக் கூறினார்கள் பனீ இஸ்ரவேலர்கள். அதற்கு அவனை எதிர்ப்பது மிகச் சுலபம். ஏனென்றால், அவன் மிகப் பெரும் உருவமைப்பைக் கொண்டவனாக இருக்கிறான் என்றார்கள் நபி தாவூத் (அலை). தூரத்தில் நின்று கல் கொண்டு எறிந்தார்கள். அது அவனது நெற்றியில் பட்டு சரிந்தான். இறந்துவிட்டான். சோதனைகளுக்குள்ளேயே அல்லாஹ்வின் உதவியும் உண்டு. நாம் நிலைகுலைந்திடாமல் உறுதியாக இருந்தால் வெற்றிப் பாதைகளை அல்லாஹ் நிச்சயம் காட்டுவான் என்பது உறுதி!

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# ஆலிமின் மரணம்:
# ஈடு செய்ய முடியாத இழப்பு!

عَنْ أَبِي الدَّرْدَاءِ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ يَقُولُ: وَمَوْتُهُ (أَيِ الْعَالِمِ) مُصِيبَةٌ لَا تُجْبَرُ وَثُلْمَةٌ لَا تُسَدُّ وَهُوَ نَجْمٌ طُمِسَ مَوْتُ قَبِيلَةٍ أَيْسَرُ مِنْ مَوْتِ عَالِمٍ.رواه البيهقي

"ஓர் ஆலிமின் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். நிறைவு செய்ய முடியாத குறையாகும். அவர் (தம் மரணத்தின் காரணமாக) ஒளியிழந்த நட்சத்திரமாக ஆகிவிடுகிறார். ஓர் ஆலிமுடைய மரணத்தைவிட ஒரு கோத்திரத்தார் அனைவரின் மரணம் மிகச் சாதாரணமானது!" என ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: பைஹகி)

---


மாணிக்கங்களாய் மறைந்து வாழ்ந்த இந்த சமுதாயத்தின் ஆலிம்களின் தியாகங்களை வெளிக் கொண்டு வந்த குர்ஆனின் குரல் இன்னும் பல்லாண்டு வாழ்க!

செய்யது சகோதரர்கள்

நாகூர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

குரல் : 67
ஸபர் 1446

★

எதிரொலி – 8
ஆகஸ்ட் – 2024

# கண்ணீர் குறிச்சியாக மாறிய கள்ளக்குறிச்சி!

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் சட்டவிரோதமாக விற்கப்பட்ட கள்ளச்சாராயத்தை வாங்கிக் குடித்ததில் உடல் நலம் பாதிக்கப்பட்டு, 67-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்தச் சம்பவம் அரசு இயந்திரத்தின் தோல்வியையும், ஏற்கனவே நிகழ்ந்த கள்ளச் சாராய மரணங்களிலிருந்து அரசு பாடம் கற்காததையும், அலட்சியத்தையும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் அரசு சார்பில்ரூ.10 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் வாரிசுகளின் கல்விச் செலவை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. விரும்பத்தகாத ஒரு நிகழ்வு நடைபெற்ற பிறகு அரசின் வழக்கமான நடவடிக்கைகளாகவே இவை அமைந்துள்ளன. மாறாக, இதுபோன்ற ஒரு நிகழ்வே நடைபெறாமல் தடுப்பதுதான் ஓர் அரசின் நிர்வாகத் திறனுக்குச் சான்று. கள்ளச்சாராய மரணங்கள், ஆளும் திமுக அரசுக்கு ஓர் அவப்பெயர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மேலும், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் அரசு நிர்வாகத்தின் தோல்வியும் வெளிப்பட்டுள்ளது. குறிப்பாக 2023இல் செங்கல்பட்டு, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் கள்ளச்சாராய மரணங்கள் நிகழ்ந்த பிறகு, அரசு நிர்வாகம் படித்த பாடம் என்ன? என்கிற கேள்வி அழுத்தமாக எழுகிறது. சென்னை உயர்நீதிமன்றமும் இதைச் சுட்டிக்காட்டியுள்ளது. கள்ளக்குறிச்சியின் மையப் பகுதியிலேயே கள்ளச்சாராயம் விற்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், காவல்துறையின் மதுவிலக்குப் பிரிவினரின் செயல்பாடுகள் விமர்சனத்துக்கு வழிவகுத்திருக்கின்றன.

அரசியல், அதிகார மட்டத்தின் துணையோடுதான் கள்ளச்சாராய விற்பனை நடைபெறுகிறது! ஆட்சிக்கு அவப்பெயரை உண்டாக்கிய இந்த விவகாரத்தை திமுக அரசு தீவிரமாகக் கருதினால், இதிலுள்ள அரசியல் தொடர்புகளை அம்பலப்படுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்போதுதான் அரசின் நடவடிக்கைகளில் பாரபட்சம் இல்லை என்பது வெளிப்படும்.

இன்றைக்கு மது தடையில்லாமல் கிடைத்தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது, அதை அருந்தியவர்கள் மரணமடைவது முடிவுக்கு வரவில்லை. சாராயம் பொதுவான விஷமாகத் தனிநபரை மட்டுமல்ல; ஒட்டுமொத்த சமுதாயத்தையும் செல்லரித்து வருகிறது என்பதுதான் உண்மை. இதனால்தான் தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர்.

மது தங்குதடையின்றிக் கிடைப்பதால் முதன்முறை மது அருந்துபவர்களின் சராசரி வயதும் குறைந்துகொண்டே வருகிறது. மேலும், பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள், பாலியல் தாக்குதல்கள், சாலை விபத்துகள், குற்றச்செயல்கள் ஆகியவற்றுக்கும் மதுபோதைக்கும் நேரடித் தொடர்பு இருப்பது பல முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தற்கொலைக்கு முயலும் ஆண்களில், பத்தில் ஆறு பேர் மதுபோதையில் இருந்ததாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. நெருக்கமான குடும்ப நபர்களால் பெண்கள் வன்முறைக்கு ஆளாகுவது உலக அளவில் **27%** ஆக இருக்கும் நிலையில், இந்தியாவில் அது **35%** ஆக இருப்பதற்கு மதுப் பழக்கமும் ஒரு முக்கியக் காரணம் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

மதுவிலக்கை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ் நாட்டில் நல்லவர்கள் பலரும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். ஆனால், மதுவிலக்கை நடைமுறைப்படுத்து வதில் வேறு பல நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. மதுபானக் கடத்தல், பிற போதைப் பொருள்களின் பயன்பாடு, கள்ளச்சாராய நடமாட்டம் போன்றவை அதிகரிக்கச் சாத்தியம் உண்டு. எனினும், டெங்குவை ஒழிக்க வேண்டுமானால் கொசுப்புழு உருவாகுவதைத் தடுத்தால்தான் முடியும் என்கிற பரப்புரை எவ்வளவு உண்மையோ, அதுபோலவே மது எளிதில் கிடைப்பதைத் தடுக்காமல் மதுவால் ஏற்படும் சமூக,

பொருளாதார, உடல், மனநல பாதிப்புகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதும் சாத்தியமில்லை.

இன்றைய ஆட்சியாளர்களின் முன்னோடிகளால்தான் தமிழ்நாட்டில் மது நுழைந்தது. எனவே, இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ்நாட்டில் மதுவை தடை செய்து தங்கள் மீதுள்ள கறையை துடைத்தெறிய வேண்டும். உடனே மதுவை முழுமையாக ஒழிக்க முடியாவிட்டாலும், படிப்படியாக மதுவை ஒழித்திட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

கள்ளச்சாராயத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு அரசு நிவாரணமாக அளித்துள்ளது. இது மிகத் தவறான முன்னுதாரணமாகும். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்றால் இந்த கொடுமை நிகழ்ந்திட காரணமானவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து, அந்த சொத்துக்களை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கள்ளச்சாராயத்தால் செத்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் அளித்திருக்கலாம்.

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் போலீஸ் நிலையம் அருகிலேயே வெளிப்படையாக கள்ளச்சாராய விற்பனை நடந்து கூட்டம் கூட்டமாக குடிக்கும்போது போலீஸார் கண்ணுக்கு மட்டும் எப்படி தெரியாமல் போனது? தவறுக்கு காரணமானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். பணி நீக்கம், பணி இடமாற்றம் என்பதெல்லாம் சரியான தண்டனை கிடையவே கிடையாது. நல்ல சாராயமோ, கள்ளச்சாராயமோ எல்லாமே மனிதன் நாசமாக போக அடிப்படை காரணமாகும்.

இந்தியா முழுவதும் மதுவிலக்கை கொண்டு வர வேண்டும் என்று இந்திய அரசியல் சாசனம் கூறுகிறது. அரசியல் சாசனம் கூறுவதை அன்றிலிருந்து இன்று வரை இஸ்லாமிய சமுதாயம் உரக்கக் கூறி வருகிறது.

எனவே, தமிழக முதல்வர் தமிழ்நாட்டில் மதுவிலக்கை கொண்டு வருவதோடு, இந்தியா முழுவதும் மதுவிலக்கை கொண்டு வர "இந்தியா கூட்டணி" மூலம் அழுத்தம் கொடுக்க முன் வர வேண்டும். தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் மதுவை ஒழிக்க களத்தில் இறங்கினால் தமிழக முதல்வருக்கு இஸ்லாமிய சமுதாயம் எப்பொழுதும் பக்க பலமாகவும், உறுதுணையாகவும் நிற்கும்.

# இந்தியாவின் 78ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!

சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட நம் முன்னோர்களை இந்த நன்னாளில் நினைவு கூர்வோம்.

**- குர்ஆனின் குரல் குழுமம்.**

## சுதந்திர நாட்டில் என் உடலை அடக்கம் செய்யுங்கள்!

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு அளப்பரியது. இலண்டனில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாட்டில் காந்திஜி, நேருஜி மற்றும் பல தலைவர்களும் கலந்து கொண்ட அந்நிகழ்வில் மவ்லானா முஹம்மது அலீ ஜவ்ஹர் (ரஹ்) அவர்களும் கலந்து கொண்டார்கள். கலந்துரையாடலுக்கு பிறகு இராணுவம் மற்றும் பொருளாதாரம் இரண்டையும் பிரிட்டிஷாரே வைத்துக்கொண்டு சுதந்திரம் தருவதாகவும், இந்தியர்களின் திறமையை பார்த்துக் கொண்டு பின்னர் இரண்டையும் கொடுப்பதாகவும் பேசப்பட்டு சிலர் சம்மதம் தெரிவிக்கும் சூழல் நேர்ந்தபோது, மவ்லானா முஹம்மது அலீ ஜவ்ஹர் (ரஹ்) அவர்கள் எழுந்து இப்படி முழக்கமிட்டார்கள் -

“எங்களுக்கு வேண்டியது முழு சுதந்திரமே! பிரிட்டிஷாரை விட நாங்கள் திறமை மிக்கவர்கள் என்பதை அப்போது புரிந்து கொள்வீர்கள். முழு சுதந்திரம் கொடுக்காவிட்டால் அடிமை இந்தியா வில் நான் காலடி வைக்க மாட்டேன். என் உடல் நலமும் குன்றி வருகிறது. அப்படி நான் இறக்க நேரிட்டால் அடிமை இந்தியாவில் என் உடலை அடக்கம் செய்யாதீர்கள். சுதந்திர நாட்டில் என் உடலை அடக்கம் செய்து விடுங்கள்” என்றார்கள்.

பின்னர் மக்கா சென்று கஃபாவின் திரைச்சீலையை பிடித்துக் கொண்டு இரவு முழுவதும் தன் நாடு முழு சுதந்திரம் பெற வேண்டுமென்று கண்ணீர் மல்க துஆ செய்தார்கள். சிறிது நாட்களிலேயே மரணமடைந்தார்கள். பல சுதந்திர நாடுகள் தங்கள் நாட்டில் அடக்கம் செய்ய வேண்டின. கடைசியாக அந்த புனிதரை புனிதமிக்க அல்அக்ஸா - பைத்துல் முகத்தஸ் வளாகத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

நபிமார்கள் மற்றும் வலிமார்களை வஸீலாவாக ஆக்கி அவர்களின் பொருட்டால், அல்லாஹ்விடம் துஆ செய்வது கூடுமா?

**பூணாவிலிருந்து**
**அன்வர்**

இது கூடும். சுன்னத்தான வழிமுறையுமாகும்.

நபி (ஸல்) அவர்களின் பெற்றோர்களின் இறப்பு எப்போது ஏற்பட்டது?

**நாசுவரிலிருந்து**
**முஹம்மது யூசுப்**

நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பதாக தந்தையும், நபி (ஸல்) அவர்கள் பிறந்து ஆறு வயதை அடைந்த நிலையில் தாயாரும் மரணித்துவிட்டார்கள்.

ஹதீஸை மறுக்கக்கூடியவர்கள் பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**செம்மியமங்கலத்திலிருந்து**
**அப்துல்**

அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் வார்த்தைகள் மீதும் ஈமான் கொள்வது இஸ்லாத்துடைய அடிப்படைகளில் ஒன்றாகும். அல்லாஹ் தன் திருமறையில் குறிப்பிடுவதைப் போல அந்த நபி (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளிப்படக் கூடிய ஒவ்வொரு வார்த்தையும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது தவிர வேறு கிடையாது. எனவே, அப்படிப்பட்ட உயர்தரமான ஹதீஸ்களை மறுப்பது அந்த நபியையே மறுப்பதற்கு சமமாகும். அந்த நபியை மறுப்பவர் நிச்சயமாக முஃமினுடைய இடத்தில் இருக்க முடியாது.

இறைநேசராக ஆகுவதற்கு அளவுகோல் என்ன?

**மண்டகளத்தூரிலிருந்து**
**சிலிண்டர் யூஸுஃப்**

இறைநேசர்களாக யாரெல்லாம் ஆக முடியும் என்பதற்கு நம் முன்னோர்கள் நிறைய கருத்துக்களை சொல்லியுள்ளார்கள். "அல்இஸ்திகாமா" எனும் நூலில் சிறந்த விளக்கம் எழுதப்பட்டுள்ளது. அதாவது, "அல்லாஹ் விரும்புவதை அவரும் விரும்புவார். அவன் கோபப்படுவதை இவரும் கோபப்படுவார்.

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலபாதீ

அவன் வெறுப்பதை இவரும் வெறுப்பார். அவன்யாரைநேசிக் கிறானோ அவரை இவரும் நேசிப்பார். யாரை அவன் விரோதம் கொள்கிறானோ அவனை இவரும் விரோதம் கொள்வார்" இதுவே இறைநேசர் என்பதற்கு சுருக்கமான - ஆழமான - அழுத்தமான விளக்கமாகும். அதன்படி, அவர் தொழுகைகளிலும், ஜமாஅத்துடைய தொழுகை களிலும், தாடியை முறையாக, முழுமையாக வைப்பதிலும் பேணுதல் உள்ளவராக இருக்க வேண்டும்.

எனவே, ஷரீஅத்துடைய கட்டளைகளில் பேணுதலின்றி இருப்பவரும், தொழுகையில் குறிப்பாக, ஜமாஅத்துடைய தொழுகையில் பேணுதலில்லா மல் இருப்பவரும், தாடி வைப்பதில் குறைபாடு செய்ப வரும் நிச்சயமாக இறைநேச ருடைய இடத்தை அடைய முடியாது. மேலும், யாராவது உலகின் இயல்பான சூழ்நிலை களுக்கு மாற்றமான, வழமைக்கு மாற்றமான அல்லது நடக்க முடி யாத ஏதாவது ஒரு காரியத்தை நிகழ்த்திக்காட்டினால், அதனால் மட்டும் அவர் இறைநேசராக ஆகி விட முடியாது. இன்றைய உலகில் அப்படிப்பட்ட காரியங்களை செய் வதாகக் கூறி, நிறைய பேர்கள் தங்களை இறைநேசர்கள் என்றும், பக்தர்கள் என்றும், தாங்களே இறைவனின் நேரடி போதகர்கள் என்றும் கூறிக் கொண்டு மோசடி களில் ஈடுபட்டு கொண்டிருப் பதை நாம் மிகவும் கவனத்தோடு பார்த்துக் கொள்ள வேண்டும். ஷரீஅத்திற்கு மாற்றமான அணு வளவு செயல் ஒருவரிடத்தில் குடி கொண்டிருந்தாலும் அவர் நிச்சயமாக இறைநேசராக ஆக முடியாது.

☛ சிலர் நபிமார்களையும், ஸஹாபாக்களையும் குறை யுள்ளவர்கள் என்றும், தவறு செய்பவர்கள் என்றும் கூறு கிறார்கள். நமது சுன்னத் ஜமாஅத் துடைய கொள்கைப்படி மார்க்கத்தின் நிலைபாடு என்ன?

**மஹாராஷ்டிராவிலிருந்து**
**தீன்**

✍ நபிமார்கள் எல்லாவிதமான சிறிய, பெரிய அனைத்து குற்றங் களிலிருந்தும் பிறந்ததிலிருந்தே பாதுகாக்கப்பட்டவர்கள். அவர் களிடமிருந்து அல்லாஹ்வுக்கு மாற்றமான எந்த குற்றச் செய லும் நடைபெறுவதற்கு அணு வளவும் இடம் கிடையாது. ஷைத்தான் அவர்களை வழிகெடுக்கவும் முடியாது.

ஸஹாபாக்களைப் பொறுத்த வரை அவர்கள் இஸ்லாத்திற்கு முன்பு பாவமான காரியங்களில் ஈடுபட்டிருக்கலாம். அவர்கள் நபி (ஸல்) அவர்களின் திருக்கரத் தால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்கு பின்பு ஸஹாபி என்ற அந்தஸ்தை அடைந்து விட்டார்கள். அவர்கள் அனை வரையும் பற்றி எந்த பாரபட்ச மும் இல்லாமல் அல்லாஹ் தன்

திருமறையில் அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டதாகவும், அவர்கள் அல்லாஹ்வை பொருந்திக் கொண்டதாகவும் பகிரங்கமாக அறிவிப்பு செய்திருக்கின்றான். எனவேதான், என் தோழர்கள் அனைவரும் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் நீங்கள் யாரை பின்பற்றினாலும் நேர்வழியை அடைந்து விடுவீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஒரேயொரு ஹதீஸ் மட்டும் அவர்களின் அளவுகோலுக்கு போதுமானதாகும். அல்ஹம்து லில்லாஹ்!

இந்த அடிப்படையில் நபிமார்களையும், ஸஹாபாக்களையும் குறையுள்ளவர்கள் என்றும், குற்றம் செய்தவர்கள் என்றும் அல்லாஹ், ரசூலுக்கு மாற்றமாக நடந்தவர்கள் என்றும், அல்லாஹ்வின் கோபத்திற்கு சில சமயம் ஆளானவர்கள் என்றும், அவர்களைப் பற்றி தவறாக பேசுவதும், சித்தரிப்பதும் நம் ஈமானை கடுமையாக பாதிக்கக் கூடிய ஹராமான செயல்களாகும். இதுவே அஹ்லுஸ்ஸுன்னத்வல் ஜமாஅத்தின் நிலைபாடாகும்.

☛ ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானுலகில் வாழ்ந்து கொண்டிருப்பது உண்மைதானா?

**மும்பையிலிருந்து**
**மஜீதுத்தீன்**

✍ ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் உலகில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அதே நிலையில் அல்லாஹ்வின் உத்தரவுப்படி வானுலகிற்கு உயர்த்தப்பட்டார்கள். இப்போதும் அங்கு சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்ஷா அல்லாஹ் கியாமத் சமீபிக்கும்போது இந்த உலகிற்கு வருகை தருவார்கள்.

☛ மனித சந்ததிகள் குரங்கிலிருந்து வந்ததாக சிலர் கூறித் திரிவது உண்மையா?

**பழனியிலிருந்து**
**அப்துல் ரஊஃப்**

✍ மனித சந்ததிகள் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களிலிருந்து ஆரம்பமானார்கள். அவர்களோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டவர்கள் என்பதை குர்ஆனில் அல்லாஹ் தெளிவாக குறிப்பிடுகிறான். எனவே, மனிதன் குரங்கு போன்றவற்றிலிருந்து பிறந்தான் என்பது முற்றிலும் ஷரீஅத்திற்கு மாற்றமான கருத்தாகும்.

☛ நபி (ஸல்) அவர்கள் கியாமத் நாளுடைய அடையாளங்கள் என்று குறிப்பிட்டவை என்னென்ன?

**விட்டல்வாடியிலிருந்து**
**ரஃபீக் அன்வர்**

✍ நிறைய அடையாளங்களை நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை பல்வேறு

ஹதீஸ் கிதாபுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவை :

★ கல்வி உயர்த்தப்பட்டுவிடும்.
★ மடமைத்தனம் அதிகமாகி விடும்.
★ விபச்சாரம் பெருகி விடும்.
★ மது பகிரங்கமாகி விடும்.
★ ஆண்கள் குறைந்து விடுவார்கள்.
★ பெண்கள் அதிகமாகி விடுவார்கள்.
★ பொய்யர்கள் பரவி விடுவார்கள்.
★ பெரிய பெரிய பொறுப்புகள் தகுதியில்லாதவர்களிடம் ஒப்படைக்கப்படும்.
★ அமானிதப் பொருட்களை கனீமத் பொருட்களாக கருதி பதுக்கி வைக்கப்படும்.
★ மார்க்கக் கல்வி உலக ஆதாயத்திற்காக கற்கப்படும்.
★ ஆண்கள், பெண்களுக்கு வழிபட்டு, தாய்க்கு மாறு செய்வார்கள்.
★ நண்பர்கள் அருகில் நெருண்டு வரப்பட்டு, தந்தைமார்கள் தூரமாக்கப்படுவார்கள்.
★ பள்ளிவாசல்களில் சப்தமிடுதல் அதிகமாகும்.
★ பாவம் செய்யக்கூடியவர்கள் மக்களின் தலைவர்களாக ஆவார்கள்.
★ சில மனிதர்களின் அட்டூழியங்களுக்கு பயந்து, அவர்கள் கண்ணியம் செய்யப்படுவார்கள்.
★ ஷரீஅத்தில் ஹராமாக்கப்பட்டுள்ள இசை போன்றவைகள் பகிரங்கமாக்கப்படும்.

இதனன்றி, இன்னும் நிறைய அடையாளங்களை நபி (ஸல்) அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

☛ முஸ்லிம்கள் ஹஜ் மற்றும் உம்ராவிற்காக செல்லும்போது அங்கு இருக்கக்கூடிய “ஹஜ்ருல் அஸ்வத்” என்ற கல்லை வணங்குவதாக முஸ்லிம் அல்லாதவர்கள் கூறுகிறார்களே. ஷரீஅத்படி ஹஜ்ருல் அஸ்வத்தின்நிலைபாடுஎன்ன?

**திண்டுக்கல்லிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

✍ ஹஜ்ருல் அஸ்வத்தை முஸ்லிம்கள் யாரும் வணங்குவது கிடையாது. அல்லாஹ் - ரசூலுடைய கட்டளைப்படி அங்கு செல்லக் கூடிய அனைவரும் அதை தொட்டு முத்தமிடுகிறார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு வழிபட்டு நடக்கவேண்டும் என்ற காரணத்தினாலும், அந்த ஹஜ்ருல் அஸ்வத்தின் மீதுள்ள பேரன்பினாலும், அதன் மீது இயல்பாக ஏற்பட்டுள்ள கண்ணியத்தினாலும் முஸ்லிம்கள் அதை முத்தமிடுகிறார்கள். அப்போதும் கூட, சக முஸ்லிம்களுக்கு சிரமம் கொடுக்கக் கூடாதுஎன்றும், அவர்களின்மீது மோதக் கூடாது என்றும், யாரையும் மிதித்து சிரமப்படுத்தக் கூடாது என்றும் நிறைவான

# மணமகள் தேவை

சுன்னத் வாலா, **M.B.B.S.** படித்த,
தமிழ் முஸ்லிம், 27 வயது மணமகனுக்கு,
டாக்டர் **M.B.B.S. / M.D.** படித்த,
தமிழ் முஸ்லிம் **மணமகள் தேவை!**

தொடர்புக்கு; மணமகன் தந்தை :

அல்ஹாஜ் **R.அப்துல் அஜீஸ், M.Sc.,B.Ed.,M.Phil.,**
Teacher, Govt. Hr. Sec. School, தேனி.

செல் : **9976632690**


---


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

வழிகாட்டுதல்களை இஸ்லாம் நமக்கு வழங்கியிருக்கிறது. எனவே, அது ஒரு வணக்கம் அல்ல. மாறாக, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலாகும். அதைப்பின்பற்றுவது முஸ்லிம் சமுதாயத்தின் வழியாகும்.

தொழுகையை முடித்ததற்கு பின்பு முஸல்லாவுடைய ஓர் ஓரத்தை சில சகோதரர்கள் மடக்கி விடுகிறார்கள். அப்படி மடக்காவிட்டால் அதில் ஷைத்தான் தொழுவான் என்றும் கூறுகிறார்கள்.

**கர்நாடகாவிலிருந்து**
**சாகுல் ஹமீது**

அவ்வாறு சொல்வதற்கு மார்க்கத்தில் எந்த அடிப்படையும் இல்லை. எனவே, ஷைத்தான் தொழுவான் என்ற எண்ணத்தோடு, தான் தொழுத முஸல்லாவை மடித்து விடுவது நல்ல செயலாக ஆகாது.

ஸபருடைய மாதத்தில் திருமணம் போன்ற நல்ல காரியங்களை செய்யக்கூடாது என்றும், அப்படி செய்தால் அதில் பாதிப்பு ஏற்படும் என்றும் கூறுகிறார்களே. சரிதானா?

**சென்னையிலிருந்து**
**ஹுமைரா**

அப்படி சொல்வதும், அதன் மீது நம்பிக்கைக் கொள்வதும் சரியான விஷயமல்ல. சில சமயங்களில் அவ்வாறு நம்புவது நம் ஈமானில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

மய்யித் அடக்கப்பட்டவுடன் அந்த இடத்தில்நின்று கொண்டு பாங்கு சொல்வது கூடுமா?

**நாகையிலிருந்து**
**முஸ்தாக் அலி**

அது பற்றி மார்க்கத்தில் எந்த விதமான ஆதாரமும் சொல்லப் படவில்லை.

இஸ்லாத்தில் பெண்கள் பர்தா அணிவது கட்டாயம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அதன்மூலம் பெண்கள் நிறைய சிரமங்களை அனுபவிக்க வேண்டி வருகிறது. அதாவது, வெயில் காலங்களில் மிகக் கடுமையான வியர்வைத் துளி களால்சிரமப்படுகிறார்கள். வெளி இடங்களுக்கு செல்லும்போது, ரோட்டிலும், தெருக்களிலும் நடப்பதற்கு தடுமாற்றம் ஏற்படு கிறது. திருமணம் போன்ற நிகழ்வுகளில் அனைவரும் புர்கா அணிந்திருப்பதால் தன் வீட்டுப் பிள்ளைகளை அடையாளம் காணுவதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு பர்தா அணியும் கட்டாயத்தை கொஞ்சம் மார்க்கம்விட்டுக்கொடுக்குமா?

**தஞ்சையிலிருந்து**
**ஃபாத்திமா ஜான்**

அஸ்தஃஃபிருல்லாஹ்! எப்படிப்பட்ட ஒரு கேள்வியை கேட்டுவிட்டீர்கள்? மார்க்கத்திற்காக நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, நமக்காக மார்க்கத்தை வளைக்க நினைப்பது பெரும் குற்றமாகும்.

ஷரீ அத்ரீதியாக அந்நிய ஆண்களுக்கு நடுவில், கடந்து செல்லக்கூடிய எந்த பெண்களும் பர்தா அணியாமல் கடந்து செல்வதை மார்க்கம் அனுமதிக்கவில்லை. நீங்கள் கூறிய உலக அளவிலான ஒரு சில சிரமங்கள் வெளிப்படையாக இருந்தாலும் கூட, அவற்றுக்கெல்லாம் மாற்று வழிகளை எடுத்துக் கொள்ள முடியும்.

திருமண நிகழ்வுகளில் தன் வீட்டு பெண் பிள்ளைகளை நேரடியாக அடையாளம் காண முடியாத நிலையில், செல்போன் உதவியின் மூலமாக அவர்களை தங்களின் பக்கம் அழைத்துக் கொள்ள முடியும். வீட்டிற்குள் இருக்கும்போது வெயில் காலத்திலும், குளிர் காலத்திலும் புர்கா அணிய வேண்டிய அவசியமில்லை. பெண்கள் காலை முதல் இரவு வரை வெளி தெருக்களில் சுற்றிக் கொண்டேயிருக்க வேண்டிய அவசியமுமில்லை. எனவே, கட்டாய சூழ்நிலையில் வெளியிடங்களுக்குச் சென்றால் மட்டுமே ஓரிரு மணி நேரங்கள் புர்காவை அணிந்து கொள்ள வேண்டும்.

ஆண்களில் கூட சில பேர்கள், ஆடைக்கு மேல் ஆடை அணிந்து செல்லக்கூடிய நபர்கள் வெயில் காலத்திலும் செல்லத்தான் செய்கிறார்கள். வியர்வையை காரணம் காட்டி, எந்த ஆணும் தான் அணிந்திருக்கக்கூடிய சட்டையையும், பனியனையும் கழற்றிக் கொண்டு செல்வது கிடையாது. அரசாங்க காவல்துறை அதிகாரிகள் மிக நீண்ட நேரமாக பேண்ட், சட்டை, பனியன், தொப்பிகளோடு 10-12 மணி நேரங்களும் பணியாற்றி வருவதை நாம் பார்க்கிறோம். எனவே இது போன்ற இலேசான காரணங்களைக் கூறி புர்கா அணிவதை தவிர்க்க முயற்சிப்பதின் விளைவு தான் இன்று முஸ்லிம் சமுதாயம் பொது வெளியில் அதன் சிரமங்களை அனுபவித்து வருவதை பார்க்கிறோம். நிறைய நம்முடைய பெண்கள், தங்கள் அலங்காரங்களை மறைப்பதற்கு பகரமாக அளவுக்கு மீறி அலங்காரங்களை செய்து கொள்வதன் காரணமாக முஸ்லிம் சமுதாயத்தின் மானமும், மரியாதையும் அளவு கடந்து பறிக்கப்படுவதை அன்றாட நம் சமுதாயம் கடந்து வருகின்றது.

எனவே, மார்க்கம் கூறக்கூடிய எந்த விஷயமும் மக்களை சிரமப்படுத்துவதற்காக அல்ல. மாறாக, நம்மையும், நம் வருங்கால சந்ததிகளையும் பாதுகாப்பதற்காகத்தான் அல்லாஹ்வும்-அவனதுதூதரும்இவ்வளவு சட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். முறையாக நாம் அதை பின்பற்றினால் நாமும், நம் சந்ததிகளும் வீணான பித்னாக்களிலிருந்தும், இம்மை மறுமையுடைய எல்லா விதமான அழிவுகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவோம்.

அந்த சட்டங்களை உதாசீனப் படுத்தினால், இம்மை, மறுமை இரண்டிலும் மிகக் கடுமையான கேவலங்களும், வேதனைகளும் நம்மை வந்து சேரும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. அல்லாஹ் நம் சமுதாய மக்களுக்கு முழுமையான விளக்கத்தை தந்தருள்வானாக.

☛ இன்றைய கால சூழ்நிலையில், வட்டியில் சம்பந்தப்படாமல் யாரும், எப்படியும் வாழ முடியாது என்பது போல தெரிகிறதே! ஏனெனில், தொழில் செய்பவன் வங்கியில் கடன் வாங்குகிறான். விவசாயம் செய்பவனும் வங்கியை நாடுகிறான். வீடு, கடைகள் கட்டுபவனும் வங்கியை அணுகாமல் இருக்க முடியவில்லை. சாதாரணமாக கார் வாங்கினால்கூட, வங்கி இல்லாமல் நேரடியாக வாங்க முடிவதில்லை. தன்னிடத்தில் முழு பணமே இருந்தாலும் கூட, அதைக் கொண்டு அவன் தான் நினைத்தப் பொருளை வாங்கினால் அரசாங்கத்திடம் வரவு - செலவு காட்ட வேண்டுமே என்று பயந்து கட்டாயமான வகையில் வங்கியை நாட வேண்டியுள்ளது. அதன் வழியாக ஒவ்வொரு மனிதனும் வட்டியின் பக்கம் இழுத்துச் செல்லப்படுகிறான். மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**ஷேக் ஃபைஜ்**

✍ வட்டி முற்றிலும் தடுக்கப் பட்டது. அது எந்த வகையிலும் மனிதர்களுக்கு அனுமதிக்கப் படவில்லை. அதற்கு ஆயிரம் காரணங்கள் கூறினாலும் மார்க்கம் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. வட்டியில்லாமல் அல்லது வங்கியில் நுழையாமல் வட்டியின் வாசனையை நுகராமல் எதுவும் செய்ய முடியாது என்பதெல்லாம் உலகில் நமக்கு ஏற்படுத்தப்பட்ட ஷைத்தானுடைய முயற்சிகளாகும்.

அல்லாஹ் தன் திருமறை (29 : 69)யில், **"எவர் நம்முடைய மார்க்கத்தில் (செல்ல) முயல்கின்றனரோ அவர்களுக்கு நம்முடைய (நேரிய) வழிகளை திண்ணமாக நாம் காட்டுவோம்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்கிறவர்களுடன் இருக்கிறான்"** என்று கூறுகிறான்.

எனவே, அல்லாஹ் கூறியிருக்கின்ற ஹலாலான வழிகளில் நடக்க வேண்டும் என்று முயற்சிப்பது நமது கடமையாகும். அதை இலேசாக்கி தருவது அல்லாஹ்வின் வேலையாகும். வேலையை துவங்குவதற்கு முன்பே மார்க்கத்தையெல்லாம் பார்த்தால் "நம் வியாபாரங்களை சரியாக நாம் கொண்டு செல்ல முடியாது" என்று நினைத்து எடுத்த எடுப்பிலேயே நமது காலடியை வங்கி வாசல்படியின் மீதுதான் வைக்க நினைக்கிறோம். அல்லாஹ் நம் சமுதாய மக்களுக்கு முழுமையான ஹிதாயத்தையும், மார்க்கத்தை

## உலமாக்களின் உயர்வு!

“உலமாபெருமக்களுக்காக வானிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், தண்ணீரில் வாழக்கூடிய மீன்களும் பாவ மன்னிப்பு தேடுகிறார்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)


வாழ்த்துக்களுடன்....

ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**
**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

முழுமையாக பின்பற்றி நடக்கக் கூடிய நல்ல நஸீபையும் மிக விரைவாக தந்தருள்புரிவானாக.

☛ மாதவிடாய் காலத்தில் மனைவிமார்களோடு சேரக் கூடாது என்று சொல்லப்படு கிறது. ஷரீஅத்தின் சட்டம் என்ன?

**பெரம்பலூரிலிருந்து**
**முஹம்மது ஹக்கீம்**

✍ ஷரீஅத் ரீதியாக அப்படிப் பட்ட நிலையில், மனைவிமார் களோடு சேருவது ஹராமாகும். அப்படி ஒரு வேளை அந்த ஹராமான குற்றத்தை ஒருவர் செய்து விட்டால் உடனடியாக அவர், அல்லாஹ்விடம் தவ்பா செய்ய வேண்டும். அத்துடன் தன்னால் இயன்றளவு அதன் முழுமையான பரிகாரத்திற்காக ஏதாவது ஒன்றை ஸதகாவும் செய்ய வேண்டும்.

☛ புனிதமான குர்ஆன் ஷரீஃப் பழமையடைந்து ஓத முடியாத அளவுக்கு பேப்பர்கள் கிழிந்து விட்டால், அவற்றை என்ன செய்ய வேண்டும்? நெருப்பி லிட்டு எரித்து விடலாமா?

**திருப்பத்தூரிலிருந்து**
**ரைஹானா**

✍ சுத்தமான ஒரு துணியில் சுருட்டி மனிதர்களின் நடமாட்டமில்லாத பகுதியில் கண்ணியமான முறையில் புதைத்துவிட வேண்டும் அல்லது ஓடக்கூடிய தண்ணீரில் விட்டு விட வேண்டும். மேற்கூறப்பட்ட இரண்டு வழிகளையும் செய்ய முடியா விட்டால் மிக நிர்ப்பந்த மான சூழ்நிலையில் அந்த குர்ஆனுடைய புனிதமான காகிதங்களை எரித்து அத னுடைய சாம்பலை புதைத்து விட வேண்டும் அல்லது ஓடும் தண்ணீரிலே தூவ வேண்டும்.

☛ முஹர்ரம் மாதத்தில் ஆஷூரா வுடைய நாளில் பல்வேறு இடங்களில் சில மனிதர்கள் ஊர்வலமாகச் சென்று, தங்களை தாங்களே அடித்துக் கொண்டும், குத்திக் கொண்டும், நோவினைப்படுத்திக் கொண்டும் செல்கிறார்களே. மார்க்கம் என்ன சொல்கிறது?

**நாக்பூரிலிருந்து**
**ஹபீபுர் ரஹ்மான்**

✍ இதுபோன்ற செயல்பாடுகள் அனைத்தும் மார்க்கத்தில் சொல்லப்படாத, மார்க்கத் திற்கு அப்பாற்பட்ட செயல்பாடு களாகும். இதுபோன்ற செயல் களை மார்க்கம் எந்நிலை யிலும் அனுமதிக்கவில்லை.

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

# குருடனாகப் போய் விடாதே!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"எவர் என் நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறாரோ நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கை இருக்கிறது. மறுமை நாளில் அவரை குருடனாக நாம் எழுப்புவோம்.

என் ரப்பே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்? திட்டமாக நான் பார்வை உள்ளவனாகத்தானே இருந்தேன் என அவன் கேட்பான்.

ஆம். நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன. அவற்றை நீ புறக்கணித்தாய். அவ்வாறே இன்று நீ புறக்கணிக்கப்படுகிறாய் என்று அல்லாஹ் கூறுவான்.

இன்னும் இவ்வாறே அவன் தன்னுடைய ரப்பின் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் வரம்பு மீறி விட்டானே; அவனுக்கு நாம் கூலி கொடுப்போம். உறுதியாக மறுமையின் வேதனை கடினமானதும், நிரந்தரமானதுமாகும்.

இவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்தது, இவர்களுக்கு நேர்வழி காட்டவில்லையா? அவர்கள் குடியிருந்த இடங்களில் இவர்கள் நடந்து செல்கின்றனர். நிச்சயமாக இதில் அறிவுடையவர்களுக்கு உறுதியான பல அத்தாட்சிகள் இருக்கின்றன."

- அல்குர்ஆன் (20:124-128)

இந்தக் காலத்தில் ஈமானைப் பாதுகாத்து நல்ல அமல்கள் செய்வதென்பது மிகப் பெரிய சாதனை என்றே கூறலாம்.

அந்த அளவிற்கு நாகரீகம் முற்றி மனிதனுடைய பார்வையை, எண்ணத்தை தீய திசையில் இழுத்துச் செல்லும் காந்தம்போன்ற சூழல்நடக்கிறது.

எங்கும், எதிலும் வியாபார நிலையங்கள், அரசு அலுவலகங்கள், பஸ், லாரி, கார், ஆட்டோ, விமானம் அனைத்திலும் பெண்களின் ஆதிக்கம்

அரை குறை ஆடைகள், காமத்தைத் தரும் உடைகள், பேச்சுகள், பார்வைகள் எல்லாமே ஓர் ஆண் மகனை மிக இலேசான முறையில் சபலத்திற்கு ஆட்படுத்தி விடுகின்றன.

முட்டுக்கால் மறைய முண்டாசு அணிந்தால் போதுமென்ற நிலை கொண்ட மனிதன் முழு ஆடை அணிகிறான்.

கண்களைத் தவிர, இரு மணிக்கட்டைத் தவிர, மற்ற

அவயங்களை முழுமையாக மறைக்க கடமைப்பட்டுள்ள பெண்கள், அரைகுறை ஆடைகளோடு அலைகிறார்கள் என்றால், இக்கொடூர நாகரீகத்திலிருந்து மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது என்பது சிரமம்தான் என்ற போதிலும், இதிலிருந்து மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு தீன் வழியில் தவறாமல் நடப்பது என்பதுதான் உறுதிமிக்க ஈமானாகும்.

விபச்சாரம் செய்யும் போது மனிதன் இறைவனை மறக்கிறான்.

கண்களும், காதுகளும் விபச்சாரம் செய்கின்றன. அப்போதும் மனிதன் இறைவனை மறக்கிறான்.

பொய்பேசும் போதும், திருடும் போதும், வியாபாரத்தில் தில்லு முல்லு செய்யும் போதும் மனிதன் இறைவனை மறக்கிறான்.

தொழுகை நேரம் தவறும் போது மனிதன் இறைவனை மறக்கிறான்.

ஒவ்வொரு தப்பும், தவறும், பாவமும் செய்யும்போதெல்லாம் இறைவனை மறக்கிறான்.

இதுதான் ஈமானின் பலவீனம், ஈமானைப் பாதுகாக்க மனிதன்காடுகாடாகஓடி ஒளியும் காலம் வரும் என்று கூறிய நபி மணி (ஸல்) அவர்களின் வாக்கு நடந்து கொண்டிருக்கிற காலம் இது.

அரசுத் துறையிலிருந்து பிற எல்லா வகை நிலைகளின் மூலமும் ஒரு முஸ்லிமுக்கு தொல்லைகள் வருமானால், அது இவனது வழி தவறிய செயல்களுக்கு உலகத்தில் கிடைக்கிற தண்டனையேயாகும்.

இதைத்தான் அல்லாஹ் என் வசனங்களை புறக்கணித்தாய்; அதனால் குருடனாக எழுப்பியுள்ளேன் என்று கூறுவான்.

மார்க்கத்துக்குள்ளேயே குழப்பங்கள், குழப்பவாதிகள் இருக்கிறார்கள். ஏமாந்தவன் தடம்புரண்டு சென்று விடுகிறான்.

சமுதாயத்தை வழிநடத்த ஒரு குர்ஆன், ஒரு நபி வழி இருக்கும்போது அந்த குர்ஆன் வசனங்களுக்கும், நபிவழிக்கும் தான் விரும்பிய விளக்கமளித்து ஒரு சிறு கூட்டத்தையே வழி தவறியவர்களாக ஆக்கி, இதன் மூலம் உலக ஆதாயங்களை அடைந்து, அதில் பல்வேறு இழிநிலைகளை உண்டாக்கி, அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சவால்கள் விட்டு, துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களைத்தான் நாம் குருடர்களாக எழுப்புவோம் என்று அல்லாஹ் கூறுகிறான்.

தஜ்ஜால் சுவனத்தைக் காட்டுவான். உள்ளே

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

**மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.**

**அலைபேசி : 97156 04495, 95977 25934**

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **55 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு **'ஆலிமா'** பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு **"புதுச் சேர்க்கை"** நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு
**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு "MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST" என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

போனதும் தான் தெரிகிறது இது நரகம் என்று.

இப்போது தவறான வழியை உண்மையான வழி என நம்பிச் செல்வோருக்கு மண்ணறைக்குப் போன பிறகு தான் இது தவறு என்று புரியும்!

திறமையான பேச்சு, திறமையான எழுத்து, திறமையான விவாதம் இந்தத் திறமைகளெல்லாம் வெறும் பேனாமை போன்றதுதான்.

சினிமாவை உண்மை என நம்பி ஒரு கூட்டம் தன் நிலை மறந்து வாழ்கிறார்களே அது போல்தான் இந்த உலகில் நல்லவர்கள் போல் நடிக்கும் திறமைசாலிகளின் நிலை.

பல தலைமுறைகள் அழிக்கப் பட்டதை அறிந்த மனிதன் என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

இன்று நடைமுறையில் பல அத்தாட்சிகள் காணக் கிடைக்கின்றன.

பணத்தை கோடி கோடியாக சேமிக்கிறான். இறுதியில் நாட்டை விட்டு ஓடி விடுகிறான். ஏன்? இவையெல்லாம் ஏமாற்றி சேமிக்கப்பட்டவையாகும். இல்லையென்றால் அத்தனை சுக போகங்களையும் விட்டு விட்டு திடீரென இறந்து விடுகிறான். வாரிசே இல்லாமல் போய் விடுவதுமுண்டு.

இதுபோன்ற பல படிப்பினைகள் நடக்கின்றன. வெள்ளப் பிரளயம் வந்தால் வீடுகள், சொத்துகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்றன.

பார்த்துக் கொண்டிருக்கும் மனிதன் படிப்பினை பெறவில்லையானால் பின்னால் வரப்போகும் தண்டனையை அனுபவிக்க வேண்டியதுதான்!

எதிர்காலம் இன்னும் கடுமையாக இருக்கும். கத்தி மேல் நடப்பதைப் போன்ற காலம் வரும்.

மனிதன் காப்பாற்றப்பட வேண்டுமானால், ஈமானை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். எப்படி புதுப்பிப்பது? தவறாமல் பள்ளிக்குப் போக வேண்டும். ஜமாஅத்தாக தொழ வேண்டும்.

நேரம் கிடைக்கும்போது என்பதில்லாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி பொருள் உணர்ந்து குர்ஆனை ஓத வேண்டும்.

ஜகாத்தை சரியாக கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். தர்மங்களை தவறாமல் தர வேண்டும். அது குறைவாக இருப்பினும் சரியே!

எக்காரணத்தைக் கொண்டும், எதற்காகவும் பொய் பேசக் கூடாது.

தவிர்க்க முடியாமல் போய் விட்டது என்று சொல்லாமல் ஹராம்களை செய்வதும் கூடவே கூடாது.

# ஒடுக்கத்து புதன்!

அல்லாஹ் படைத்த நாட்களில், நேரங்களில் சில நாட்கள் அல்லது சில நேரங்கள் சிறப்புக்குரியவையாக மார்க்கரீதியாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதே சமயம் எந்த நாளையும் அல்லது எந்த நேரத்தையும் குறித்து அது அனைவருக்கும் கெட்ட நேரம் என்றோ கெட்ட நாள் என்றோ நம்புவது மார்க்கத்தில் அறியப்படாத ஒன்றாகும். மக்களிடம் இருக்கும் நடைமுறைகள் அவை மார்க்க நடைமுறைக்கு உட்பட்டவையா? அல்லது அப்பாற்பட்டவையா? என்பதை ஆராய்ந்து நல்லதை எடுத்தும், அல்லதை அகற்றியும் நடந்து கொள்வது தான் சரியானதாகும்.

மக்களிடம் இருக்கும் அனைத்து பழக்கங்களையும் பாரம்பரியம் என்ற பெயரில் குர்ஆன், ஹதீஸில் ஆதாரத்தை தேடிப்பிடித்து தொடர்பில்லாத ஆதாரங்களின் மூலம் வலுக்கட்டாயமாக நியாயப்படுத்த வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. உலகில் முஜத்தித் - சீர்திருத்தவாதி என்று அறியப்படும் நல்லவர்களின் முன்னோர்களின் நடைமுறை அப்படியிருக்கவில்லை என்பதை சரித்திரம் படிப்பவர்கள் அறியாமல் இருக்க முடியாது.

ஸஃபர் மாதத்தில் வரக்கூடிய கடைசி புதன்கிழமை தொடர்பாக தமிழ் பேசும் தமிழ் மக்களிடம் மட்டுமல்ல, தமிழகத்தைத் தாண்டியும் வித்தியாசமான கொள்கை இருந்து வருகிறது. ஒருசிலர் ஒடுக்கத்து புதனை சந்தோஷமான நாளாகக் கொண்டாடுகின்றனர். அன்றைய தினம் பூங்காக்களுக்கும், சுற்றுலாத் தலங்களுக்கும் செல்வதை வழமையாகக் கொண்டிருக்கின்றனர். பச்சைப் புற்களை மிதிப்பதை நன்மையான காரியமாகக் கருதுகின்றனர். அந்த புதன்கிழமையில் தான் நபி (ஸல்) அவர்கள் நோயிலிருந்து சுகம் பெற்றார்கள். வெளியில் சென்றார்கள் என்று அவர்களுடைய இந்த நடைமுறைக்குக் காரணம் கூறுகின்றனர்.

உண்மையிலேயே அப்படியிருந்தாலும் கூட அது இவர்களுடைய இந்தச் செயல்களுக்கு ஆதாரமாக ஆக முடியாது. ஆனால், நபி (ஸல்) அவர்கள் கடைசி புதன்கிழமை சுகம் பெற்றார்கள் என்பதற்கான எந்த ஆதாரமும் கிடையாது. அதற்கு மாற்றமாக அந்த தினத்தில் தான் நோய்வாய்ப்பட்டார்கள் என்பதற்கான சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன.

ஒடுக்கத்து புதனில் மகிழ்ச்சிகரமாக வெளியே சென்று சுற்றுலாத்தலங்களில் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டாட வேண்டுமென்பது யூதர்களின் கலாச்சாரம் என்பதற்கான ஆதாரங்களும் காணக் கிடைக்கின்றன. நபி (ஸல்) அவர்களுக்கு வியாதி ஏற்பட்டதால் யூதர்களுக்கு சந்தோஷமாக இருந்தது. அந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டம் விபரமறியா இந்தியர்(முஸ்லிம்)களிடமும் தொற்றிக் கொண்டது. என்று ரஷீத் அஹ்மத் கங்கோஹி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

சூரிய வருடத்தின் கடைசி புதன்கிழமை ஈரானில் பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கடைசி புதன்கிழமையின் சடங்குகள் யூதர்கள் மற்றும் ஈரானிய நெருப்பு வணங்கிகளின் கலாச்சாரமாக இருந்து அது இந்தியாவிலும் நுழைந்து விட்டது என்று தாயிரா மஆரிஃபெ இஸ்லாமிய்யா (பஞ்சாப்)வில் கூறப்பட்டுள்ளது. (இஸ்லாமீ மஹினோங் கேஃபஸாயில்) மற்றும் சிலர் அந்த நாளை துக்க நாளாகவும் பீடைபிடித்த நாளாகவும், அபசகுனம் கொண்ட நாளாகவும் கருதுகின்றனர். ஒடுக்கத்து புதனன்று தாவீஸ் எழுதி கரைத்துக் குடிக்கின்றனர். அந்த நாளில் நபி (ஸல்) அவர்கள் நோயுற்றார்கள் என்பதை தங்களுடைய நம்பிக்கைக்கு காரணமாகக் கொண்டுள்ளனர். ஆனால், நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபித்தோழர்களும், அவர்களைப் பின்பற்றி வந்த நல்லவர்களும் இப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததைப் பார்க்க முடியவில்லை.

நோய் உண்டாவது பாவ மன்னிப்புக்காகவும், அந்தஸ்து உயர்வுக்காகவும் இருக்கும் என்பது தான் நபிமொழிகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் தகவலாகும். நபி (ஸல்) அவர்கள் பாவமற்றவர்கள் என்பதால் அவர்களுடைய அந்தஸ்து உயர்வதற்கான காரணமாகத் தான் அதைப் பார்க்க வேண்டும்.

ஹள்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள். நான் நபி (ஸல்) அவர்களுக்கு வியாதி ஏற்பட்ட சமயம் சென்றேன். என்னுடைய கையால் தொட்டுப்பார்த்து விட்டு 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்கு கடுமையான காய்ச்சல் அடிக்கிறது' என்று கூறினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் இருவருக்கு ஏற்படும் காய்ச்சல் எனக்கு (ஒருவருக்கு) ஏற்பட்டிருக்கிறது' என்று கூறினார்கள். அப்படியானால் 'தங்களுக்கு இருமடங்கு கூலி கிடைக்குமே!' என்று கூறினேன். நபி (ஸல்) அவர்களும் 'ஆம்' என்று கூறிவிட்டு 'முஸ்லிமுக்கு வியாதி

ஏற்பட்டால் மரம் இலைகளை உதிர்த்துவிடுவது போல் அல்லாஹ் அவருடைய பாவத்தை நீக்கிவிடுகிறான்" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்லிம் - 6724)

வியாதியின் சமயத்தில் நபி (ஸல்) அவர்களிடம் நபித்தோழர்கள் நேரடியாக நடந்து கொண்ட விதம் இதுதான். இப்படிப்பட்ட நிலையில் நபி (ஸல்) அவர்களுக்கு வியாதி ஏற்பட்ட கிழமையை கெட்ட சகுனமாகக் கருதுவதும், மார்க்கத்திற்கு முரணான நம்பிக்கைகளை கொண்டிருப்பதும் எப்படி ஏற்புடையதாக ஆக முடியும்?

உண்மையில் ஸஃபர் மாதத்தை துர்க்குறியாகக் கருதுவது அய்யாமுல் ஜாஹிலிய்யா எனும் மௌட்டீக காலத்து அனுஷ்டானமாகும். எனவேதான், நபி (ஸல்) அவர்கள் "ஸஃபர் மாதத்தை (அபசகுனமாகக் கருதுவது) ஏற்புடையதல்ல" என்று எச்சரித்துள்ளார்கள்.

புதன்கிழமை தீங்குள்ள துர்பாக்கியமான நாளாகும் என்ற ஒரு நபிமொழியையும் ஸஃபர் மாதத்தின் ஒடுக்கத்து புதனுக்கு ஆதாரமாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் ஒவ்வொரு புதன்கிழமையும் கெட்ட நாளாகவும், அபசகுனமாகவும் கருதப்பட வேண்டும். அப்படி யாரும் கருதிட முடியாது.

எல்லாவற்றையும் விட மேலாக ஒரு நாள் கெட்ட நாள் என்று நம்புவது அகீதா எனும் நம்பிக்கை சார்ந்த விஷயமாகும். அப்படிப்பட்ட தகவலுக்கு உறுதியான ஆதாரம் இருக்க வேண்டும். ஆனால், இந்த நபிமொழியின் அறிவிப்பாளர் வரிசையைக் கவனித்து பார்த்தால் அது முற்றிலும் பலகீனமான அறிவிப்பாகும். இமாம் ஸகாவீ (ரஹ்) அவர்கள் இதுஎந்த அடிப்படையுமில்லாத (மிகவும் பலகீனமான) அறிவிப்பாகும், என்றும் இந்தக் கிழமையின் சிறப்பு மற்றும் இகழ்வு தொடர்பாக வரும் அனைத்து நபிமொழிகளும் பலகீனமானவையாகும் என்றும் கூறியுள்ளார்கள்.

(நூல் : அல்லும்ஃலுஉல் மர்ஸூஃஃஃபீமா லா அஸ்ல லஹூ)

ஒரு குறிப்பிட்ட கிழமையை துர்க்குறியானது, அபசகுனமானது என்று கருதுவது மார்க்கத்தின் அடிப்படைக்கே முரணானதாகும். அல்லாஹ் படைத்த எந்த நேரத்தையும் கெட்ட நேரம் என்று சொல்வதற்கு மார்க்கம் யாருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. எந்த நேரமும் கெட்ட நேரமில்லை.

ஒருவர் தீமையிலும், பாவத்திலும் கழிக்கும் நேரம் தான் அவருக்குப் பாதகமானதாக தண்டனையைப் பெற்றுத் தருவதாக அமையும். எனவேதான், இறை தண்டனை இறங்கும் நாளை துர்க்குறியான நாள் என்று குர்ஆன் குறிப்பிடுகிறது.

“நிலையான துர்பாக்கியமுள்ள நாளில் அவர்களுக்கு எதிராக கடும் புயல் காற்றை அனுப்பி வைத்தோம்” (அல்குர்ஆன் - 54:19) என்று ஆது சமூகத் தாருக்கு வேதனை இறக்கப் பட்ட நாள் பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

இதற்கு பொதுவாக, அந்த நாள் துர்பாக்கியமுள்ள நாள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. யாருக்கு வேதனை இறங்கியதோ அவர்களுக்குத் தான் துர்பாக்கியமும், தண்டனையும் வந்து சேரும். அதே தினம் ஹூத் (அலை) மற்றும் அவர்களை நபியாக ஏற்றுக்கொண்ட இறை நம்பிக்கையாளர்களுக்கு நற்பாக்கியமுள்ள நாளாகவும், நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும் நாளாகவுமே இருந்தது. ஏனெனில் எதிரிகள் அந்த தினத்தில் தான் அழிக்கப்பட்டார்கள். ஹூத் (அலை) மற்றும் முஃமின் களுக்கு இந்த நாள் நற்பாக்கிய முள்ளதாக இருந்தது என்ற கருத்தை இமாம் குர்துபீ (ரஹ்) அவர்கள் தங்களுடைய தஃப்ஸீரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

வேதனை இறங்கிய நாள் உலகமக்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வாரமும் அது கெட்ட நாளாகவும், அபசகுனமாகவும் கருதப்பட வேண்டும் என்றால் யுகமுடிவுநாள் வரை எந்த நாளும் யாருக்கும் நல்ல நாளாக இருக்க முடியாது. ஏனெனில், குர்ஆன் மற்றொரு இடத்தில் ஆது சமூகத்தாருக்கு ஏழு இரவுகளும், எட்டு பகல்களும் வேதனை இறங்கியதாகக் கூறுகிறது. அப்படியானால், வாரத்தின் எந்த நாளும் நல்ல நாள் இல்லை என்று சொல்ல முடியுமா?

அல்லாமா ஆலூஸீ (ரஹ்) அவர்கள் “நீ சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் எல்லா நாட்களிலும் மாபெரும் சம்பவங்கள் (நல்லதும் கெட்டதுமாக) நடந்திருப்பதைப் பார்க்க முடியும். வேறெதையும் நீ பார்க்க வேண்டாம். ஆது சமூகத்தாரின் தண்டனைச் சம்பவமே போதுமான ஆதாரமாகும். வாரத்தின் எல்லா நாட்களிலும் வேதனை இறங்கியதாக குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் தண்டனை இறங்கிய நாள் தான் துர்பாக்கியம் என்றால் துர்பாக்கியம்இல்லாதநாள் என்று எந்த நாள் இருக்கிறது? என்பதை உன்னால் சொல்ல முடியுமா?” என்று கேட்கிறார்கள்.

(நூல்: ரூஹுல் மஆனீ)

யார் சுபுஹ் தொழுகைக்காகச் செல்கிறாரோ அவர் ஈமானுடைய கொடியுடன் செல்கிறார். யார் அதிகாலையில் கடைவீதிக்குச் செல்கிறாரோ அவர் ஷைத்தானுடைய கொடியை ஏந்திச் செல்கிறார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸும் இங்கு

87 வருட பாரம்பரியம்

## ஆடைகளும் கலாச்சாரமும்

# நான்கு தலைமுறைகளாய்



மனசெல்லாம் மஹாராஜா... ®

# மஹாராஜா

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு
தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்
இராமநாதபுரம்

நினைவுகூரத் தகுந்ததாகும். அவரவருடைய அமலைக் கொண்டு தான் நல்ல விளைவும் கெட்ட விளைவும் ஏற்படுகிறது, என்பது நபிமொழி சொல்லித் தரும் பாடம். சுபுஹ் தொழுதால் அந்த நாள் முழுவதும் அவர் ஈமானுடைய கொடியின் கீழ் இருக்கிறார். அப்படி சுபுஹ் தொழாமல் வியாபாரத்திற்குச் சென்றுவிட்டால் வியாபாரம் ஹலாலாக இருந்தாலும் சுபுஹ் தொழுகையை விட்டதால் அவருடன் அந்த தீங்கும், துர்பாக்கியமும் இருந்து கொண்டே இருக்கும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட கிழமையையோ குறிப்பிட்ட மாதத்தையோ பீடை பிடித்த தாக நம்பிக்கைக் கொள்வது மார்க்கத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்து விடும். உண்மையில் புதன் கிழமை புதன் கோளின் ஆதிக்கத் தில் வந்து அது துர்பாக்கியமான நாளாக ஆகிவிடும் என்று சொல் வது ஜோஸியக்காரர்களும், நட்சத்திரக் கணக்கர்களும் சொல்லக்கூடிய கருத்தாகும் என்று ஃபைளுல் கதீர் ஷரஹ் ஜாமியிஸ் ஸகீர் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இப்படியொரு நம்பிக்கைக்கும், இஸ்லாத்திற் கும் எந்தத் தொடர்பும் இல்லை.

புதன் கிழமை பற்றி நபி மொழிகளில் பல நற்செய்தி களையும் காணமுடியும். நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஃபத்ஹில், திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களாக துஆ செய்தார்கள். ஆனால், மூன்றாவது நாளாகிய புதன் கிழமையில் தான் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஹதீஸை அறிவிக்கும் நபித்தோழராகிய ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் எப்பொழுது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டாலும் புதன்கிழமை யைத் தேர்ந்தெடுத்து குறிப் பிட்ட அந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்பவர் களாக இருந்தார்கள். அந்த துஆ ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் கூறுகிறார்கள்.

(நூல்: அல்அதபுல் (முஃப்ரத்- புகாரி - ரஹ்)

## அல்லாஹ் வழங்கும் பிரதிபலன்!

"உயர்ந்தோன் அல்லாஹ் கூறுகின்றான் : இறை நம்பிக்கையுள்ள என் அடியார், அவருக்குப் பிரியமான ஒருவரது உயிரை நான் கைப்பற்றிவிடும்போது நன்மையை நாடிப் பொறுமை காப்பாரானால், சொர்க்கமே அவருக்கு நான் வழங்கும் பிரதிபலனாக இருக்கும்" என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

# மூன்று... மூன்று... மூன்று...

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لِيَسْتَأْذِنكُمُ الَّذِينَ مَلَكَتْ أَيْمَانُكُمْ
وَالَّذِينَ لَمْ يَبْلُغُوا الْحُلُمَ مِنكُمْ ثَلَاثَ مَرَّاتٍ

**"இறைநம்பிக்கையாளர்களே! உங்களுடைய அடிமைகளும், உங்களில் பருவம் எய்தாத (சிறு)வர்களும் (நாளொன்றுக்கு) மூன்று தடவைகளில் உங்களிடம் (வருவதனால்) அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். - அல்குர்ஆன் (24 : 58)**

இஸ்லாமிய மார்க்கம் மூன்று முறை என்பதற்கு ஒரு முக்கியத் துவம் தருகிறது. நம்முடைய பழக்கங்களிலும் மூன்று தடவை, மூன்றுவரை என்பதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அதாவது முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என தேர்வின் மதிப்பெண்களில் மூன்று வரைக்கும் ஒரு மதிப்புண்டு. ஆனால், நான்காவதுக்கு அந்த மதிப்பு இருப்பதில்லை. மேலும், போட்டிகளில் முதல் பரிசு தங்கம், இரண்டாம் பரிசு வெள்ளி, மூன்றாம் பரிசு வெண்கலம் என மூன்று வரைக்கும் பரிசுகள் உண்டு. நான்காவதாக வந்தவருக்கு எந்த பரிசும் கொடுக்கப்படுவதில்லை. அவரை உலகம் கண்டு கொள்வதுமில்லை.

## எச்சரிக்கை

அல்லாஹ், தமது தூதர் ஹள்ரத் மூசா (அலை) அவர்களை நோக்கி, "நீங்கள் கிள்ரு (அலை) அவர்களிடம் சென்று சில விஷயங்களை கற்றுக்கொள்ளுங்கள்" என்றான். பிறகு மூசா (அலை) அவர்கள் கிள்ரு (அலை) அவர்களை சந்தித்து, "நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்" என்று கூறினார்கள். அதற்கு கிள்ரு (அலை) அவர்கள், "என்னுடன் இருப்பதற்கு உங்களால் முடியாது" என்றார்கள். மூசா (அலை) அவர்கள் "இல்லை (முடியும்)" என்று கூறினார்கள். அப்போது கிள்ரு (அலை) அவர்கள், "நீங்கள் என்னுடன் இருப்பதாக இருந்தால் எந்த விஷயத்தைப் பற்றியும் நானாக விபரம் சொல்லாதவரையில் நீர் என்னிடம் அதைப் பற்றி கேட்கக்கூடாது" என்று கூறினார்கள்.

பிறகு அவ்விருவரும் கடலோரமாக சென்று

கொண்டிருந்தபோது, அங்கு ஒரு படகைக் கண்டு அதில் ஏறினர். அந்த படகில் பயணித்துக் கொண்டிருக்கும் போதே திடீரென கிள்ரு (அலை) அவர்கள் அந்த படகில் கோடாரியால் ஒரு துவாரமிட்டார்கள். இதைக்கண்ட மூசா (அலை) அவர்கள் அதிர்ச்சியுற்று, என்ன காரியம் செய்து விட்டீர்கள்? என்று ஆவேசமாக கேட்டார்கள்.

கிள்ரு (அலை) அவர்கள் “நான் என்ன செய்தாலும், ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்கக் கூடாது என்று கூறிய நிபந்தனையை மறந்துவிட்டீர்கள் போலும்!” என்று எச்சரித்தார்கள்.

மூசா (அலை) அவர்கள், “மன்னிக்கவும்; இனிமேல் எந்த கேள்வியும் கேட்கமாட்டேன்” என்றார்கள்.

அவ்விருவரும் அந்த படகிலிருந்து இறங்கி, ஒரு நகரத்திற்குள் நுழைந்தனர். அப்போது கிள்ரு (அலை) அவர்கள் அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் பிடித்து கழுத்தைத் திருகி கொன்று விட்டார்கள்.

இதைக்கண்ட மூசா (அலை) அவர்கள் அதிர்ச்சியுற்று, “என்ன காரியம் செய்து விட்டீர்கள்?” என்று ஆவேசமாக கேட்டார்கள்.

கிள்ரு (அலை) அவர்கள் “நான் என்ன செய்தாலும், ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்கக்கூடாது என்று கூறிய நிபந்தனையை மறந்துவிட்டீர்கள் போலும்!” என்று இரண்டாவது தடவையாக எச்சரித்தார்கள்.

மூசா (அலை) அவர்கள், “மன்னிக்கவும்; இனிமேல் எந்த கேள்வியும் கேட்கமாட்டேன்” என்றார்கள்.

பிறகு அவ்விருவரும் அங்கிருந்து பயணித்து மற்றொரு ஊருக்கு வந்துசேர்ந்தனர். அப்போது அவ்விருவருக்கும் கடுமையாக பசியெடுத்து விட்டது. அந்த ஊர் மக்களிடம் உணவு கேட்டார்கள். யாரும் உணவு தரவில்லை. பிறகு அங்கிருந்து புறப்பட்டு அந்த ஊர் எல்லைக்கு வந்தபோது, அங்கு ஒரு வீட்டின் சுவர் இடிந்து விழும் நிலையில் இருந்தது. அப்போது கிள்ரு (அலை) அவர்கள் மூசா (அலை) அவர்களை துணைக்கு வைத்துக் கொண்டு மண்ணைக் குழைத்து அந்த வீட்டை செப்பனிட்டு முடித்தார்கள்.

அப்போது மூசா (அலை) அவர்களுக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்து விட்டது. “இது வேடிக்கையாக இருக்கிறது. இந்த ஊர் மக்களிடம் நாம் பசிக்கு உணவு கேட்டோம். அதைப் பற்றி அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை. அவர்கள் மீது உங்களுக்கென்ன அவ்வளவு அக்கறை ஏற்பட்டு

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும். பஸ், டிரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்: 9994254304

விட்டது?" என்று சற்று ஆவேசமாக கேட்டார்கள்.

கிள்ரு (அலை) அவர்கள் "நான் என்ன செய்தாலும், ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்கக்கூடாது என்று கூறிய நிபந்தனையை மறந்து விட்டீர்கள் போலும்!" என்று மூன்றாவது தடவையாக எச்சரித்து விட்டு, இதுவரை நான் செய்து வந்த அந்த மூன்று செயல்பாடுகளுக்கும் இதுதான் விளக்கம் என்று சரியான விளக்கத்தைக் கூறி விட்டு, இனிமேல் நாம் இருவரும் ஒன்றாக பயணிக்க இயலாது என்று கூறி, தன்னை விட்டும் பிரிந்து சென்று விடுமாறு கூறி, மூசா (அலை) அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு அவ்விருவரும் ஒன்றாக பயணிக்கவில்லை. இந்த வரலாற்று நிகழ்வைப்பற்றி திருகுர்ஆனின் அல்கஹ்ஃப் அத்தியாயத்தின் 65 முதல் 82 வரையுள்ள வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

எந்த ஒன்றைப்பற்றியும் மூன்று தடவை எச்சரித்த பிறகுதான், கண்டிக்கவோ தண்டிக்கவோ வேண்டும். எடுத்த எடுப்பிலேயே தடால் புடால் என்று நடவடிக்கை எடுப்பது சரியல்ல என்றுரைக்கிறது இந்த நிகழ்வு.

இன்ஷா அல்லாஹ்
அடுத்த இதழ்
**மீலாது சிறப்பிதழ்**
உங்களை பிரமிப்பில் ஆழ்த்த
**குர்ஆனின் குரல்**
தயாராகி வருகிறது.
**படிக்கத் தவறாதீர்கள்!**

## இறுகக் கட்டியணைத்தார்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹிரா குகையில் தனித்திருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். (அப்போது ஒருநாள்) வானவர் (ஜிப்ரீல்) என்னைப் பிடித்து நான் திணறும் அளவிற்கு இறுகக் கட்டியணைத்தார். பிறகு என்னைவிட்டுவிட்டு "ஓதுவீராக! என்றார். அப்போது "நான் ஓதத் தெரிந்தவனில்லையே!" என்றேன். உடனே அவர் இரண்டாம் தடவையாக என்னைப் பிடித்து நான் திணறும் அளவிற்கு இறுகக் கட்டியணைத்தார். பிறகு என்னை விட்டு விட்டு "ஓதுவீராக" என்றார். அப்போதும் "நான் ஓதத் தெரிந்தவனில்லையே!" என்றேன். உடனே அவர் என்னைப்

பிடித்து மூன்றாவது தடவை யாக கட்டித் தழுவினார்.

பின்னர் என்னை விட்டு விட்டு, "படைத்த உம்முடைய இறைவனின் (திருப்)பெயரால் ஓதுவீராக! அவனே மனிதனை 'அலக்'(அட்டையைப்போன்று ஒட்டிப்பிடித்து தொங்கும் கருவில்) இருந்து படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி" எனும் இறை வசனங்களை (96:1-5) அவர் ஓதினார்.

பிறகு (அச்சத்தால்) இதயம் படபடக்க அந்த வசனங்களுடன் நான் (எனது மனைவி) கதீஜா (ரளி) அவர்களிடம் வந்து, "எனக்குப் போர்த்தி விடுங்கள்; எனக்குப் போர்த்திவிடுங்கள்" என்றேன். அவ்வாறே அவர் களும் போர்த்திவிட அச்சம் அகன்றது.

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : புகாரீ - 3)

அல்லாஹ், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் கொடுத்தனுப்பிய (பரக்கத் எனும்) அருள்வளம் நிறைந்த ஞானம் முதல் தடவை கட்டியணைத்தபோது மூன்றில் ஒரு பங்கு கிடைத்தது. இரண்டாவது தடவை இறுகக் கட்டியணைத்தபோது இறைவ னின் அருள்வளம் நிறைந்த ஞானம் மூன்றில் இரண்டு பங்கு கிடைத்தது. மூன்றாவது தடவை கட்டியணைத்தபோது இறைவனின் அருள்வளம் நிறைந்த ஞானம் முழுமை யாக கிடைத்துவிட்டது.

அதாவது பசியும் தாகமும் உள்ளவனுக்கு போதிய உணவு, பானம் கிடைத்தால் தான் பசி முழுமையாகத் தீரும்.

## பொது அறிவிப்பு

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர்(ரளி) அவர்கள்கூறியதாவது: நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வம் கிடைக்கப்பெற்றால், போர்ச் செல்வம் கிடைக்கப்பெற்ற செய்தியைக் கூறி மக்களை அழைக்கும்படி பிலால் (ரளி) அவர்களுக்கு உத்தரவிடுவார் கள். மக்களும் (நபி (ஸல்) அவர் களிடம் இருக்கும்) தங்களின் போர்ச் செல்வத்தை பெற்றுக் கொள்ள வருவார்கள். (நபி (ஸல்) அவர்கள் முன்னிலை யிலேயே அப்போர்ச் செல்வங் களை மக்களுக்கு) பகிர்ந்தளிப்பார்கள்.

அதற்கு (ஒரு போரில் இவ்வாறே போர்ச் செல்வங் களை மக்களுக்கு பங்கிடப் பட்டதற்கு)ப் பின்னால் ஒருவர் ஒட்டக முடிக்கற்றை ஒன்றைக் கொண்டுவந்து, "நாயகமே! இது நீங்கள் எங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்த போர்ச் செல்வத்திலிருந்து (பங்கிடும் முன்) எடுத்தது" என்று

கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "பிலால் (ரளி) அவர்கள் மூன்று தடவை (போர்க்களத்தில் எடுக்கப்பட்ட பொருள்களை கொண்டு வாருங்கள்! என்று) உரக்கக் குரல் கொடுத்தாரே அதை செவியேற்றாயா?" என்று கேட்டார்கள். அவர், "ஆம், செவியுற்றேன்" என்று பதிலளித்தார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அப்படியானால் அந்த முடிக் கற்றையை நீ என்னிடம் கொண்டு வருவதை தடுத்தது எது?" என்று கேட்டுவிட்டு, "நீ இந்த முடிக்கற்றையை மறுமை நாளில் கொண்டு வருவாய். அப்போதும் அதை உன்னிடமிருந்து நான் ஏற்கமாட்டேன்" என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத்-2337)

ஹள்ரத் அபூகத்தாதா (ரளி) அவர்கள் கூறியதாவது : ஹுனைன் போரில் நான் ஓர் இணைவைப்பாளனைக் கொன்றுவிட்டேன். போர் முடிந்த பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்து கொண்டு, "போரில் எதிரி ஒருவனைக் கொன்றதற்கான ஆதாரம் யாரிடம் இருக்கிறதோ அவருக்கே அந்த எதிரியின் (ஆடை, ஆயுதம் போன்ற) உடைமைகள் உரியவை" என்று கூறினார்கள். அப்போது நான் எழுந்து நின்று, "(நான் எதிரி ஒருவனை வீழ்த்தியதற்கு) எனக்குச் சாட்சியம் கூறுபவர் யார்?" என்று கேட்டுவிட்டு உட்கார்ந்துகொண்டேன்.

நபி (ஸல்) அவர்கள் (மீண்டும்) "போரில் எதிரி ஒருவனைக் கொன்றதற்கான ஆதாரம் யாரிடம் இருக்கிறதோ அவருக்கே அந்த எதிரியின் (ஆடை, ஆயுதம் போன்ற) உடைமைகள் உரியவை" என்ற இ(ந்த வாசகத்)தை இரண்டாம் தடவை கூறினார்கள். உடனே நான்(மறுபடியும்)எழுந்து, "(நான் எதிரி ஒருவனை வீழ்த்தியதற்கு) எனக்குச் சாட்சியம் கூறுபவர் யார்?" என்று கேட்டு விட்டு, உட்கார்ந்து கொண்டேன்.

பிறகு மூன்றாவது தடவையும் நபி (ஸல்) அவர்கள் முன்பு கூறியதைப் போன்றே கூறினார்கள். உடனே நான் எழுந்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் (என்னைப் பார்த்து), "அபூகத்தாதா உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்கள். நடந்ததை நான் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தேன். அப்போது மக்களில் ஒருவர் "நாயகமே! இவர் சொல்வது உண்மைதான்" என்றார். பிறகு கொல்லப்பட்டவனிடம் இருந்து எடுக்கப்பட்டவை (உடைமைகள்) எனக்கு வழங்கப்பட்டன.

(நூல் : அபூதாவூத்-2342)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் போர்க்களத்தில் எடுக்கப்பட்ட பொருள்களை

# நிரந்தர நன்மை பெற உதவிடுவீர்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

வேலூர் மாவட்டம் அரியூரில் அமைந்துள்ள **ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியில்** பயிலும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்கும் விதத்தில் அருகிலுள்ள காலி இடம் **(ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்)** விலை பேசப்பட்டு அதை வாங்குவதற்காக கடந்த ஓராண்டாக தங்களைப் போன்ற நல்லுள்ளங்களிடம் உதவி வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கிணங்க அவர்கள் செய்த உதவிகளின் மூலம் பாதிக்கும் மேற்பட்ட தொகை **(80 இலட்சம்)** சேர்ந்து விட்டது. அல்ஹம்துலில்லாஹ்! அந்த மேன்மக்களின் உதவிகளை அல்லாஹ் கபூல் செய்வானாக! அவர்களின் உயிர், பொருள், செல்வத்தில் அல்லாஹ் பரக்கத் செய்வானாக! இடத்தின் உரிமையாளரிடம் ரமளான் மாத இறுதிக்குள் பணம் தருவதாக வாக்களித்திருந்தோம். ஆனால் முழுத் தொகையும் வசூல் ஆகாத காரணத்தால் மேற்கொண்டு சில மாதங்கள் தவணை பெறப்பட்டது. வரும் செப்டம்பருடன் அந்தத் தவணையும் முடிவடைய உள்ளது. எனவே குறைந்த கால அவகாசமே உள்ளதால் மீதமுள்ள **60 இலட்சம் ரூபாய்களை** நாங்கள் கொடுப்பதற்கு உதவிடுமாறு மீண்டும் தங்களிடம் உதவி கோருகிறோம்.

தங்களின் இந்த உதவியால் கியாமத்து நாள் வரை தங்களுக்கும், தங்கள் பெற்றோர் மற்றும் தாங்கள் யாருக்காக நிய்யத் செய்தீர்களோ அவர்களுக்கும் ஸதக்கா ஜாரியாவாக தொடர்ந்து நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

ஒரு சதுர அடி ரூபாய் **1,000/-**

ஒரு முஸல்லா அளவு ரூபாய் **6,000/-**

इंडियन बैंक Indian Bank

**AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**A/C No. : 6845938157**

**BRANCH NAME : ARIYUR**

**IFSC CODE : IDIB000A198**

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா **உபைதுல்லாஹ்** சாஹிப் காஸிமி, **நிறுவனர் & முதல்வர்**

**ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி**

அஜீஸ் நகர், அரியூர், வேலூர்–632055. தமிழ்நாடு **Cell : 9443491834**

கொண்டு வருவதற்கும், பிறகு ஒன்று திரட்டப்பட்ட அப்பொருள்களை மக்களுக்கு பங்கிடுவதற்கும் முன்னர் அது பற்றி மூன்று தடவை அறிவிப்பு செய்ய உத்தரவிடுவார்கள். இது நபி (ஸல்) அவர்களின் மரபு.

ஹள்ரத் அயாஸ் இப்னு ஸலமா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

"அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஒட்டகத்தைத் திடீரெனத் தாக்கி அதன் மேய்ப்பாளனைக் கொன்றுவிட்டு, அவனும் அவனுடன் வந்திருந்த (ஃகத்ஃபான் குலத்தாரின்) குதிரை வீரர்களும், (நபி (ஸல்) அவர்களின்பால் தரும் ஒட்டகங்களை) ஓட்டிச்சென்றுவிட்டனர். அப்போதுநான்மதீனா பகுதியை நோக்கி உரக்கசப்தமிட்டு "உதவி உதவி அதிகாலை ஆபத்து!" (யா ஸபாஹாஹ்) என்று (மதீனாவின் இரு மலைகளுக்கிடையில் இருந்த அனைவருக்கும் கேட்கும்படி) மூன்று தடவை உரக்க சப்தமிட்டேன்."

(நூல் : அபூதாவூத்-2372)

மக்களுக்கான ஒரு பொது அறிவிப்பை மூன்று தடவை செய்யலாம்.

## அறிவாற்றல்

அறிவாற்றலில் மூன்று வகையினர் தான். நான்காம் வகையினர் என்று யாரும் கிடையாது.

கற்பூரம்

கரிக்கட்டை

பச்சை வாழைமட்டை

தீயால் பற்ற வைத்தவுடன் பற்றிக்கொள்ளும் கற்பூரத்தைப் போன்றவர்கள். ஒன்றை சொல்லும் போதே நாம் என்ன சொல்லவருகிறோம் என்பதை புரிந்து கொள்வார்கள். இவர்களைத்தான் தமிழில் "கற்பூர புத்தியுடையவர்கள்" என்பர்.

கரிக்கட்டையில் தீயைப் பற்றவைத்து பிறகு ஊதிக் கொண்டே இருக்கவேண்டும். அதன்பிறகு தான் கரிக்கட்டை பற்றி எரியும்.

சொல்லிக்கொடுத்த பிறகும் நினைவூட்டிக் கொண்டே இருந்தால் மட்டுமே விளங்கிக் கொள்வார்கள். இவர்களைத் தான் "கரிக்கட்டை புத்தியுடையவர்கள்" என்பர்.

பச்சை வாழைமட்டையில் தீயை வைத்து எவ்வளவு ஊதினாலும், அது எரியவே எரியாது. என்ன செய்தாலும் எரியாது.

அதிக சிரமம் எடுத்து எவ்வளவு சொல்லிக் கொடுத்து, நினைவூட்டிக்கொண்டே இருந்தாலும் விளங்கிக்கொள்ளவே மாட்டார்கள். அவர்கள் விஷயத்தில் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாகுமே தவிர, பலனளிக்காது. இவர்களைத்தான் "வாழை மட்டை புத்தியுடையவர்கள்" என்பர்.

## அனுமதி கோருதல்

"இறைநம்பிக்கையாளர்களே! உங்கள் இல்லங்கள் அல்லாத (வேறு) இல்லங்களில், அங்கு உள்ளவர்களிடம் அனுமதி பெறாமலும், அவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறாமலும் நுழையாதீர்கள். இதுவே உங்களுக்கு நல்லதாகும்."

- அல்குர்ஆன் (24 :27)

"நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (பிறர் வீட்டிற்குள் நுழைய) உங்களில் ஒருவர் மூன்று தடவை அனுமதி கேட்டும், அவருக்கு அனுமதி வழங்கப்படா விட்டால் அவர் திரும்பி விடட்டும்."

(நூல் : புகாரீ-6245, முஸ்லிம்-4351, அபூதாவூத்-4509)

ஹள்ரத் கைஸ் பின் சஅத் (ரளி) அவர்கள் கூறியதாவது : அருமை நாயகம் (ஸல்) அவர்கள், எங்களின் வீட்டில் எங்களைச் சந்திக்க வந்தபோது (வீட்டுவாசலில் நின்று, அனுமதி கோருவதற்காக) அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூறினார்கள். அதற்கு (என் தந்தை) சஅத் (ரளி) அவர்கள் (நபி - ஸல் அவர்களுக்கு கேட்காத வகையில்) மெதுவான குரலில் பதில் ஸலாம் கூறினார்கள். அப்போது நான் (என் தந்தையிடம்), "நபி (ஸல்) அவர்களுக்கு நீங்கள் அனுமதி தரமாட்டீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "நபி (ஸல்) அவர்களை (அந்நிலையிலேயே) விட்டுவிடு. அப்போது தான் நபி (ஸல்) அவர்கள் நம்மீது ஸலாமை அதிகமாகச் சொல்லுவார்கள்" என்று கூறினார்கள்.

(மீண்டும் இரண்டாவது தடவை) நபி (ஸல்) அவர்கள் ஸலாம்கூறி (அனுமதி கோரி)னார்கள். அதற்கு என் தந்தை மெதுவான குரலில் பதில் ஸலாம் கூறினார்கள். (மீண்டும் மூன்றாவது தடவை) நபி (ஸல்) அவர்கள் ஸலாம் கூறினார்கள். (அனுமதி கிடைக்காததால்) நபி (ஸல்) அவர்கள் திரும்பினார்கள். அப்போது எனது தந்தை நபி (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்து சென்று, "நாயகமே! நான் உங்களுடைய ஸலாமைக் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். நீங்கள் எங்களுக்கு அதிகமாக ஸலாம் சொல்லவேண்டும் என்பதற்காக உங்களுக்கு மெதுவான குரலில் பதில் ஸலாம் கூறிக் கொண்டிருந்தேன்" என்று கூறிய பின்னர், நபி (ஸல்) அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள்.

(நூல்: அபூதாவூத்-4511)

ஒரு வீட்டிற்குச் சென்றால் அனுமதி கேட்பதற்கு அடையாளமாக, காலிங் பெல்- அழைப்பு மணியை ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தடவை அழுத்தலாம். அதற்குள் யாரேனும் பதில் கொடுத்துவிட்டால் அனுமதி பெற்று உள்ளே செல்லலாம். இல்லையேல் கலவரப்படுத்துகிற

மாதிரி மீண்டும் மீண்டும் அதை அழுத்திக்கொண்டே இருக்கக்கூடாது.

மேலும், ஒருவரை கைப்பேசி மூலம் அழைக்க நாடினால், அதிகபட்சமாக மூன்று தடவை அழைக்கலாம். அதற்குள் அவர் அதை எடுத்து பதிலளித்தால் பேசலாம். இல்லையேல், மீண்டும் மீண்டும் அழைக்கக் கூடாது. அது அவருக்குத் தொந்தரவாக அமையக்கூடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உங்களில் ஒருவர் (பசியின் காரணத்தால்) கால்நடை (வளர்க்கும்) இடத்திற்குச் செல்லும்போது, அங்கு அதன் உரிமையாளர் இருந்தால் அவரிடம் அனுமதி கோரட்டும். அவர் அனுமதித்தால் அதில் பால் கறந்து அருந்தட்டும். அங்கு யாரும் இல்லாவிட்டால் மூன்று தடவை குரல் கொடுக்கட்டும். எவரேனும் பதில் அளித்தால் அவரிடம் அனுமதி கேட்கட்டும். யாரும் பதில் அளிக்காவிட்டால் அவர் பால் கறந்து அருந்திக் கொள்ளட்டும். ஆனால் அதை (கறந்து) எடுத்துச் செல்ல வேண்டாம்.

அறிவிப்பாளர்:- ஹள்ரத் ஸமுரா பின் ஜுன்துப் (ரளி) அவர்கள்
(நூல் : அபூதாவூத்-2251)

ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளில், அவற்றின் உரிமையாளரின் அனுமதியின்றி பால் கறப்பது கூடாது. பசி போன்ற அவசரத் தேவைக்காகப் பால் கறக்க நேர்ந்தால் கறந்து கொள்ளலாம். எனினும், அதற்கான இழப்பீடு வழங்க வேண்டும். அடுத்தவரின் கால்நடையில் பால் கறக்க விரும்பும் போது அதன் உரிமையாளர் அருகில் இருந்தால் அங்கேயே அவரிடம் அனுமதி கோரவேண்டும். அருகில் ஒருவரும் இல்லாத போது குரல் எழுப்பி உரியவரை மூன்று தடவை அழைத்து பார்க்கவேண்டும். அப்போதும் யாரும் பதில் அளிக்காவிட்டால் அவசியத் தேவைக்கேற்ப பால் கறந்து அருந்தலாம். அங்கிருந்து பாலைக் கொண்டு செல்லலாகாது. இதுவே பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும்.

(நூல்: துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

பசியுடன் இருப்பவர் கனிகள் விளையும் தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்களில் நுழைந்தால் இவ்வாறே பின்பற்ற வேண்டும்.

## வேண்டுகோள்

ஹள்ரத் அதீ பின் ஹாத்திம் (ரளி) அவர்கள் கூறியதாவது : "எங்கள் பகுதியை நோக்கி இஸ்லாமிய படையினர் வருகின்றார்கள் என்று எனக்கு தகவல் கிடைத்தது. எனவே, நான் எனது குடும்பத்தார்களை அழைத்துக்கொண்டு கிறிஸ்தவ நாடான சிரியா நோக்கிச் செல்ல தீர்மானித்தேன். அப்போது

CityAds BOOKS **www.cityadsbooks.com**

# இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்- நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர் ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர் ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds **For More Details Call/Whatsapp: 98410 16016**

*A.Saleem*
*S.Mohammed Kassim*

93632 20624
99943 23977
99767 78597



## *Rahmaan Builders*
## *Property Developers*

45D, Ramasamy Pillai Street, Maruthamalai Main Road,
Vadavalli (P.o.), Coimbatore - 41.





புறப்படும் அவசரத்தில் எனது தங்கை சுஃபானாவை விட்டு விட்டுச் சென்று விட்டேன்.

பின்னர் அப்படையினர் வந்து எங்கள் பகுதியை வெற்றி கொண்டனர். அங்குள்ளோரைச் சிறைபிடித்தனர். சிறைபிடித்தோரை மதீனாவுக்குக் கொண்டு சென்றனர். சிறைபிடிக்கப்பட்டோரில் என் தங்கை சுஃபானாவும் ஒருவர். சிறைபிடிக்கப்பட்டவர்களைத் தங்க வைப்பதற்கென மஸ்ஜிதுந் நபவீக்கு அருகிலேயே ஒரு கொட்டகை இருந்தது.

முஸ்லிம்களின் நல்லொழுக்க நடவடிக்கைகளை பார்த்து, அதனால் ஈர்க்கப்பட்டு என் தங்கை சுஃபானா முஸ்லிமாகி விட்டார்.

நபி (ஸல்) அவர்கள் தொழுகச் செல்லும்போது அந்தக் கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவ்வாறு மறுநாள் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக சென்றபோது, என் தங்கை எழுந்து நின்று, "நாயகமே! என் தந்தை ஹாத்திம் தாயீ ஒரு கொடை வள்ளல்; அவர் இறந்துவிட்டார். எனக்குப் பாதுகாப்பாக இருந்தவர் என்னை விட்டுவிட்டு ஓடி விட்டார்; எனவே அல்லாஹ்வின் மூலம் உங்களுக்கு கிடைத்தவற்றிலிருந்து எனக்கு உதவி செய்யுங்கள்" என்று கேட்டார்.

என் தங்கை பேசிய வார்த்தைகளை நபி (ஸல்) அவர்கள் கேட்டுக்கொண்டு எதுவும் பேசாமல் சென்று விட்டார்கள். இரண்டாவது நாள் நபி (ஸல்) அவர்கள் அதே நேரத்தில் தொழுகைக்கு வந்தார்கள். அவ்விடத்தைக் கடந்து பள்ளி வாசலுக்குச் சென்றபோது மீண்டும் என் தங்கை அதே வார்த்தையால் அதே கோரிக்கையை முன் வைத்தார்.

அப்பெண் பேசிய வார்த்தைகளை நபி (ஸல்) அவர்கள் கேட்டுக்கொண்டு எதுவும் பேசாமல் சென்றுவிட்டார்கள். மூன்றாம் நாள் நபி (ஸல்) அவர்கள் கடந்து சென்றபோது அப்பெண் எதுவும் பேசவில்லை. நபி (ஸல்) அவர்களின் பின்னால் வந்த அலீ (ரளி) அவர்கள் அப்பெண்ணைப் பார்த்து, "எழுந்து கேள்; எழுந்து கேள்" என்று சைகை செய்தார்கள்.

என்ன இது, பின்னால் வருபவர் கேட்கச் சொல்கிறாரே. சரி, ஆனது ஆகட்டும் கேட்டு விடுவோம் என முடிவுசெய்து கொண்டு பேசத் தொடங்கினார். மீண்டும் அதே வார்த்தைகளால், அதே கோரிக்கையை முன் வைத்தார்.

அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், "ஆம்! நீ கேட்ட உபகாரத்தை நான் செய்துவிட்டேன். எனினும், நீ புறப்பட்டுச் செல்ல அவசரப்படாதே. உன்னை உன் ஊரில் கொண்டு போய்ச் சேர்க்கும் நம்பிக்கைக்

குரியவர் யாரையேனும் நீ கண்டால்என்னிடம் சொல். நான் அவரோடு உன்னை அனுப்பி வைக்கிறேன்" என்றார்கள். எனவே, அத்தகைய யாரேனும் வருகிறாரா என்று தேடிக் கொண்டிருந்தார்.

பின்னால் வந்தவர் மூன்றாவது நாள் தன்னை நபியவர்களிடம் கேட்கச் சொன்னாரே, அவர் யார்? என்று விசாரித்தார். அவர்தான் அலீ (ரளி) அவர்கள் என்று அறிந்தவுடன், அவரிடம் தங்கை சுஃபானா சென்று, "நீங்கள் என்னை நபி (ஸல்) அவர்களிடம் கேட்கச் சொன்னீர். அவ்வாறே அந்த மூன்றாம் நாளும் கேட்டேன். நபி (ஸல்) அவர்களும் எனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். நீங்கள் ஏன் என்னைக் கேட்க சொன்னீர்? எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று வினவினார்.

அதற்கு அலீ (ரளி) அவர்கள், "ஆம்! நபி (ஸல்) அவர்களிடம் யாரேனும் மூன்று தடவை கேட்டுவிட்டால் அதை அவருக்குக் கொடுக்காமல் இருக்க மாட்டார்கள். நீ இரண்டு நாட்கள் கேட்டாய். மூன்றாம் நாள் கேட்காமல் அமைதியாக இருந்துவிட்டாய். எனவேதான் நான் உன்னை மூன்றாம் நாளும் கேள்! என்று சொன்னேன்" என பதிலளித்தார்கள். (நூல்: சீரத் இப்னு இஸ்ஹாக்)

---

"நிச்சயமாக உலமாபெருமக்கள் நபிமார்களின் வாரிசுகளாவார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹன்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதி)


# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை – 1.

04373-254354; 253339; 99444 54354

நம்மிடம், பிறர் தமது வேண்டு கோளை திரும்பத்திரும்ப மூன்று தடவை அழுத்திக் கூறினால், அது முடிந்தவரை நம்மால் கவனிக்கப்பட வேண்டும். அவர்களின் தேவைகளை நிறை வேற்ற முயற்சிக்க வேண்டும்.

## பிரார்த்திக்கும்போது

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறியதாவது : "(ஏதேனும் ஒன்றை பிரார்த்தித்தால்) மூன்று முறை பிரார்த்திப்பதும், (பாவமன்னிப்பு கோரினால்) மூன்று முறை பாவமன்னிப்புக் கோருவதும் அருமை நாயகம் (ஸல்) அவர்களுக்கு விருப்ப மானவையாக இருந்தன.

(நூல்: முஸ்னது அஹ்மத்-3581)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறியதாவது : "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (மக்காவில் வாழ்ந்த காலத்தில் இறையில்லம் கஃபாவிற்கு அருகில்) தொழுகையில் ஸஜ்தாவில் இருந்தார்கள். அவர்களைச் சுற்றி குறைஷியர் சிலர் இருந்தனர். அப்போது உக்பா பின் அபீமுஈத் என்பவன் ஓர் ஒட்டகத்தின் கருவைச் சுற்றியுள்ள சவ்வுகளுடன் வந்து நபி (ஸல்) அவர்களுடைய முதுகில் அதைப் போட்டான். நபி (ஸல்) அவர்கள் (ஸஜ்தாவிலிருந்து) தலையை உயர்த்தவில்லை. பின்னர் (அவர்களுடைய புதல்வி) ஃபாத்திமா (ரளி) அவர்களிடம் தகவல் சொல்லப்பட்டது.

உடனே சிறுமியாயிருந்த ஃபாத்திமா (ரளி) அவர்கள் வந்து நபி (ஸல்) அவர்களின் முதுகில் இருந்தவற்றை அப்புறப் படுத்தினார்கள். பிறகு அ(ந்த கய)வர்களை நோக்கிச் சென்று அவர்களை ஏசினார். நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்ததும் உரத்தக் குரலில் எதிரிகளுக்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். பொதுவாக நபி (ஸல்) அவர்கள் (ஏதேனும்) பிரார்த்தித்தால் ஒவ்வொரு வாக்கியத்தையும் மூன்று முறை கூறுவார்கள். (அப்போதுதான்) "இறைவா! குறைஷியரை நீயே கவனித்துக் கொள். இறைவா! குறைஷியரை நீயே கவனித்துக்கொள். இறைவா! குறைஷியரை நீயே கவனித்துக் கொள்" என்று மூன்று தடவை பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! நபி (ஸல்) அவர்கள் (இந்த பிரார்த்தனையில்) குறிப்பிட்ட அனைவரும் பத்ருப் போர்க்களத்தில் மாண்டு கிடந்ததை நான் கண்டேன். பின்னர் அவர்கள் அனைவரும் இழுத்துச் செல்லப் பட்டு, பத்ரிலிருந்த ஒரு பாழுங் கிணற்றில் தள்ளப்பட்டனர்.

(நூல்: புகாரீ-240, முஸ்லிம்-3670)

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

## அங்கத்தூய்மை

ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்களின் அடிமையான ஹூம்ரான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் உளூ செய்வதற்காகத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி உளூ செய்தார்கள். "(முதலில்) தம்முடைய இரு முன் கைகளை மூன்று தடவை கழுவினார்கள். பிறகு வாய் கொப்பளித்து (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பிறகு தமது முகத்தை மூன்று தடவை கழுவினார்கள். பிறகு தமது வலக்கரத்தையும், இடக்கரத்தையும் முழங்கை மூட்டு வரை மூன்று தடவை கழுவினார்கள். பிறகு தலையை (ஈரக்கையால் தடவி) மஸ்ஹு செய்தார்கள். பிறகு தமது வலக்காலையும், இடக்காலையும் கணுக்கால் வரை மூன்று தடவை கழுவினார்கள். பிறகு நான் செய்த இந்த உளூ வைப் போன்றே நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களும் உளூ செய்ததை நான் பார்த்தேன்" என்று கூறினார்கள்.

(நூல்: முஸ்லிம் -383, அபூதாவூத்-96)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அங்கத் தூய்மையின் உறுப்புகளை மும்மூன்று தடவை கழுவிய பின்னர், அருமைநாயகம் (ஸல்) அவர்கள், "அங்கத்தூய்மை இவ்வாறு தான் (செய்ய வேண்டும்) இதைவிட அதிகமாக்கினாலோ குறைத்தாலோ அவர் தவறும், அநீதியும் இழைத்தவராவார்" என்று கூறினார்கள்.

(நூல்: அபூதாவூத்-116)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் (ஒவ்வொரு உறுப்பையும்) ஒரு தடவை கழுவி அங்கத் தூய்மை செய்தார்கள். "இதுதான் ஒருவர் (குறைந்தபட்சம்) செய்யும் அங்கத்தூய்மையின் அளவாகும். இந்த அளவுக்குச் செய்யாமல் அவருடைய தொழுகையை அல்லாஹ் ஏற்க மாட்டான்" என்று கூறினார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள், (ஒவ்வொரு உறுப்பையும்) இரண்டிரண்டு தடவை கழுவி அங்கத்தூய்மை செய்தார்கள். பிறகு, "இது மரியாதைக்குரிய அங்கத்தூய்மை ஆகும்" என்று கூறினார்கள். அதன் பின்னர் (ஒவ்வொரு உறுப்பையும்) மும்மூன்று தடவை கழுவி அங்கத்தூய்மை செய்துவிட்டு, "இதுதான் நிறைவானதாகும்; இதுவே என்னுடைய அங்கத் தூய்மையும், அல்லாஹ்வின் தனித்துவ நண்பர் இப்ராஹீம் (அலை) அவர்களின் அங்கத்தூய்மையுமாகும்."

"யார் இவ்வாறு அங்கத் தூய்மை செய்துவிட்டு, பின்னர்

இறுதியில், 'அஷ்ஹது அன்லா யிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு' (பொருள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதரு மாவார்கள் என்றும் நான் உறுதி மொழிகிறேன்) என்று கூறு கிறாரோ அவருக்குச் சொர்க்கத் தின் எட்டு வாசல்களும் திறக்கப் படும். அவற்றில் அவர் விரும்பு கின்ற எந்த வாசல் வழியா கவும் நுழைந்து கொள்வார்" என்று கூறினார்கள்.

(நூல்: முஸ்னது அஹ்மத், இப்னுமாஜா-413)

அங்கத் தூய்மையில் உறுப்புகளை மூன்று தடவை கழுவுதல் (சுன்னத் எனும்) நபி வழியாகும். இதைவிட அதிக மாககழுவுதல் வீண்விரயமாகும். எனவே, அதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அது (மக்ரூஹ் எனும்) அருவருக்கத் தக்க செயல் என்பதாக மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள்.

## மணவிலக்கு

"[மீட்டிக்கொள்ள உரிமை பெற்ற] இந்தத் தலாக்[கை] இரண்டு தடவைதான் [சுஹ லாம்]." - அல்குர்ஆன் [2:229]

இல்லற வாழ்க்கையில் பயணிக்கும் தம்பதியர் இடையே மனக்கசப்பு ஏற்பட்டு, உறவில் விரிசல் உண்டாகி, இருவரும் இனிமேல் இணைந்து வாழ முடியாது என்ற நெருக்கடி தோன்றும்போது பிரிந்து விடுவதைத் தவிர வேறு வழி கிடையாது. ஒட்டாது என்றாகி விட்ட பிறகு பெயரளவில் கணவன்-மனைவியாக வாழ் வதைவிட இருவரும் பிரிந்து தமக்கு ஏற்ற துணையைத் தேடிக் கொள்வதே இருவருக்கும் நல்லது. இந்த அடிப்படை யிலேயே இஸ்லாமியச் சட்டம் "தலாக்" எனும் மணவிலக் கிற்கு அனுமதியளித்தது.

மொத்தம் மூன்று தவணை களில் தலாக் சொல்வதற்கு கணவனுக்கு உரிமை உண்டு. முதலாவதாக, "உனக்கு நான் மணவிலக்கு அளிக்கிறேன்" என்று மனைவியிடம் கணவன் அறிவிப்பான். இந்த முதலாவது தலாக் சொல்லப்பட்ட பின்னர் மனைவி இத்தா எனும் காத்திருப்பு மேற்கொள்வாள். பொதுவாக மூன்று மாதவிடாய்ப் பருவங்கள் இத்தா காலமாகும். இந்த சமயத்தில் கணவனின் பராமரிப்பிலேயே மனைவி இருப்பாள். இந்தக் காலக்கெடு முடிவதற்கு முன், விரும்பினால் இருவரும் மீண்டும் சேர்ந்து வாழலாம். அவ்வாறு சேர்ந்து வாழும்போது மறுபடியும் பிணக்கு ஏற்பட்டு பிரியும் சூழ்நிலை நேர்ந்தால் இரண்டாவது தவணையாக அவன் மணவிலக்கு அளிக்க லாம். இந்த மணவிலக்கிற்குப்

பிறகும் மனைவி இத்தா மேற் கொள்வாள். இந்த இத்தா முடி வதற்கு முன்னால் விரும்பினால் இருவரும் சேர்ந்து வாழலாம்.

முதலாவது அல்லது இரண்டாவது தலாக் சொல்லப் பட்டு, மனைவி 'இத்தா'வை யும் முடித்து விட்டால்கூட விரும்பினால் சேர்ந்து வாழலாம். அதற்காகத் திருமண ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டால் போதும்.

முதலிரு மணவிலக்கிற்கு 'தலாக்ரஜ்ஈ' (திரும்ப அழைத்துக் கொள்ளும் உரிமையுள்ள மணவிலக்கு) என்பர். இரண்டா வது தவணையில் மண விலக்கு அளிக்கப்பட்டு, மீண்டும் இருவரும் சேர்ந்து வாழும்போது பிணக்கு ஏற் பட்டால், மூன்றாவது தவணை யாக மண விலக்கு அளிக்கலாம். இது இறுதியானது. இதற்குப் பின்னர் அந்த மனைவியும், கணவனும் சேர்ந்து வாழ வேண்டுமானால், இத்தா முடிந்தபின் அவள் மற்றொரு ஆணை மணந்து அவனுடன் தாம்பத்திய உறவு கொண்டு, பின்னர் அந்தப் புதுக் கணவன் தன் விருப்பப்படி அவளை விவாகரத்துச் செய்து அதற் கான 'இத்தா'வும் முடிந்தபிறகு பழைய கணவனைப் புதிதாகத் திருமணம் செய்து கொண்டு வாழலாம்.

சுருங்கக்கூறின், ஒருவர் தமது மனைவியை இரண்டு தடவை தலாக் சொல்லிய பிறகும்கூட சேர்ந்து வாழலாம். ஆனால், அவர் மூன்றாவது தடவை தலாக் சொல்லிவிட் டால், மனைவியுடன் சேர்ந்து வாழ்வது சிரமம் என்பதே மார்க்கச் சட்டமாகும். தலாக் விஷயத்தில் மூன்றாவது தடவை என்பது இறுதியானதாகும்.

நாம், இஸ்லாமியச் சட்டங் களை முறையாக விளங்கி, அதன்படி செயலாற்றி வாழ, இறைவன் அருள்புரிவானாக!

## உண்மையான ஏழைக்குரிய இலக்கணங்கள்!

"ஓரிரு கவளம் உணவுக்காக, அல்லது ஓரிரு பேரீச்சம் பழங்களுக்காக மக்களிடம் அலைபவன் ஏழையல்லன்; ஏழை யாரெனில், அவன் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள எந்தச் செல்வத்தையும் பெற்றிருக்கமாட்டான்; அவனது நிலையை அறிந்து அவனுக்குத் தர்மமும் வழங்கப்படுவதில்லை. தானும் வலியச் சென்று மக்களிடம் கேட்கமாட்டான். (இத்தகையவனே உண்மையான ஏழையாவான்.)" என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## உண்மை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்; ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் பூரணமாகக் கைப்பற்றி ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில், அவர்களிடமிருந்த ஆட்சிப் பொறுப்பு பூரணமாக அகற்றப்பட்டு விட்ட நேரம்...!

உத்தரப்பிரதேச மாகாணத்தின் மேற்குப் பகுதியில் முஸஃப்பர் நகர் என்றொரு மாவட்டம் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்துக்கும், ஹரியானாவுக்கும் எல்லையில் அமைந்துள்ள இம்மாவட்டத்தில் காந்தலா என்றொரு நகரம் இருக்கிறது. இந்நகரில் இந்துக்களும், முஸ்லிம்களும் கணிசமாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் ஆங்கிலேய அதிகாரி ஒருவர் முஸஃப்பர் நகர் மாவட்டத்தின் கலெக்டராக பணியாற்றி வந்தார்.

அச்சமயம் காந்தலா நகரிலுள்ள இரு பெரும் சமுதாயத் தலைவர்களிடையே சர்ச்சை ஒன்று எழுந்தது. பிரச்சனை முற்றி பெரும் கலவரமாகக் கூட உருவெடுக்கலாம் என்ற நிலைமை வந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தை முஸ்லிம்கள் தங்களுக்குரிய வணக்கஸ்தலம் என வாதிட்டார்கள். அதே இடத்தை இந்துக்கள் அது தங்களுக்குரிய வணக்கஸ்தலத்தைச் சேர்ந்தது என கோரிக்கை வைத்தனர். இரு தரப்பினரும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. வாதங்களும், பிரதி வாதங்களும் முற்றிக் கொண்டே சென்றன. அமைதி நிலவுவதாகத் தெரியவில்லை. பிடிவாதமே தலைதூக்கி நின்றது.

ஆங்கிலேய கலெக்டருக்கு பெரிய தலைவலியாகப்போயிற்று. இரு தரப்பினரிடமும் தங்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு ஆதாரப்பூர்வமான ரெக்கார்டுகளைக் கொண்டு வரும்படி அவர் கட்டளையிட்டார். இரு தரப்பினிடமும் போதிய ஆதாரங்கள் இல்லை. “எங்கள் அனுபவத்தில்தான் பிரச்சனைக்குரிய இடம் இருந்து வருகிறது” என்று மட்டும் இரு சாராரும் சொல்லி வாதிட்டனர். இரு கூட்டத்தினிடமும் போதிய உறுதியான பதிவு

கள் இல்லை; ஆதாரங்கள் இல்லை. பிரிட்டிஷ் கலெக்டருக்கு இது தர்ம சங்கடமாக இருந்தது. இதை எப்படித் தீர்ப்பது? என்றே அவருக்குத் தோன்றவில்லை. இப்பிரச்சனையை முற்ற விட்டால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விடலாம். அமைதிக்கு பங்கம் வரலாம் என்றும் அவர் அஞ்சினார்.

திடீரென அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. முஸ்லிம்களின் பிரதிநிதிகள் சிலரை அழைத்தார். அவர்களை நோக்கி "இந்த இடம் உங்களுக்குத்தான் சொந்தம் என்கிறீர்கள். ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லை. இந்த இடம் உங்கள் அனுபவத்தில் உள்ளதுதான் என்று சாட்சியம் அளிக்க இந்துக்களில் இருந்து கண்ணியமிக்க யாரையாவது ஒருவரை உங்களால் குறிப்பிட்டு கூற முடியுமா?" என்று மாவட்ட கலெக்டர் வினவினார். "அப்படி சாட்சியம் அளிக்க யாரும் முன் வரமாட்டார்கள்" என முஸ்லிம்கள் பதில் சொன்னார்கள்.

இதே கேள்வியை இந்துக்களின் பிரதிநிதிகளை அழைத்து வைத்து மாவட்ட கலெக்டர் கேட்டார். "முஸ்லிம்களில் இருந்து யாராவது ஒருவர் பிரச்சனைக்குரிய இடம் இந்துக்களுக்குத்தான் சொந்தமானது என சாட்சியம் அளிக்க முன்வருவார்களா? அப்படி ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று இந்துக்களின் தலைவர் களிடம் பிரிட்டிஷ் கலெக்டர் கோரினார். அப்போது இந்துக்களின் பிரதிநிதிகள் "இப்பகுதியில் முஸ்லிம் பெரியவர், மார்க்க அறிஞர் ஒருவர் இருந்து வருகிறார். அவர் பொய்யே சொல்ல மாட்டார். உண்மைதான் பேசுவார். அந்த முதியவரை நீங்கள் கூப்பிட விட்டு நேரில் விசாரித்துப் பாருங்கள்" என்று கூறினார்கள்.

உடனே அந்த பிரிட்டிஷ் கலெக்டர் அந்த முஸ்லிம் பெரியவரை தம் முன்பு வந்து ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

முஃப்தீ இலாஹி பக்ஷ் குடும்பம் என்றால் முஸஃப்பர் நகர் மாவட்டத்திலேயே மிகவும் பிரபலமான குடும்பம்; மார்க்கப்பற்று மிகுந்த குடும்பம்; நல்லொழுக்கத்திற்கும் அக்குடும்பத்தினர் பெயர் பெற்றவர்கள். எந்த விதமான வம்பு தும்புகளுக்கும் அக் குடும்பத்தினர் போக மாட்டார்கள் என்று அவ்வட்டாரத்திலேயே பெயர் வாங்கி இருந்தார்கள்.

ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கி அப்போராட்டத்தில் வீர மரணம் அடைந்த பெரியார் ஸைய்யிது அஹ்மது ஷஹீது என்பவர்கள். அவர்களது கலீஃபாவாக ஷா அப்துல் அஜீஸ் என்பவர்கள் விளங்கினார்கள். இந்த கலீஃபாவின்

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

## குட்லக் புர்கா கடை
## குட்லக் எண்ணெய் கடை
## குட்லக் நாட்டு மருந்துக்கடை

எங்களிடம் அனைத்து வகையான காலணிகளும், பேக் மற்றும் சூட்கேஸ் வகைகளும், பெண்களுக்கு தேவையான புர்கா, ஷால், மக்கன்னா போன்றவைகளும், சமையலுக்குத் தேவையான சுத்தமான செக்கு எண்ணெய் வகைகளும் மற்றும் நம்பகமான நாட்டு மருந்துகளும் தரமான வகையில், நியாயமான விலையில் கிடைக்கும்.

தொடர்புக்கு

தரமான ஸ்கூல் பேக் அனைத்து பேக்குகளும் தயாரிப்பாளர்

**குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்**

4027, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை - 622 001.

✆ 04322-222466; Cell : 9443346313

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ ஹாஸ்டல் வசதி உண்டு.

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

தொடர்புக்கு : Email : oxfordescdm@gmail.com

Tel : +91-7373030412, 414, 421.

WhatsApp : +91-9566247805 https://oxfordenglishschool.info

மாணாக்கர்தான் முஃப்தீ இலாஹி பக்ஷ் குடும்பத்தைச் சார்ந்த அந்த முதியவர்.

ஆங்கிலேய ஆட்சியை எதிர்ப்பதையே மார்க்கக் கடமையாகக் கொண்ட பாரம்பரியத்தில் வந்த அந்தப் பெரியவர், ஒரு சபதத்தையும் மேற்கொண்டிருந்தார். அதாவது தமது வாழ்நாளில் எந்த ஓர் ஆங்கிலேயன் முகத்திலும் முழிப்பதில்லை என அவர்கள் சபதமெடுத்திருந்தார்கள்.

எனவே முஸஃப்பர் நகர் கலெக்டர் தம்மைக் கூப்பிட்டு அனுப்பிய போது அந்த முஸ்லிம் பெரியவர் வர மறுத்து விட்டார். தமது சபதத்தை விளக்கமாகச் சொல்லி, தன்னால் கலெக்டர் முன்பு ஆஜராக இயலாதிருப்பதை ஆள் மூலம் செய்தியாக அனுப்பினார். மாவட்ட கலெக்டர் விடுவதாகயில்லை. எப்படியும் அந்த முஸ்லிம் பெரியவர் தமது முன்பு ஆஜராகியே தீர வேண்டும் என்று பிடிவாதம் செய்தார். அப்படியானால் ஒரு நிபந்தனைக்குட்பட்டு கலெக்டர் முன்பு ஆஜராக சம்மதிப்பதாக அப்பெரியவர் கூறி அனுப்பினார்கள். கலெக்டர் முகத்தில் முழிக்காத நிலையில் அந்த இடத்தில் தாம் ஆஜராகுவதாகச் சொன்னார்கள். அதற்கு கலெக்டரும் சம்மதித்துக் கொண்டார்.

ஒரு நாள் குறிக்கப்பட்டது. கலெக்டர் ஆபீஸில் ஒரே கூட்டம்! பரபரப்பு! முஸ்லிம் பெரியவர் அங்கு வந்தார். தங்களது முகத்தை ஒரு துணியால் மூடி கலெக்டர் முன்பு கொண்டு போய் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். கலெக்டரை நேரடியாகப் பார்த்து நிற்காமல் தங்களது முதுகுப் புறத்தை கலெக்டர் அமர்ந்திருக்கும் பக்கமாகத் திருப்பி வைத்து நின்றார்கள். விசாரணை ஆரம்பமானது. கலெக்டர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அந்த முஸ்லிம் பெரியவர் பதிலளித்தார்கள். காந்தலா என்ற நகரிலுள்ள அந்த பிரச்சனைக்குரிய இடம் இந்துக்களின் அனுபவத்தில்தான் இருந்து வருவதை தாம் இளமையிலிருந்தே பார்த்திருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

இந்த சாட்சியத்தை பிரிட்டிஷ் கலெக்டர் ஏற்று அதன் பிரகாரமே தீர்ப்பு வழங்கினார். மாவட்ட கலெக்டர் முன்பு உண்மையே பேசிய பெரியவரின் செயலைக் கண்டு அங்கு கூடியிருந்த இந்துக்கள் கூட அசந்து போயினர். அவர்களால் தங்களது கண்களையே நம்ப முடியவில்லை. தங்களது

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு பாதகமானது என்று நன்கு தெரிந்திருந்தும் கூட அப்பெரியவர் உண்மையையே கூறியிருக்கிறார் என்று அவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

ஒரு சில இந்துப் பிரதிநிதிகள் கலெக்டர் ஆபீஸிலேயே அப்பெரியவரின் கையைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறினார்கள். அதற்கு அவர்கள், "நான் எனது கடமையைத்தான் செய்தேன். உண்மையைக் கூறும்படி எனது மார்க்கம் போதிக்கிறது. என் வாழ்நாளில் அதை நான் கடைபிடிக்க முயற்சித்து வருகிறேன். அதிலிருந்து வழி தவற நான் விரும்பவில்லை. இனி எஞ்சியிருக்கும் காலங்களிலும் அவ்வழியை விட்டு அகலாதிருக்க இறைவன் என்னை பாதுகாப்பானாக" என்று பதிலளித்தார்கள்.

உண்மையை நிலைநிறுத்த அப்பெரியவர் எடுத்துக் கொண்ட அசாதாரணமான துணிச்சலைக் கண்டு அந்த இடத்திலேயே பலர் அவர்கள் கையைப் பிடித்து கலிமாச் சொல்லி தீனுல் இஸ்லாத்தில் இணைந்தார்கள். இது உண்மையில் நடந்த சம்பவம்; வரலாற்று நிகழ்ச்சி!

(தொடரும்)


பக்க விளைவுகள் கிடையாது

CERTIFIED ISO 9001:2008 COMPANY

ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 99626 64444

www.jingagold.com info@jingagold.com

# நுகர்ந்தவை

**நூல் : நவீன பிரச்சினைகளும், இஸ்லாமிக் ஃபிக்ஹு அகாடமியின் தீர்ப்புகளும்**

**ஆசிரியர் : மவ்லானா முஹம்மது அப்துர் ரஹீம்** ரஷாதீ ஹள்ரத் (ரஹ்)

**பக்கங்கள்: 634; விலை : ரூ.400/-**

**வெளியீடு: இதாரத்துல் புஹூஸ்வன் நஷ்ரிய்யாத்துல் இல்மிய்யா, (கல்வி ஆய்வு மற்றும் வெளியீட்டுத் துறை), ஜாமிஆ அல்–உஸ்வத்துல் ஹஸனா ஷரீஅத் கல்லூரி, ஜாமிஆ நகர், பள்ளபட்டி – 639207.**

**அலைபேசி : 9486058551**

இந்தியாவின் தலைசிறந்த நகரங்களில் இஸ்லாமிக் ஃபிக்ஹு அகாடமி எந்த தேதிகளில், எந்த தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது என்பதை இந்நூல் விவரிக்கிறது.

இந்நூலை நுகர்ந்து சுவாசிக்கும்போது இந்த நவீன கால பிரச்சினைகளுக்கு அல்குர்ஆன், அல்ஹதீஸ் வழியில் தீர்ப்புகளைக் கூறும் ஃபிக்ஹு சட்டங்களை அறிவிற் சிறந்த ஆலிம்கள், கருத்தரங்குகளில் ஒன்றுகூடி எவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து இந்த முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளார்கள் என்ற வியப்பு மேலிடுகிறது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள மதிப்புரையும், அறிமுக உரையும் ஃபிக்ஹு என்பது என்ன என்பதை தெள்ளத் தெளிவாக, நமக்கு சொல்லித் தருகிறது.

மவ்லானா முஹம்மது அப்துர் ரஹீம் ரஷாதீ ஹள்ரத் (ரஹ்) அவர்களும், அவர்களின் அருமைப் புதல்வர் மவ்லானா முஹம்மது ஜகரிய்யா ஹஸனீ அவர்களும் இணைந்து இந்நூலை இச்சமுதாயத்திற்கு அளித்துள்ளனர். இவர்களின் கடும் முயற்சிகள் நூலெங்கும் வியாபித்துள்ளன.

மதுரையில் நடைபெற்ற பதினெட்டாம் கருத்தரங்கில் விவாதித்த தலைப்புகள் சமுதாயத்தின் மேலான கவனத்திற்குரியவையாகும்.

உலகளாவிய அளவில் நடந்து வரும் இஸ்லாமிக் ஃபிக்ஹு அகாடாமிகளைப் பற்றி பேசும் பென்னம் பெரிய நூல் இது!

ஆய்வு : **பாவா**

# குறைந்து வரும் கருவளம் பாதிப்பும் – தீர்வும்!

டாக்டர் கு. கணேசன்

இந்தியாவில் குழந்தைப் பேறு வருடந்தோறும் குறைந்து வருவதாக 'தி லான்செட்' மருத்துவ ஆய்விதழ் தெரிவிக்கிறது. ஒரு நாட்டின் பிறப்பு விகிதம் "மொத்தக் கருவுறுதல் விகிதம் (Total Feritlity Rate - TFR)" எனப்படுகிறது. இது ஒரு பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி எண்ணிக்கையாகும். இது 1950இல் இந்தியாவில் 6.18 ஆக இருந்தது. 2021இல் 1.91 ஆகக் குறைந்துவிட்டது. மேலும், இது 2050இல் 1.3 ஆகவும், 2100இல் 1.04 ஆகவும் குறையக்கூடும் என்கிறது இந்த ஆய்விதழ்.

நாட்டில் மக்கள் தொகை நிலையாக இருக்க, ஒரு குடும்பத்தில் குறைந்தது இரண்டு குழந்தைகளாவது இருக்கவேண்டும். இது "மாற்று நிலை (Replacement level)" எனப்படுகிறது. இறக்கும் மக்களின் எண்ணிக்கையை ஈடுகட்ட எத்தனை குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று சொல்லும் விகிதம் இது. இந்தியாவில் இதன் அளவு 2.1 ஆக இருக்க வேண்டும். இப்போது இந்த அளவு குறைந்துவிட்டதால், இனி மக்கள் தொகையும் குறைந்துவிடும்.

'தி லான்செட்' ஆய்விதழின் படி, இந்தியாவில் 1950இல் 1.6 கோடிக்கும் அதிகமான பிறப்புகள் பதிவாகியுள்ளன. இது 2021இல் 2.24 கோடியாக உயர்ந்தது. இருப்பினும், அதற்குப் பிறகு இது குறையத் தொடங்கியது. அதன் அடிப்படையில், 2050இல் பிறப்புகளின் எண்ணிக்கை 1.3 கோடியாகவும், 2100இல் 0.3 கோடியாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நிலையான வளர்ச்சிக்கு அச்சுறுத்தல்

இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகஅளவிலும் மொத்தக் கருவுறுதல்விகிதம் குறைந்துள்ளது. 1950இல் சர்வதேசக் கருவுறுதல் விகிதம் 4.84 ஆக இருந்தது. இது 2021இல் 2.23 ஆகக் குறைந்தது. மேலும், இது 2100இல் 1.59 ஆகக் குறையும் என்று 2021இல் நடத்தப்பட்ட உலகளாவிய நோய்ச்சுமை (GBD)- ஆபத்துக்

காரணிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வும்,வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் (IHME) தலைமை யிலானஓர் ஆய்வும் சுட்டிக்காட்டி யுள்ளன. 2050இல் சர்வதேச அளவில் முக்கால்வாசி நாடு களில் மக்கள் தொகைப் பெருக்கத்தை ஆதரிக்கும் அளவுக்கு கருவுறுதல் விகிதம் இருக்காது என்று இந்த ஆய்வு களில் தெரிய வந்துள்ளது.

உலகில் 204 நாடுகளில் 155 நாடுகள் 2050இல் மக்கள் தொகை மாற்று நிலையை விடக் குறைவான கருவுறுதல் விகிதத் தைக் கொண்டிருக்கும் என்றும், இது 2100இல் 198 நாடுகளாக அதிகரிக்கும் என்றும் மேற் சொன்ன ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன. இந்தப் புள்ளி விபரங்கள் சர்வதேச அளவில் நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

## பிளவு காணும் உலகம்

இந்தக் கருவுறுதல் ஆய்வா னது, மக்கள் தொகையின் அடிப் படையில் உலக நாடுகளை இரு கூறுகளாகப் பிரிக்கிறது. 1950இல் உலகளாவிய பிறப்பு களில் மூன்றில் ஒரு பங்கு தென் கிழக்காசியா, கிழக்காசியா மற்றும் ஓசியானியாவில் (Oceania) நிகழ்ந்தன. இருப்பினும், தற்போது இந்தச் செறிவு துணை சஹாரா ஆப்ரிக்க நாடுகளுக்கு மாறியுள்ளது.

இந்த ஆய்வின்படி உலகெங்கிலும் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் பிறப்புகளின் விகிதம் 2021இல் 18 சதவீதமாக இருந்தது. இது 2100இல் 35 சதவீதமாக அதிகரிக்கும். 2100இல் பிறக்கும் இரண்டு குழந்தைகளில் ஒன்று துணை சஹாரா ஆப்ரிக்காவில் பிறக்கும். பிறப்புகளின் விகிதத் தில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம் மக்கள்தொகை ரீதி யாகப் பிளவுபட்ட உலகத்திற்கு வழிவகுக்கும். அதிகவருமான முள்ள நாடுகள் வயதானவர் களின் எண்ணிக்கைக் கூடுவ தால் நோய்ச்சுமை கூடுவதை எதிர்கொள்ள வேண்டும். இளைஞர்களின் எண்ணிக்கைக் குறைவதால், பணியாளர்கள் கிடைக்காமல் சிரமப்பட வேண்டி யிருக்கும். அதே வேளை, குறைந்த வருமானமுள்ள நாடுகள் அதிகப் பிறப்புகள் காரணமாக வளர்ச்சிக்குத் தேவையான உணவு, குடிநீர், எரிபொருள் போன்ற வளங்கள் கிடைப்பதற்குப் போராடும்.

## வீழ்ச்சிக்கான காரணங்கள்

உலகெங்கிலும் பெண் களுக்கான கல்வி மேம்பட்ட தும், நவீனக் கருத்தடை முறை களும், நகரமயமாக்கலும் கருவுறுதல் விகிதங்களின்

வீழ்ச்சிக்கு முக்கியக் காரணங்களாகக் கருதப்படுகின்றன. வாழ்க்கைச் செலவுகளும், குழந்தைகளுக்கான கல்விச் செலவுகளும் மிகவும் அதிகரித்துள்ளதால், தனிநபர்கள் சிறு குடும்பங்களையே விரும்புகிறார்கள். கூட்டுக் குடும்பங்கள் அரிதாகிவரும் இன்றைய சூழலில், குழந்தை வளர்ப்பு என்பது சவாலாக இருப்பதால் பணிக்குச் செல்லும் பெண்கள் குழந்தைப்பிறப்பைத் தள்ளிப் போடுவது இயல்பாகி விட்டது. சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளால் பெண்களுக்குத் திருமண வயது தாமதமாகி வருவதையும் காண்கிறோம். இந்தியாவில் பருவப் பெண்களில் பாதிப் பேருக்கு இரத்த சோகை இருக்கிறது. திருமணத்துக்குப் பிறகு, இவர்களுக்குக் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. பெரும்பாலான பெண்கள் கருத்தரிக்கும் வயதில் குழந்தை பெறுவதில்லை. முதல் கர்ப்பத்தின் சராசரி வயது முன்பு 20 ஆக இருந்தது. இப்போது அது 30 ஆக அதிகரித்துள்ளது.

ஆண்களுக்கு இணையாக அனைத்துப் பணிகளிலும் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. நிறுவனங்களில் வழங்கப்படும் நள்ளிரவைத் தாண்டிய பணிகளும், எல்லை மீறிய இலக்குகளும், அந்த இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் நவீன வாழ்க்கை முறைகளும், அதிக மன அழுத்தம் தரும் பணிச் சுமையும், உறக்கம் குறைந்த இரவுகளும், அதிகரிக்கும் உளவியல் சிக்கல்களும், பாலியல் வன்முறைகளும் குழந்தை பெற்றுக் கொள்வதில் உள்ள ஆர்வத்தைத் தம்பதியினரிடம் குறைத்துவிடுகின்றன. கருவுறுதல் விகிதம் குறைந்ததற்கு காலநிலை மாற்றமும் ஒரு காரணம். வழக்கத்துக்கு மாறான வெப்ப அலைகளால் கருவளம் குறைந்துவிடுகிறது என்கிறது இந்த ஆய்வு.

## பாதிப்புகள் என்னென்ன?

இந்தியாவைப் பொறுத்தவரை 2050-க்குள் மக்கள் தொகையில் முதியோரின் பங்கு 20 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும். அதாவது, ஐந்தில் ஒருவர் முதியவராக இருப்பார். இது தேசிய சுகாதாரக் காப்பீட்டைப் பாதிக்கக்கூடும். மேலும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், தேசிய சுகாதார உள்கட்டமைப்பு ஆகியவற்றுக்கும் சுமையைக்கூட்டும். உழைக்கும் மனித வளம் குறையும். குறிப்பாக, இளைஞர்களின் எண்ணிக்கை குறைவதால், தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படும். இது பொருளாதார வளர்ச்சியில் சிக்கலை

உண்டாக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் மாற்றம் நிகழ இது வழி வகுக்கும். பள்ளி, கல்லூரிகளின் எண்ணிக்கை குறையும்.

## என்ன செய்யலாம்?

"இந்தச் சவால்கள் இந்தியாவுக்கு ஏற்பட இன்னும் சில ஆண்டுகள் ஆகும் என்று அரசுகள் அலட்சியமாக இருக்கக் கூடாது" என்கிறார் இந்திய மக்கள்தொகை அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநரான பூனம் முத்ரேஜா. "இவற்றைச் சமாளிப்பதற்கு இப்போதே திட்டமிட வேண்டும். எதிர்காலத்திற்கான விரிவான அணுகுமுறைகள் தேவை. அதற்காக, அனைவரையும் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதில் எந்தப் பயனும் இல்லை. இந்தியாவில் அதிகமான குழந்தைகளைப் பெறுவது பெரும்பாலான குடும்பங்களுக்குப் பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றது. ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகள் கருவுறுதல் சவால்களைச் சமாளிக்கும் வகையில், குழந்தைப் பராமரிப்புக்குக் குறைந்த செலவில் ஏற்பாடுகள் செய்கின்றன. குழந்தைகள் சுகாதாரத்தில் அரசுகள் அதிகம் முதலீடு செய்து சாமானியக் குடும்பங்களை ஆதரிக்கின்றன. தென் கொரிய அரசு குழந்தைப் பேறு தொடர்பான அத்தனை செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறது. இந்தியாவும் இதைப் பின்பற்றலாம்" என்கிறார் அவர்.

மேலும், "கருவுறுதல் விகிதங்கள் வீழ்ச்சியடைவதைக் கட்டுப்படுத்தக்கூடிய புதிய பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். முக்கியமாக, தனிமனித வருமானத்தைப் பெருக்குவது, அனைவருக்குமான பணி வாய்ப்புகளைப் பெருக்குவது, பணிப் பாதுகாப்பு, பெண்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது, பாலினபேதத்தைத் தவிர்ப்பது, கல்வியறிவு, சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியச் சீர்திருத்தங்கள் போன்ற கருவளம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்கும் திட்டங்கள் தேவை" என்கிறார் பூனம் முத்ரேஜா.

இது மிகவும் முக்கியமானது. தனிக் குடும்ப வாழ்க்கையில், கணவன், மனைவி இருவரும் பணிக்குச் செல்லும் வீடுகளில், வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் ஆண்களின் ஈடுபாடு அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் பெண்கள் தாய்மையைச் சுமையின்றி நிர்வகிக்க முடியும். கருவுறுதலை விரும்பி ஏற்க முடியும்.

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ அஹ்மதுல்லாஹ் காஷிஃபீ காஸிமீ

**11. திருகுர்ஆன் ஓதும்போது**

உங்கள் வாய்கள் குர்ஆனின் வழிகளாகும். எனவே அதை மிஸ்வாக் செய்வதின் மூலம் மணமாக்கி வையுங்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்
(நூல் : இப்னுமாஜா 291, பக்கம் - 25)

**12. நோன்பு நோற்றிருக்கும் போதும்**

"நோன்பாளியின் நற்குணங்களில் ஒன்று மிஸ்வாக் செய்வதாகும்." அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல் : இப்னு மாஜா - 1677, கன்ஜுல் உம்மால் 23861 பாகம் - 8, பக்கம் - 315)

"நபி (ஸல்) அவர்களை நோன்பு நோற்ற நிலையில், எண்ணற்ற முறைகள் மிஸ்வாக் செய்வதை நான் கண்டுள்ளேன்" என்று ஹள்ரத் ஆமிர் இப்னு ரபீஆ (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : திர்மிதீ 725, புகாரி 1929)

(ஷாஃபியாக்கள் ஜவாலுக்கு (உச்சத்திற்கு) முன்பு வரை மிஸ்வாக் செய்து கொள்ளலாம்.)

**13. பற்கள் மஞ்சளாவிடும்போது**

மக்கள் நபி (ஸல்) அவர்களிடத்தில் மிஸ்வாக் செய்யாமல் வருவார்கள். அதைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் பற்கள் மஞ்சனித்த நிலையில் மிஸ்வாக் செய்யாமல் வருகிறீர்கள். எனது உம்மத்துக்கு சிரமம் ஏற்படும் என்ற அச்சம் மட்டும் இல்லையென்றால் ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் ஒளுவைப் போன்று மிஸ்வாக் செய்வதை கடமையாக்கியிருப்பேன்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆமிர் (ரளி) அவர்கள்
(நூல் : மஜ்மஉஜ்ஜவாயித் 1120, தப்ரானீ 1301)

**14. வாயில் துர்நாற்றம் ஏற்படும்போது**

நபி (ஸல்) அவர்கள் தம் சபையினரில் வாய் துர்வாடையுடையவரை கண்டால் மிஸ்வாக் செய்ய கட்டளையிடுவார்கள். (நூல் : கஷ்புல் ஃகும்மா, பக்கம் - 47)

**15. ஏதேனும் சபை மற்றும் கூட்டத்தில் கலந்து கொள்ளும்முன்**

**16. அமைதியாக இருப்பதினால் அல்லது தூங்குவதினால் ஏற்படும் துர்நாற்றத்தின் போதும்**

**17. வாடையுள்ள ஏதேனும் பொருளை சாப்பிட்ட பின்பு**
**18. ஹதீஸ்களை வாசிக்கும்போது**
**19. ஹதீஸ் பாடம் நடத்தும்போது**
**20. திக்ர் செய்வதற்கு முன்பு**
**21. கஃபா அல்லது ஹதீமில் நுழையும்போது**
**22. உடலுறவுக்கு முன்பு**
**23. பசி அல்லது தாகம் ஏற்படும்போது**
**24. ஸஹர் நேரத்திலும் (அபூநயீம்)**
**25. தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழும்போது**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹுதைபா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி 66 பாகம் - 1, முஸ்லிம் 220 பாகம் -1)

**26. மரணத்தின் அறிகுறிகள் தென்படும்போது**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி 4438)

**27. உணவு உண்ணுவதற்கு முன்**

(நூல் : அத்தர்கீப் வத்தர்ஹீப், சுனனே குப்ரா 15000)

**28. இஹ்ராமுடைய நிலையில்**

(நூல் : மஜ்மஉஜ்ஜவாயித் 5424, சுனனே குப்ரா 8932
பாகம் - 5, பக்கம் 95)

**29. வித்ருக்கு பின்**

(நூல் : உம்தத்துல் காரி, பாகம் - 10, பக்கம் - 38)

**30. விரும்பும் நேரத்தில் மிஸ்வாக் செய்து கொள்ளலாம்.**

மிஸ்வாக் செய்வது நபி வழி. எனவே நீங்கள் விரும்பும் நேரத்தில் மிஸ்வாக் செய்யுங்கள்." (நூல் : கன்ஜுல் உம்மால் 26163)

**மிஸ்வாக் குச்சி இல்லையெனில் என்ன செய்ய வேண்டும்?**

(மிஸ்வாக் இல்லையெனில்) விரல் மிஸ்வாக்கின் அந்தஸ்தில் இருக்கிறது. அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரளி) அவர்கள் (நூல்: சுனனே குப்ரா 179, பாகம் - 1, பக்கம் - 41)

ஒரு அன்சாரி ஸஹாபி, நபி (ஸல்) அவர்களிடம், "தாங்கள் மிஸ்வாக் செய்வதை ஆர்வமூட்டினீர்கள். மிஸ்வாக் இல்லையெனில் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவ, நபி (ஸல்) அவர்கள் "உன்னுடைய விரல் உன்னுடைய மிஸ்வாக். மிஸ்வாக் செய்வதின் நிய்யத்து செய்து பற்களின் மீது விரலை தேய்த்து விட்டால் அதன் மூலம் மிஸ்வாக்கின் நன்மை கிடைத்து விடும்" என அருளினார்கள். (நூல் : சுனனே குப்ரா 182; பாகம் - 1; பக்கம் - 41)

(தொடரும்)

# மார்க்கக் கலாசாலையின் கட்டம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலி ஹஸ்ரத் (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்ட "அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முழுமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

**Name:** AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST

**INDIAN BANK :** A/c. No. **429079510**

**BRANCH :** Madurai KARUPPAYURANI

**IFSC Code :** IDIB000K136

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

# J.M.S.ARABIC COLLEGE


**Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,**
**MADURAI - 625020.**

தலைவர் 94430 66539

செயலாளர் 97900 64365

பொருளாளர் 99948 57786

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் – 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com


A Product of Seyadu Spinning Mills
Whites
As pure as it gets.
Seyad
Garments
SHIRTS
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003. PH.: 0462 2323086

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
**(31 - 33 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
**(18 - 21 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

# ஆலிம்களின் தொடர் இழப்பு! நம் சமுதாயத்திற்கான பேரிழப்பு!!

மவ்லானா மவ்லவீ முஃப்தீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ ஃபாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

**ஆலிம்கள் இந்த சமுதாயத்தின் தூண்களாவார்கள். நபிமார்களின் வாரிசுகளாவார்கள். உலகத்தினுடைய காசு - பணங்களுக்காக இடம் விட்டு இடம் மாறக்கூடிய சிந்தனைகள் ஆலிம்களிடத்தில் கிடையாது. எவ்வளவு குறைவான ஊதியம் பெற்ற போதும், மக்களின் நலனுக்காக, மார்க்கத்தின் உயர்வுக்காக அயராது உழைக்கக்கூடியவர்கள் தான் ஆலிம்கள். அவர்கள் எந்த நிலையிலும் தங்கள் குடும்ப விசேஷ நிகழ்வுகளைக் கூட பொருட்படுத்தாமல் மஹல்லாவின் நலனுக்காக தங்களின் வாழ்க்கையை தியாகம் செய்பவர்கள். சில ஆலிம்களோ தங்களின் மஹல்லாவையும் தாண்டி, முழு ஊருக்காகவும், முழு மாநிலத்திற்காகவும், முழு சமுதாயத்திற்காகவும் தங்களின் சிந்தனைகளை சிதறவிட்டவர்கள். இப்படிப்பட்ட மனத் தூய்மை நிறைந்த இறைநேசர்களுடைய அந்தஸ்தைப் பெற்ற உலமா பெருமக்கள் சமீப காலத்தில் நம்மை விட்டும் அடுத்தடுத்து தொடர்ச்சியாக சென்று கொண்டிருப்பது நம் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பேரிழப்பு என்பதை நம் சமுதாய முன்னோடிகள் கொஞ்சம் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

அந்த வரிசையில்...

வேலூர் மதரஸா அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபு கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் மர்ஹூம் முஹம்மது இஸ்மாயீல் திஹ்லவீ (ரஹ்) அவர்களின் உடன்பிறந்த சகோதரரும், சென்னை திருவல்லிகேணி வட்டார ஜமாஅத்துல் உலமா சபையின் முன்னாள் செயலாளரும், சமூகசேவைகளில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், மக்களுக்கு முன்னால் தன் உயர்வைக் காட்டிக் கொள்ளாமல் பணிவாளராகவும், பண்பாளராகவும் விளங்கி, சுமார் 24 ஆண்டுகளாக சென்னை T.நகரின்

இரண்டு பள்ளிவாசல்களிலும் தலைமை இமாமாகப் பணியாற்றி, மக்களின் அன்பையும், பாசத்தையும் பெற்று, உலகின் புனிதத் தலங்களாகிய மக்கா, மதீனாவிலும் தன் சேவைகளை விரிவடைய செய்து பெரும் பணியாற்றிய ஆலிம் பெருந்தகை மவ்லானா மவ்லவீ **அல்ஹாஜ் முஹம்மது இல்யாஸ் காஷிஃபீ ஹள்ரத்** அவர்கள் 04.07.24 அன்றும்,

மதுரை விராதனூரை சொந்த ஊராகக் கொண்டு மதுரை மாவட்டத்தின் பல பள்ளிவாசல்களில் இமாமாக பணியாற்றி விட்டு, இறுதியாக மதுரை கரிமேடு பள்ளிவாசலில் இமாமாகவும், மக்களின் சிறந்த பணியாளராகவும் பணியாற்றிய **மவ்லானா அப்துல் ஹமீது இன்ஆமி ஹள்ரத்** அவர்கள் 05.07.24 அன்றும்,

தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபையின் ஆலோசகரும், இஸ்லாமிய விழிப்புணர்வு கழகத்தின் தலைவரும், சென்னை வடபழனி "மஸ்ஜிதே ஹக்கானி" பள்ளிவாசலில் நீண்ட நெடுங்காலமாக தலைமை இமாமாக பணியாற்றியவருமான **மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் G.M. தர்வேஷ் ரஷாதீ ஹள்ரத்** அவர்கள் 06.07.24 அன்றும் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

மவ்லானா தர்வேஷ் ரஷாதீ ஹள்ரத் அவர்கள், கரூர் மாவட்டம் பள்ளபட்டியை தன் சொந்த ஊராகக் கொண்டிருந்தாலும், ஹள்ரத் அவர்களின் சேவைகள் தமிழகம் முழுவதும் எல்லாத்தரப்புகளிலும் பரவியிருந்தது மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. அரசியல் ரீதியாக இருந்தாலும், மார்க்கம் சார்ந்த எந்த விழாவாக இருந்தாலும் ஹள்ரத் அவர்கள் தங்களின் முழு தியாகத்தையும் அதில் பதித்திருக்கிறார்கள். மக்களின் பிரச்சனைகளுக்காக தங்களின் நேரத்தையும் - காலத்தையும், இரவு - பகல் பார்க்காமல், பசி - தூக்கம் பார்க்காமல் தியாக உணர்வோடு செயல்பட்டிருக்கிறார்கள்.

மௌத்திற்கு முதல் நாள் கூட, "அல்லாஹ் என்னுடைய இந்த நாட்களில் தூக்கத்தை எழுதவில்லை போல" என்று சொல்லியவாறே தன் மீது நம்பப்பட்ட பணிகளை முழுமையாகச் செய்திட வேண்டும் என்ற வேகத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். மரணம் சமீபித்து விட்டது என்பதை அறிந்ததாலோ என்னவோ தனது கடைசி ஜும்ஆ உரையில், மனிதனின்

மௌத் சம்பந்தமான பல்வேறு விஷயங்களை விரிவாகவும், ஆழமாகவும் மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்னும், பல சேவைகளை மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் சிறிதளவும் ஓய்வை எதிர்பார்க்காமல் ஓடிக் கொண்டேயிருந்தார்கள்.

சமுதாயம் சார்ந்த எல்லாத் துறைகளிலும் கால் பதித்தவர் என்று சொன்னால் அது அவருக்கு மிகையான சொல்லல்ல. குறிப்பாக, ஹஜ் கமிட்டியின் மூலமாக சென்னையிலிருந்து ஹஜ்ஜுக்கு புறப்படக்கூடிய ஹாஜிகளை விமான நிலையத்தி லிருந்து வழியனுப்பி வைப்பதும், அவர்கள் மீண்டும் வரும் போது அவர்களை அன்பாக வரவேற்பதும் அவரின் உயர்தரமான மக்களால் போற்றப்படக்கூடிய மிக உயர்ந்த சேவையாகும்.

இரவு சுமார் 10 மணிக்கு உடல்நிலையின் மாற்றத்தைக் கருத்திற்கொண்டு, மருத்துவமனைக்கு குடும்பத்தினர் அழைத்தும் கூட, "எல்லோரும் படுத்துக் கொள்ளுங்கள். காலையில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி, அல்லாஹ்வின் நாட்டப்படி மரணத்தை ஏற்றுக் கொண்டார்கள். கடைசி நாட் களில் ஓய்வுகளை முழுமையாக தவிர்த்துவிட்டு, நிரந்தர ஓய்வுக் காக சுவனத்தின் வாசனைகளை நிரம்பப் பெற்றிருந்த மண்ணறை வாழ்க்கையை மிக சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள்.

ஜனாஸாவை சென்னை வடபழனி பள்ளிவாசலிலிருந்து வாகனத்திற்கு எடுத்துச் செல்லும்வரை கூடியிருந்த மக்கள் வெள்ளம் சொல்ல முடியாதது. முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர் களும், மஹல்லாவாசிகளும், மற்றவர்களும், அரசியல்வாதி களும், காவல்துறை அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் அன்னாரின் புனித முகத்தைப் பார்ப்பதற்காக திரண்டு வந்து கொண்டிருந்தது அப்பகுதி மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதற்குப்பின்னால், அவர்களின் சொந்த ஊரான கரூர் மாவட்டம் பள்ளபட்டிக்கு அன்னாரின் உடல் வந்து சேர்ந்ததற்கு பின்பும் தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்களின் கூட்டம் அலைமோதத் துவங்கியது.

அன்றைய மக்ரிபு தொழுகைக்குபின்பு, நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் தமிழகத்தின் தலைசிறந்த மூத்த உலமாபெருமக்கள் மட்டும் நேரத்தின் அருமை கருதி, சிற்சில நிமிடங்கள் பேச வைக்கப்பட்டனர்.

அல்லாஹ் அன்னாருக்கும், அவர்களின் மரணத்திற்கு முன்பும், பின்பும் நமக்கு தெரிந்தும், தெரியாமலும் சமீப காலத்தில் நம்மை விட்டும் விடை பெற்றுச் சென்ற தமிழகத்தின் அனைத்து உலமாபெருமக்களுக்கும் தன் உயர்தரமான ரிழாவையும், லிகாவையும் நஸீபாக்கித் தந்தருள்வானாக!

அந்த ஆலிம்களின் எல்லா சேவைகளையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டு, அவர்களை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த குடும்பத்தினருக்கும், மஹல்லாவாசிகளுக்கும், அவர்களின் மூலமாக மார்க்கத்தை கற்றுக் கொண்ட அவர்களின் நெருக்கமான அனைத்து நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும், அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் "ஸபுரன் ஜமீல்" என்ற அழகிய பொறுமையை தந்தருள நாமும் துஆ செய்கிறோம். இதை படிக்கும் வாசக பெருமக்களே! நீங்களும் அந்த பெருமக்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களின் மறுமை பேறுகளுக்காகவும், அவர்களின் வாரிசுகளின் பாதுகாப்பான, கண்ணியமான வாழ்வுக்காகவும் அதிகமதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் நம் துஆக்களை கபூல் செய்வானாக. ஆமீன்.

## வறுமை நபியவர்கள் மீதான நேசத்தின் அடையாளமே!

ஹள்ரத் அபூஸஈத் குத்ரீ (ரளி) அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தமது வறுமையையும் தனக்கு ஏற்பட்டுள்ள தேவையையும் எடுத்துக் கூறியபோது,

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "அபூஸஈத்! பொறுமை கொள்வீராக! வெள்ளப் பெருக்கின் போது வெள்ளம் ஆற்றின் மேல் பகுதியிலிருந்தும், மலை முகட்டிலிருந்தும், பள்ளத்தை நோக்கிப் பாய்வதைப் போல் உங்களில் என் மீது நேசங் கொண்டவருக்கு வறுமை வேகமாக வந்தடையும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : முஸ்னத் அஹ்மத்)

# நோவில்லா மரணம் (Euthanasia) இஸ்லாம் கூறுவதென்ன?

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

அல்லாஹ் மனிதனைப் படைத்து, ரூஹ் என்னும் உயிரை கொடுத்து இயக்கி, ஒரு குறிப்பிட்ட காலம் வாழச் செய்த பின், உயிரை எடுத்துக் கொள்கிறான்.

களிமண்ணால் படைக்கப் பட்ட உடல், மண்ணில் கலந்து விடுகிறது.

ஆகவே, மனித உடல் இறைவனின் சொத்து. இதில் மனிதனுக்கு பங்கு ஏதுமில்லை. ஆகவே, உடலை பாதுகாத்து, சிதைவுகளைத் தடுத்து, பத்திர மாக உடலை திரும்ப அல்லாஹ் விடம் ஒப்படைப்பது மனித னின் கடமையாகும். ஆகவே மனித உடலைப் புனிதமான தாக அல்லாஹ் ஆக்கியுள்ளான்.

## முதல் கொலை

முதல் மனிதர் நபி ஆதம் (அலை) அவர்களின் மகன்கள், ஹாபில், காபில்; ஹாபிலை, காபில் கொலை செய்துவிட்டார். இதுவே உலகில் நிகழ்ந்த முதல் கொலை. ஆகவே, "(உலகில்) ஒரு கொலை நடைபெறும் போது அந்தக் கொலையின் பாவத்தில் ஆதம் (அலை) அவர்களுடைய முதலாவது மகனுக்கு (காபில்) ஒரு பங்கு இருக்கவே செய்யும்" (நபி மொழி)

முதல் கொலை நிகழ்வை குறிப்பிட்டு, திருகுர்ஆன் கூறுகிறது.

**"இதன் காரணமாக, கொலைக்கு பகரமாகவோ, பூமியில் குழப்பத்தி(னை ஒடுக்கு வத)ற்காகவோ தவிர, ஒருவர் மற்றொருவரைக் கொலை செய்தால் அவர் எல்லா மனிதர் களையும் கொன்றவரைப் போன்றவர் ஆவார். ஒரு மனிதரை உயிர் வாழச் செய்தவர் எல்லா மனிதர்களையும் உயிர் வாழச் செய்தவரைப் போன்றவர் ஆவார்."** - அல்குர்ஆன் [5 : 32]

**"அல்லாஹ் தடுத்துள்ள எந்த மனிதரையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்கள்."**

- அல்குர்ஆன் (6 : 151)

**"[எவரையும் கொலை செய் வது ஆகாதென்று] அல்லாஹ் தடுத்திருக்க நீங்கள் எம்மனி தனையும் கொலை செய்து விடாதீர்கள்."**

- அல்குர்ஆன் (17: 33)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.

அவை :

1. அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது.
2. முறையின்றி கொல்லக் கூடாதென அல்லாஹ் புனிதப்படுத்திய உயிரைக் கொலை செய்வது.
3. சூனியம் செய்வது.
4. வட்டியைப் புசிப்பது.
5. அனாதையின் செல்வத்தை உண்பது.
6. போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது.
7. இறைநம்பிக்கை கொண்ட அப்பாவிகளான பத்தினிப் பெண்கள் மீது அவதூறு கூறுவது."

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்.
(ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

## தற்கொலை

"உங்களை நீங்களே கொலை செய்யாதீர்கள். அல்லாஹ் உங்களிடம் மிகவும் கருணை உடையவனாக இருக்கின்றான்."

- அல்குர்ஆன் (4 : 29)

மனித உடல் அல்லாஹ்வுக்குரியது. ஆகவே அதனை நன்கு பராமரிப்பது, பாதுகாப்பாக வைத்துக் கொள்வது, மனிதனின் கடமையாகும். ஆகவே, தற்கொலை ஒரு பெரிய பாவமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒருவர் எந்தப் பொருள் மூலம் தற்கொலை செய்து கொள்கிறாரோ, அதன்மூலம் அவர் மறுமையில் வேதனை செய்யப்படுவார்."

அறிவிப்பவர் : ஹள்ரத் ஸாபித் பின் அள்ளஹ்ஹாக் (ரளி) அவர்கள்.
(ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

"யார் கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறாரோ, அவர் அந்த கூரிய ஆயுதத்தை தமது கையில் வைத்துக் கொண்டு நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக தமது வயிற்றில் தாமே குத்திக் கொண்டிருப்பார். யார் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் விஷத்தை கையில் வைத்துக் கொண்டு நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார்."

அறிவிப்பவர்; ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்,
(ஆதாரம் : இப்னு மர்தவைஹி)

உங்களுக்கு முன் இருந்தவர்களில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. அவரால்

வலியைப் பொறுக்க முடிய வில்லை. எனவே அவர் ஒரு கத்தியை எடுத்துத் தனது கையை வெட்டிக்கொண்டார். அவர் இறக்கும் வரை இரத்தம் நிற்காமல் கொட்டிக் கொண்டே யிருந்தது. அல்லாஹ் "என் அடியான் தனது விஷயத்தில் (அவசரப்பட்டு) என்னை முந்திக் கொண்டான். அவனுக்குச் சொர்க்கத்தை தடை செய்து விட்டேன்" என்று கூறினான்.

அறிவிப்பவர்: ஹள்ரத் ஜீன்தப் பின் அப்துல்லாஹ் (ரளி) அவர்கள், (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹ் தடை செய்ததை, அது தடை செய்யப்பட்டது என அறிந்து கொண்டே, தடையை மதிக்காமல் துணி வோடு தற்கொலை செய்வது பெரிய பாவமாகும். தண்டனை, நரகமேயாகும் என அல்லாஹ் எச்சரிக்கின்றான். இதிலிருந்து மனிதன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## நோவில்லா மரணம்:

Euthanasia என்ற சொல்லுக்கு பரிவு அல்லது கருணைக் கொலை என்று பொருள் கொள்ளலாம்.

இஸ்லாம் இதை அனுமதிப்ப தில்லை. உயிர் வாழத் தகுதி யில்லைஎன்பதுமில்லை. மேலை நாட்டவர்கள் நோவில்லா மரணத்தை ஆதரிக்கின்றனர். ஏனெனில், நேரிய வழிமுறை களை அறியாதவர்களாக இருப்பதே அதற்குக் காரணம். உதாரணமாக, முதலாளித்துவக் கொள்கை, வட்டியில் இயங்கும் வங்கி நடவடிக்கைகள், ஓரினச் சேர்க்கை, மதுகுடித்தல், திருமண மின்றி சேர்ந்து வாழ்ந்து குழந்தை பெறுதல் ஆகியன அவர்களின் வழிமுறைகள். ஆனால், இஸ்லாமிய வழிமுறை கள், படைத்த அல்லாஹ்வால் வழங்கப்பட்டவை. நடைமுறைக்கேற்றவை, புனிதமானவை, எளிதானவை, நேரானவை, பயன்மிக்கவை!

முதுமையுற்றவர்கள், அல்லது புற்றுநோய் போன்ற சிகிச்சை பலன் தர முடியாத நோயாளிகள், வலி, வேதனைக்கு உட்பட்டு சிரமப்படுபவர்கள் சிரமத்தை குறைப்பதற்காக, அவர்களை மரணிக்கச் செய்ய லாம் என்பதே நோவில்லா மரணமாகும். இம்முறை தவ றானது, நேர்மையற்றது என்பத தால் இது பற்றி மருத்துவர்களும், மற்ற பிற அறிஞர்களும் விவாதம் மேற்கொள்கின்றனர். கலந்துரையாடுகின்றனர்.

உலகின் பல பாகங்களில், இதற்குச் சட்டவடிவம் கொடுக்க விரும்புகின்றனர். இதற்கு இவர்கள் கூறும் காரணங்கள் சிலவாகும்.

நோயாளியின் சிரமம் குறைக்கப்படுகிறது, நோய் தீராது என்பதால், நோயாளிகள்

வலிவேதனையுடன்வாழ்வதை விட, மரணிப்பது மேலானது!

கி.பி. 2021ஆம் ஆண்டு பல நாடுகள், நோவில்லா மரணத்தை ஆதரித்து, அதற்கு சட்ட அனுமதி வழங்கியுள்ளன. அவை :

நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க், கனடா, ஸ்பெயின் ஆகியன.

"மருத்துவர் உதவும் தற் கொலை" (Physician Assisted Suicide) என்பதை ஆதரித்து நோவில்லா மரணம் சட்டப்படி செல்லும் என்று அனுமதி வழங்கிய நாடுகள்:

ஜெர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் அமெரிக்காவின் பல மாநிலங்கள் : கலிபோர்னியா, ஒரிகான், வாஷிங்டன் ஆகியன.

மேலும், மருத்துவ விஞ் ஞானம் நன்கு வளர்ந்து, மனிதர் களின் வாழ்நாட்கள் அதிகரித் துள்ளன என்ற போதிலும், எல்லோருடைய வாழ்வு நலம் சிறப்புற்றுள்ளது என்று கூற முடியாது. ஆகவே, நீண்ட நாள் வாழ்ந்துகொள்ள முடியும் என்றாலும், நோய் தொட்டு, பல சிரமங்களையும், வலி வேதனைகளையும் தரும் இறுதி நோயை சிலர் பயந்து கொள் கின்றனர். தங்களது தனிமை வாழ்வின் சுதந்திரத்தை இழந்து விடுவோம் என்று கருதுகின்றனர். இவர்களுக்கு நோவில்லா மரணத்தை வழங்குவது தவறில்லை என்று கருதப்படுகிறது.

ஆகவே, நோவில்லா மரணம் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. "தேசிய மருந்து நூலகம்" (National Library of Medicine) என்ற அமைப்பு 6860 மருத்துவ அறிஞர்களை ஆய்வுக்கு உட் படுத்தியது. பல வினாக்களை தொகுத்து வழங்கி அறிஞர் களின்விடைகள் ஆய்வு செய்யப் பட்டன. 78% மருத்துவர்களே விடை தந்தனர். 2005 பேர்கள் நோவில்லா மரணத்திற்கு உடன் பட்டனர் என்று தெரிய வந்தது.

5 வருட இடைவெளியில் மூன்று ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

நோவில்லா மரணம், மருத்துவர் உதவும் தற்கொலை ஆகியன.

கி.பி. 1990இல் 18% கி.பி.1995இல் 41% ஆக உயர்ந் தது. கி.பி. 2001இல் 54%, கி.பி. 2005இல் 80% ஆக உயர்ந்தது.

மருந்துகள் மூலம் நோவில்லா மரணம் (barbiturates - தூக்க மருந்துகள் மற்றும் muscle relaxants - தசை இளகும் மருந்துகள்)

கி.பி. 1995இல் 73%

கி.பி.2001இல் 71%

கி.பி. 2005இல் 99%

பரிந்துரை செய்யப்படாத மருந்துகள் மூலம் நோவில்லா மரணம்.

(Opiods - வலி தீர்க்கும் மருந்துகள் மூலம்)

கி.பி. 1995
கி.பி. 2001 } 30% க்கும் குறைவு.
கி.பி. 2005

தகவல் தராத நோவில்லா மரணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நோவில்லா மரணம் என்று கூறாமலும் மருத்துவர் மரணத்தைத் தூண்டுவதும் உண்டு.

## இந்தியா

கி.பி.1986ஆம் ஆண்டில், நோவில்லா மரணம் பற்றியக் கருத்துகள் உருவாகின. மகாராஷ்டிரா மாநிலத்தில், காவல் துறையில் பணியாற்றிய மாருதி ஸ்ரீபதி துபல் என்ற காவலர் தற்கொலைக்கு முயன்றார். ஆகவே இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 309-ன்படி, அவர் கைது செய்யப்பட்டார். மும்பை உயர் நீதிமன்றம், சட்டம் 21-ன் படி, உயிருக்கு உத்தரவாதம் தரும் சட்டம், மரணிப்பதற்கும் உரிமை வழங்குகிறது" என்றும் உறுதிப்படுத்தியது.

இதைத் தொடர்ந்து, மரண உரிமை கோரி, பலர் நீதி மன்றங்களை அணுகினர். இதனைத் தொடர்ந்து கி.பி. 2018இல் ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றக் குழு, பயனற்ற வாழ்வில் வாழ்ந்து கொள்ளவும் (Vegetative State) அல்லது இறுதி நோயில் உழல்பவர்கள், மென்மையான நோவில்லா மரணத்தை செயல்படுத்தவும் இந்திய அரசுக்கு அனுமதி அளித்தது."

மரணம் மற்றும் மரணிப்பது பற்றிய மக்களின் எண்ணப் போக்கு (attitude) நோவில்லா மரணத்தைஏற்றுக்கொள்ள வழி ஏற்படுத்தியது. மத நம்பிக்கையில் வலுவற்றவர்கள், நோவில்லா மரணத்தை ஏற்பதில் ஊக்கம் பெற்றனர்.

## இஸ்லாம் கூறுவதென்ன?

இஸ்லாமிய ஷரீஅத். சட்டங்கள், மனித உயிரை மாய்ப்பதற்குரிய காரணங்களைக் குறிப்பிடுகின்றன.

"நம்பிக்கையாளர்களே! கொலை செய்யப்பட்டவர்களுக்காக [பழிவாங்குவது] உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. தன்னுரிமை பெற்ற [சுதந்திரமான] மனிதன், தன்னுரிமை பெற்ற மனிதனுக்குப் பகரமாகவும்; அடிமை, அடிமைக்குப் பகரமாகவும்; பெண், பெண்ணுக்குப் பகரமாகவும் [கொலைக்குக் கொலை] பழி வாங்கப்படுவர். இருப்பினும், [கொலை செய்யப்பட்ட] அவனுடைய சகோதர [பாத்தியஸ்தர்] மூலம் [கொலை செய்த] இவனுக்கு ஏதேனும் மன்னிப்பளிக்கப்பட்டால், அப்போது [கொலையாளி] நல்ல வழக்க முறையைப் பின்பற்றி [அதற்கான ஈட்டுத் தொகை

முதலியவற்றை] நன்றியறித லுடன் [கொலை செய்யப்பட்ட] அவ[னுடைய பாத்தியஸ்த]ரின் பால் நிறைவேற்றுதல் வேண்டும். இது உங்கள் ரப்பின் புறத்திலி ருந்து கிடைத்த சலுகையும், அருளுமாகும். இதன் பின்ன ரும் எவராவது வரம்பு மீறுவாரா யின் அவருக்கு துன்பமிகு வேதனை உண்டு.''

– அல்குர்ஆன் (2 : 178)

''[எவரையும் கொலை செய் வது ஆகாதென்று] அல்லாஹ் தடுத்திருக்க நீங்கள் நியாய மின்றி கொலை செய்து விடாதீர் கள்.'' - அல்குர்ஆன் [17:33]

ஆகவே, நியாயமான முறையில் கொலை செய்ய இஸ்லாம் அனுமதிக்கிறது.

நபி(ஸல்)அவர்கள்கூறினார் கள் : ''அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என உறுதிமொழி கூறிய முஸ்லிமான எந்த மனிதரை யும் மூன்று காரணங்களில் ஒன்றை முன்னிட்டே தவிர வேறெதற்காகவும் கொலை செய்ய [மரண தண்டனை யளிக்க] அனுமதி இல்லை.

அவை:

1. திருமணமானவன் விபச்சாரம் செய்வது,
2. ஒரு மனிதரைக் கொலை செய்ததற்குப் பதிலாகக் கொலை செய்வது,
3. ஜமாஅத் எனும் சமூகக் கட்டமைப்பை விட்டு வெளி யேறி, தமது மார்க்கத்தை கைவிட்ட [தேசத்துரோகமும், மார்க்க விரோதமும் செய்த]வன்.''

அறிவிப்பவர்: ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்,
(ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

உயர்ந்தோன் அல்லாஹ் மார்க்க சட்ட அனுமதியின்றி யாரையும் கொலை செய்வதற்குத் தடை விதிக்கின்றான். விபச்சாரத்திற்கு தண்டனை, கல்லெறிந்து குற்றவாளியைக் கொல்வதாகும்.

## களா, கத்ர் – விதி

அல்லாஹ் விதித்துள்ள விதியை நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்.

நிச்சயமாக, முதலில் அல்லாஹ் எழுதுகோலைப் படைத்து, அதை நோக்கி 'எழுது' என்று கூறினான். 'இறைவனே! எதை எழுத?' என்று அது கேட்டது. ''மறுமை நாள் வரையிலுள்ள ஒவ் வொரு பொருளின் விதிகளை யும் எழுது'' என்று இறைவன் கூறினான் என்று நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹள்ரத் உபாத துப்னுஸ் ஸாமித் (ரளி) அவர்கள்
(ஆதாரம்: அபூதாவூத், திர்மிதீ)

"நிச்சயமாக, அல்லாஹ் ஒவ்வோர் ஆன்மாவையும் படைத்து, அதன் வாழ்வையும், அதன் இறப்பையும், அதன் உணவையும், அதன் சோதனை களையும், அதன் குணங்களை யும் எழுதி விதித்து விடு கிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்,
(ஆதாரம்: திர்மிதீ)

"படைப்புகளின் விதியை, வானங்களையும், பூமியையும் படைப்பதற்கு 50,000 ஆண்டு களுக்கு முன்பே அல்லாஹ் எழுதி விட்டான். அப்பொழுது அவனுடைய அர்ஷு (இறை அரியணை) தண்ணீர் மீது இருந்தது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹள்ரத் இப்னு அம்ருப்னுல் ஆஸ் (ரளி) அவர்கள்
(ஆதாரம்: முஸ்லிம், திர்மிதீ)

"மனிதனுக்குரிய தன்மை அல்லாஹ்வுடைய விதியின் மீது திருப்தியுறுவதாகும். மனிதனுக்குரிய தீமை அவன் அல்லாஹ்விடம் நன்மையைக் கோருவதை கைவிடுவதாகும். மேலும், மனிதனுக்குரிய தீமை அவன் அல்லாஹ்வுடைய விதியைக் கொண்டு அதிருப்தி யுறுவதாகும்" என்று


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹள்ரத் ஸஃது்னு அபீவக்காஸ் (ரளி) அவர்கள் (ஆதாரம்: திர்மிதீ)

ஆகவே, மனிதன் விதியின் மீது முழு நம்பிக்கை கொள்வதும், அதன்படியே அவன் வாழ்வின் முடிவும் நடைபெறுகிறது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, நோவில்லா மரணம் என்பது, அல்லாஹ்வின் விதிக்கு மாறானது என்றே கருத வேண்டும்.

விதி என்பதின் மீது உறுதியான நம்பிக்கை கொள்ளும் போது, மன அமைதி தோன்றக் காணலாம். இடர்களை எதிர் கொள்ளும் மனநிலை ஏற்படுவதை உணரலாம். வயது முதிர்ந்து, இறுதி நோய் என எண்ணிக்கொண்டு, வாழ்வது தகுதியற்றது, தேவையுமில்லை என்ற எண்ணம் இஸ்லாத்திற்குப் புறம்பானது. தற்கொலை மூலம் நோயின் வலி வேதனைகள் தரும் துன்பத்திலிருந்து விடுதலை பெறலாம் என்ற எண்ணம் தவறானது.

"இஸ்லாமிய மருத்துவம்" என்ற தலைப்பில் மேற்கொண்ட முதல் சர்வதேச மாநாடு கி.பி 1981ஆம் ஆண்டில் நடைபெற்றது. குவைத் மருத்துவ விஞ்ஞானங்களின் இஸ்லாமிய அமைப்பு இம்மாநாட்டை நடத்தியது. மருத்துவ ஒழுக்கவியல் பற்றிய இஸ்லாமிய விதிமுறை, இம்மாநாட்டின் தீர்மானங்களுக்கு ஒப்புதல் தந்தது. இதன்படி, "தற்கொலை போன்று கருணைக்கொலை ஏற்புடையதல்ல" என்று கூறி, அதற்கு ஆதரவு தரவில்லை. கருணைக் கொலை, நாத்தீக எண்ணமாகும். ஒரு வாழ்விற்குப்பின் எதுவுமில்லை. அது வெறும் காலியிடம் எனக் கருதுவதன் விளைவேயாகும். சிகிச்சை பயனற்றது. வலி, வேதனைகள் தீராது என்பதால் கருணைக் கொலையை மேற்கொள்ளலாம் என்பதை ஏற்க முடியாது. ஏனெனில், மருந்து அல்லது உரிய மூளை அறுவை சிகிச்சை மூலம் வலி வேதனைகளை நீக்க முடியாது என்பது கிடையாது" என்று கூறப்பட்டது.

வலி, வேதனை பற்றிய மற்றொரு சிந்தனை குறிப்பிடத்தக்கது. ஏனெனில், பொறுமை மற்றும் இடர்களைத் தாங்கும் திறன் ஆகியன போற்றுதற்குரியவை, மேலும் வெகுமதிக்குரியவை என்று இஸ்லாம் கருதுவதேயாகும்.

**"நிச்சயமாக பொறுமையாளர்களுக்கு அவர்களுடைய கூலி கணக்கின்றியே [அதிகமாக] கொடுக்கப்படும்."**

- அல்குர்ஆன் (39 : 10)

நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது ஆணையாக! ஓர் இறை நம்பிக்கையாளரைத் தைக்கும் முள் உட்பட அவருக்கு ஏற்படும் துக்கம், கவலை, துன்பம், நோய், மன வேதனை ஆகிய எதுவாயினும், அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களில் சில வற்றை அவருக்காக அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை"

அறிவிப்பவர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள், (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

"உனக்கு ஏற்படும் கஷ்டங் களைப் பொறுமையுடன் நீ சகித்துக்கொள். நிச்சயமாக இது எல்லா காரியங்களைவிட வீர மிக்கச் செயலாகும்."

- அல்குர்ஆன் (31 : 17)

வலி, வேதனையால் அவதி யுறும் நோயாளி ஆன்மிகச் சிந்தனைகளால் தூண்டப்பட லாம். வலுவான ஆன்மிக மன நிலை, சிரமங்களைப் பொறுமை யுடன் ஏற்றுக்கொள்வதும், மறுமையில் மிகுந்த பலனைத் தரும் என்பதை நினைவு கூரச் செய்வதும் நோயாளிக்கு ஆறுதல் தருவனவாகும். இவ் வகை கருத்துக்கள் முடிவற்ற மறுமை வாழ்வை மறுப்பவர் களுக்கு, பொருளற்றதாகத் (Nonsense) தோன்றலாம். ஆனால் மறுமை வாழ்வை ஏற்றுள்ள முஸ்லிம் ஒருவருக்கு, கருணைக் கொலை, நிச்சய மாகப் பொருளற்றதேயாகும்!

## பொருளாதார நிலை

சிகிச்சை வெற்றி பெறாத நோயாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகியோரின் பராமரிப்பிற்கு அதிகப்பணம் தேவைப்படும். ஆகவே, இத்தகையோர் நோவில்லா மரணத்தை ஏற்பது அவர்களது உரிமை என்பதை விட 'இறப்பது கடமை' என்ற சிந்தனைக்குச் சிலர் உட்படு கின்றனர்.

மனித இயந்திரம், தேய்ந்து போய், பயனற்று விட்டது. ஆகவே அதனைப் பராமரிப்பது ஒரு தேவையற்ற சுமை. ஆகவே அதனைக் கால தாமதமின்றி, அகற்றி வைப்பது நல்லது எனக் கூறுகின்றனர். சமுதாயத்திற்கும் ஏற்றது என்றும் நம்புகின்றனர்.

இத்தகைய சிந்தனை ஏற்புடையதல்ல. இஸ்லாத் திற்கு முற்றிலும் எதிரானது. விலையை விட ஒரு பொருளின் மதிப்பு முக்கிய இடம் வகிக்கிறது.

முதிய, உடல்தளர்ந்த, உதவி யற்றவராக ஒருவர் திகழ்ந்தா லும் அவர் மதிப்பற்றவரல்ல. ஆகவே, அவருக்காக நேரத்தை யும், பணத்தையும் செலவிட விழைவது போற்றுதற்குரியது. இப்பணி, ஒருவரின் பெற்றோ

ரிடமிருந்து தொடங்குவதே இயற்கையானது, ஏற்றமிக்கது.

"(நபியே!) உங்களது இறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்று (கட்டளையிட்டிருப்பதுடன்)தாய், தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கிறான். உங்களிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்ட போதிலும், அவர்களை விரட்டவும் வேண்டாம். அவர்களை (நிந்தனையாகச்) "சீ" என்றும் சொல்ல வேண்டாம். அவர்களிடம் (எதைக்கூறிய போதிலும்) மிக்க மரியாதையாகவும், அன்பாகவும் பேசுங்கள்."

- அல்குர்ஆன் (17:23)

"அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடங்கள். அன்றி "என் இறைவனே! நான் குழந்தையாக இருந்த பொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே, நீயும் அவ்விருவர் மீதும் அன்பும், அருளும் புரிவாயாக) என்று நீங்கள் பிரார்த்தியுங்கள்." - அல்குர்ஆன் (17: 24)

பெற்றோர்கள் மீது இத்தகைய கவனம் செலுத்துவது நல்லொழுக்கம் நிறைந்த நடத்தையாகும் இதற்குரிய நற்கூலியை அல்லாஹ் இவ்வுலகத்திலும், மறுமை வாழ்விலும் வழங்குவான். நம்பிக்கைஎன்னும் ஈமான் கொண்டவர்கள் பெற்றோர்களுக்குச் செய்யும் பணிவிடையை ஒரு கடனாக எண்ணாமல், ஒரு முதலீடு என்றே கருதுவர். பணம், பொருள் மீது ஆசை வைப்பவர்களுக்கு, இது பொருளற்றதாகத் தெரியும். ஆனால் இறையச்சமிக்க முஸ்லிம்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

பெற்றோர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோரைப் பராமரிக்க பிள்ளைகளோ, உற்றவர்களோ யாரும் இல்லாத போது, இப்பொறுப்பை இஸ்லாம் சமுதாயத்தவர்கள் மீது சுமத்தியுள்ளது. முஸ்லிம் ஜமாஅத்தினர் முன்வந்து உதவியைத் தொடங்கவேண்டும், கேளிக்கையில் பணத்தைச் செலவிடாமல், மக்கள் சேவையில் அதைப் பயன்படுத்துவது அதிக மகிழ்ச்சிக்குரியது, பயனுள்ளது. நீதி நெறியும், ஆன்மிகத் திறனும் பொதிந்த நற்செயலுமாகும்.

## மருத்துவ சிகிச்சை

நோயுற்றவர், குடும்பத்தவர்கள், நண்பர்கள் ஆகியோருடைய பரிவிரக்கத்தைப் பெற்றுக் கொள்வது மிகவும் விரும்பத்தக்கது. மனோ நல உதவியும், ஆன்மிக வழிகாட்டலும் பெரிதும் உதவக்கூடும். நோயாளியின் வலி, வேதனைகளைப் போக்கவல்ல மருந்துகளையும் மருத்துவர் வழங்க

வேண்டும். அவற்றை போதிய அளவே கொடுக்க வேண்டும். அதிக அளவு மருந்துகளை வழங்கி, மரணத்தைத் தூண்டி விடுவது தவிர்க்கப்பட வேண்டும். மருத்துவரின் மன நிலை தெளிவாக இருக்க வேண்டும்; அவரது நோக்கம், வலி, வேதனைகளைக் குறைப்பதாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், நோயாளியின் சிரமத்தைப் பார்த்து நோவில்லா மரணத்தை தூண்டுவது ஏற்புடையதல்ல. மருத்துவரின் நோக்கத்தை நாம் அறிய முடியாது. ஆனால் அல்லாஹ் அறிகிறான்.

**"[மனிதர்களின்] கண்கள் செய்யும் சூதுகளையும், உள்ளங்களில் மறைந்து இருப்பவற்றையும் இறைவன் நன்கறிவான்."**

- அல்குர்ஆன் (40 : 19)

மருத்துவ ஒழுக்கவியல் பற்றிய இஸ்லாமிய விதி முறையின்படி, மருத்துவர் தமது பணியின் அளவை உணரவேண்டும். அதை மீறிவிடுவது கூடாது.

நோயாளிக்கு அளிக்கப்படும் சிகிச்சை வெற்றி பெறாது என்பதை அறிந்திருந்தும், நோயாளிக்கு இயற்கை மரணம் ஏற்படும் வரை உதவி செய்வதே மருத்துவரின் கடமை. நோவில்லா மரணத்தைத் தூண்டுவதல்ல.

ஒரு முஸ்லிம் நோயுற்று விட்டால், அவர் சிகிச்சை மேற்கொள்வது அவசியமாகும். ஏனெனில், உங்கள் மீது, உங்கள் உடலுக்கு உரிமை இருக்கிறது!

**நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்வின் அடியார்களே! சிகிச்சை செய்து கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹ் எந்த நோயையும் அதற்கான நிவாரணியை அளிக்காமல் ஏற்படுத்துவதில்லை. [முதுமை என்ற நோயை தவிர]"**

(ஆதாரம்: திர்மிதீ, அஹ்மத், ஹாக்கிம்)

எக்காரணத்தைக் கொண்டும் முஸ்லிம்கள் நோவில்லா மரணத்தை ஏற்க முடியாது, கூடாது. அல்லாஹ்வும், அண்ணல் நபி (ஸல்) அவர்களும் வழங்கிய ஷரீஅத் சட்டங்களைப் பின்பற்றுவது தான் நேரான வழி மட்டுமல்ல,

## மன ஊசலாட்டங்களை வெளிப்படுத்தலாகாது

"என் சமுதாயத்தாரின் உள்ளங்களில் ஊசலாடும் தீய எண்ணங்களை, அவர்கள் (அதன்படி) செயல்படாத வரை அல்லது (அதை வெளிப்படுத்திப்) பேசாத வரை எனக்காக அல்லாஹ் மன்னிக்கின்றான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

சரியான வழியுமாகும். தவறுகள் நேர்வது தடுக்கப்படும். அமைதி ஆட்கொள்ளும்.

மேலும், அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்து, அதிகமான பொறுமை, விடா முயற்சி ஆகியவற்றை மேற்கொண்டு, இறுதி நோயாளி, சிரமங்களை எதிர்கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்களின் முன் மாதிரியை எண்ணிப் பார்க்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் எண்ணிலாச் சிரமங்களுக்கு உட் படுத்தப்பட்டார்கள். அவற்றை உறுதியுடன் எதிர்கொண்டார் கள். அல்லாஹ்வின் மீது அசை யாத நம்பிக்கை கொண்டார்கள். இறுதியில் வெற்றிவாகை சூடி வரலாறு படைத்தார்கள். வலு மிக்க இந்த உதாரணத்தை மனதில் கொண்டு, முஸ்லிம்கள் வாழ்க்கை முழுவதும் செயல் பட வேண்டும். வாழ்வில் துளிர்க் கும் சவால்களை, மன உறுதி யுடன், கண்ணியமாகவும், மென்மையாகவும், கம்பீரமா கவும் எதிர் கொள்ள வேண்டும்.

வாழ்வின் புனிதத்தை இஸ்லாம் உயர்த்திப் பிடிக்கிறது. துயர்படும் நோயாளிகளிடம் பரிவிரக்கத்தை காட்டுமாறு வலியுறுத்துகிறது. உதவிக்கரம் கொண்டு அணைக்கச் சொல் கிறது. ஆகவே, நோவில்லா மரணத்தைத் தவிர்த்து, இயற்கைமரணத்தை ஏற்று, இவ் வுலகைப் பிரிவது, மற்றவர் களுக்கு ஒரு படிப்பினையாக அமையட்டும் இன்ஷா அல்லாஹ்!

## துணை நூற்கள்:


1) சங்கை மிகு குர்ஆன், சிறப்பு மிகு தமிழாக்கம். - அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி (ரஹ்) ஹள்ரத் அவர்கள், தாருல் ஹுதா வெளியீடு, மண்ணடி, சென்னை-1

2) திருகுர்ஆன் விரிவுரை, தஃப்சீர் இப்னு கஸீர் பாகங் கள், தமிழாக்கம். வெளியீடு- ரஹ்மத் பதிப்பகம், ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம், மைலாப்பூர், சென்னை-4

3) அல் ஹதீஸ், பெருமானாரின் பொன்மொழிப் பேழை 3 பாகங்கள் - தொகுப்பு அல்லாமா மு.றா.மு அப்துற் றஹீம் (ரஹ்) அவர்கள். வெளியீடு, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 2/3, வடக்கு உஸ்மான் சாலை, T.நகர், சென்னை-17.

4) Euthanasia, சாஜித் ஏ. ஜுபைர், ரேடியன்ஸ் வியூஸ் வீக்லி, 31 மார்ச்- ஏப்ரல் 6, 2024, ஜாமியா நகர், புது டெல்லி-25.

5) Euthanasia,- Reading the Muslim mind, Source, Internet.



**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**

**94420 56547**

# இசை குறித்து இஸ்லாம் சொல்வதென்ன?

மவ்லவீ ஹாஃபிழ் அ.சைய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

''மனிதர்களில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, [அவற்றால் மக்களை] அல்லாஹ்வின் பாதையைப் பரிகாசமாக்கிக் கொள்ளவும் [முயல்கிறார்கள்] இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனையுண்டு.''

– அல்குர்ஆன் (31 : 6)

'லஹ்வல்ஹதீஸ்' அதாவது வீணான பேச்சு என்று மேற்கூறப்பட்ட வசனத்தில் இடம் பெறுகிறது. வீணான பேச்சு என்றால் என்ன? 'வீணான பேச்சு என்பது இணைவைப்பான பேச்சு' என்று ஹள்ரத் ளஹ்ஹாக் (ரஹ்) அவர்கள் விளக்கம் தருகிறார்கள்.

'எந்தப் பேச்சு இறைவனுடைய அத்தாட்சிகளை நம்புவதைவிட்டும்,இறைவனுடைய நேரான பாதையை பின்பற்றுவதைவிட்டும்தடுக்கிறதோ அது' என ஹள்ரத் இப்னு ஜரீர் (ரஹ்) அவர்கள் தேர்வு செய்கிறார்கள்.

ஹள்ரத் அபுஸ்ஸஹ்பாஉல் பக்ரீ (ரஹ்) அவர்கள், ''மேற்கூறப்பட்ட வசனம் குறித்த விளக்கத்தை ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்களிடம் கேள்வி கேட்டதைப் பற்றி தெரிவிக்கிறார். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெந்தக் கடவுளும் இல்லை. அப்படிப்பட்ட அல்லாஹ்வின் மீது சத்தியமாக! வீணான பேச்சு என்பது பாடல் (இசை) என்று மூன்று தடவை ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறினார்கள்.

ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்களின் கருத்தையே ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி), ஹள்ரத் ஜாபிர் (ரளி), ஹள்ரத் இக்ரிமா (ரளி), ஹள்ரத் ஸயீத் பின் ஜுபைர் (ரஹ்), ஹள்ரத் முஜாஹித் (ரஹ்), ஹள்ரத் மக்ஹூல் (ரஹ்), ஹள்ரத் அம்ர் பின் ஷுஅய்ப் (ரஹ்), ஹள்ரத் அலீ பின் நதீமா (ரஹ்) ஆகியோரும் தெரிவிக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட வசனம், இசை குறித்தும், இசைக் கருவிகள் சம்பந்தமாகவும் இறங்கியது என ஹள்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

மேற்கூறப்பட்ட வசனம் பெண் பாடகிகளை விலை கொடுத்து வாங்குவது என ஹள்ரத் கதாதா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

வீணான பேச்சு என்பதற்கு பெரும்பாலானோர் இசை,

இசைக் கருவிகள், இசையமைப் பாளர், பாடகிகள் என விரிவுரை தருகிறார்கள்.

இசை என்றால் ஆங்கிலத்தில் மியூசிக் என்பதாகும். வடமொழியில் நாதம் என்று அழைக்கப்படுகிறது. இன்னும் இசைக்கு பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டு அழைக்கப்படுகிறது. சங்கீதம், ராகம், ஓசை, தாளம், மேளம், ஸ்வரம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

மொழியின் பேச்சு வடிவமும், எழுத்து வடிவமும் சேர்ந்து இயல்என்று அழைக்கப்படுகிறது. பண் இசைத்துப் பாடுவது இசையாகும். அதாவது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப் பட்ட ஒலிதான் இசை. நாம் சாதாரணமாக பேசுகிறோம். இதிலும் ஒலியோசை வருகிறது. படிக்கிறோம்; இதிலும் ஒலியோசை வருகிறது. ஓதுகிறோம்; இதிலும் ஒலியோசை வருகிறது. பாடுகிறோம்; இதிலும் ஒலியோசை வருகிறது. இவற்றுக்கெல்லாம் இயல் என்று அழைக்கின்றோம். அதாவது மொழியின் பேச்சு வடிவமும், மொழியின் எழுத்து வடிவமும் ஆகிய இரண்டு வடிவங்கள் மட்டுமே ஒன்றிணைகின்றன. இதற்கு பெயர் இயல். இசை அல்ல. இசை என்பதில் மூன்றாவது வடிவம் வந்து சேருகிறது. அது என்னவெனில், இசைக் கருவிகளைக் கொண்டு இசைத்துப் பாடுவது ஆகும். இதற்குப் பெயர்தான் இசை. இன்னிசை, தேனிசை, இசைக் கச்சேரி, இசைப் பாடல்கள், சாதாரண ஒலியோசையில் மூன்றாவது ஒரு பொருளான இசைக் கருவி சேரும்போது, அத்தகைய இசையை இஸ்லாம் ஹராம் என்கிறது. அதை தடை செய்கிறது.

இசைக்கும் இசைக் கருவிகளை வைத்து, அந்த இசை ஹலாலா? ஹராமா? என்று தீர்மானிக்கப்படுகிறது. இசைக் கருவிகளை வைத்து அது கூடுமா? கூடாதா? என்று மதிப்பிடப்படுகிறது. இசைக் கருவிகளை வைத்து அது ஆகுமானதா? ஆகுமானது இல்லையா? என்று அளவுகோல் சொல்லப்படுகிறது.

இன்று உலகம் முழுவதும் ஜூன் 21ம் தேதி அன்று உலக இசை தினம் கொண்டாடப் படுகிறது. உலகம் முழுவதும் நவீன இசைக் கருவிகள் ஏராளமாக வந்து விட்டன. இசைக் கருவிகளை இஸ்லாம் இரண்டு விதமான கண்ணோட்டத்தில் பார்க்கிறது. இரண்டு விதமான அளவுகோலை அளவிடுகிறது.

சலங்கை மற்றும் வேறு ஏதேனும் துணைப் பொருள் இல்லாத, இன்னிசை ஒலியை எழுப்பக்கூடிய துணை இசை சாதனங்கள் இல்லாத சாதாரண ஒலி எழுப்பான்கள், சாதாரண ஒலியோசைக் கருவிகள். இதற்கு உதாரணங்கள் யாதெ

னில், தஃப்பு, கொட்டு, முரசு போன்றவையாகும். அன்றைய காலத்தில் தமிழகமெங்கும் தொழுகைக்கான அழைப்பான பாங்கொலி அறிவிப்புக்கு முன் முதலில் நகரா (முரசு) அடிக்கப் படும். இந்த ஒலியோசை இஸ் லாத்தில் அனுமதிக்கப்பட்ட தினால் அந்த முரசு கொட்டப்பட் டது. காலப்போக்கில் விலை உயர்ந்த ஒலிப்பெருக்கிகள், எட்டுத்திக்கும் பாங்கோசையை கொண்டு போய் சேர்க்கக்கூடிய கூம்பு வடிவ ஒலிப்பெருக்கிகள் கோலோச்சியதால் அதன் பயன்பாடு இல்லாமலே போய் விட்டது. ஒரு சில இறையில்லங் களில் அது காட்சிப் பொருளாக காட்சி தருகிறது.

மேலும், இஸ்லாமிய திருமண வைபவங்களில் மாப்பிள்ளையை பைத் சொல்லி அழைத்து வர தஃப்பு வாசிக்கப் படுகிறது. எனினும், இந்த தஃப்பில்கூட சுற்றி சலங்கைகள் பொருத்தப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது. இதுவும் ஹராம் தான். மேலும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமை அன்று ஃபக்கீர் கள் தஃப்பு அடித்து தமது வாழ் வாதாரத்தை சேகரித்துக் கொள் கிறார்கள். ஒவ்வொரு ஆண்டி லும் ரமளானின் ஸஹர் நேரங் களில் தஃப்பு அடித்து நோன்பாளி களை விழிக்க வைக்கிறார்கள். இவர்கள் அடிக்கும் தஃப்புகளி லும் சுற்றி சலங்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. சலங்கைகள் பொருத்தப்பட்ட தஃப்புகள் இசைக் கருவிகளு டன் சேர்க்கப்பட்டு இவற்றுக்கும் இசைக்கருவிகளுக்கு வழங்கப் படும் தீர்ப்பே அளிக்கப்படும். இவற்றையும் இசைப்பது கூடாது.

சலங்கைகள் பொருத்தப் படாத தஃப்புகளுக்கும், முரசு களுக்கும், கொட்டுகளுக்கும் மட்டுமே இஸ்லாத்தில் அனுமதி உண்டு. இப்படிப்பட்ட அனுமதி மற்றும் சலுகை குறித்து நபி மொழிகளில் வரும் செய்திகளை தெரிந்து கொள்வோம்.

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘புஆஸ்’ (எனும் போர்) பற்றிய பாடல்களை இரண்டு சிறுமி கள் என்னிடம் பாடிக் காட்டிக் கொண்டிருந்த போது, என்னிடம் நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். படுக்கையில் சாய்ந்து தம் முகத்தை (வேறு புறமாகத்) திருப்பினார்கள். அப்போது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் வந்து ‘நபி (ஸல்) அவர்களின் அருகில் ஷைத்தா னின் இசைக்கருவிகளா?’ என்று கூறி என்னைக் கடிந்தார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர் கள் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்களை நோக்கி, “அவ்விரு வரையும் விட்டு விடுங்கள்” என்றார்கள். ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்களின் கவனம் வேறு புறம் திரும்பிய போது, அவ்விரு சிறுமிகளையும் விரல்களால் குத்தி (வெளியேறி விடுமாறு

கூறி)னேன். அவ்விருவரும் வெளியேறி விட்டனர்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள். (நூல் : புகாரி 949)

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'புஆஸ்' (எனும் பழமையான போர்) பற்றி அன்ஸாரிகள் புனைந்துள்ளவற்றை அன்ஸாரிகளைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் என் முன்னே பாடிக் கொண்டிருந்த போது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் வந்தார்கள். அவ்விரு சிறுமியரும் பாடகிகள் அல்லர். "அல்லாஹ்வின் தூதருடைய இல்லத்தில் ஷைத்தானின் இசைக் கருவிகளா?" என்று ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் கேட்டார்கள். இது நடந்தது ஒரு பெருநாளின் போதாகும். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அபூபக்ரே! ஒவ்வொரு சமுதாயத்திற்கும் பெருநாட்கள் உள்ளன. இது நம்முடைய பெருநாளாகும்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரி 952)

மேற்கூறப்பட்ட இரண்டு நபி மொழிகளிலும் இசை குறித்து தீர்மானிக்கப்படும் விஷயங்கள், சட்டங்கள் என்னவெனில், இசைக் கருவிகளை வைத்து பாடிக்கொண்டிருந்த இரண்டு சிறுமிகளைக் கண்ட அபூபக்ர் (ரளி) அவர்கள் 'இறைத் தூதரின் இல்லத்தில் ஷைத்தானின் இசைக்கருவிகளா?' என்று கண்டித்தார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள், அபூபக்ரிடம் 'அவர்களை விட்டுவிடுவீராக!' என்று அனுமதி தருகிறார்கள். அந்த இரண்டு சிறுமிகள் பயன்படுத்தியது உண்மையாகவே ஷைத்தானின் இசைக் கருவியாக இருந்தால், நபி (ஸல்) அவர்கள் மெய்யாகவே ஒருபோதும் அனுமதி தரமாட்டார்கள். அதை அந்த நேரத்தில், அந்த இடத்தில் ஹராம் எனும் தடை விதித்திருப்பார்கள். அவர்கள் இசைக் கருவியாக பயன்படுத்திய சாதனம் தஃப்பு ஆகும். எனவே, நபி(ஸல்) அவர்கள் தஃப்புக்கு அனுமதி தந்தார்கள்.

முஸ்லிமில் வரக்கூடிய நபி மொழியில் 'தஃப்பு' என்று வருகிறது. பிறகு ஏன் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் கண்டித்தார்கள்? அதாவது இறையச்சமுள்ள நல்லோர்களின் பண்பு வீண் விளையாட்டு, கேளிக்கை இவற்றினுள் ஹராமோ, பாவமோ கலந்து விடாத பட்சத்திலும் இவற்றை விட்டும் அவர்கள் ஒதுங்கியிருப்பார்கள். ஒரு பெரும் சபையில் இது மாதிரி நடப்பதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். தங்களுக்கு பிடிக்காத அல்லது தாங்கள் விரும்பாத ஒரு செயல் நடக்கும்போது அவர்கள் அந்த செயலை முடிந்தளவு தடுப்பார்கள்; முழு அளவு கண்டனத்தை தெரிவிப்பார்கள். ஒரு பெரும் மஜ்லிஸை வீணான

கேளிக்கையை விட்டும் தூய்மைப்படுத்துவதற்காக இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வது அவர்களின் அழகிய பேணுதலையும், அவர்களின் நல்லொழுக்கத்தையும், அவர்களின் பொறுப்பையும் பறை சாற்றுகிறது.

நபி (ஸல்) அவர்களின் மவுனம் இதற்கு சம்மதம். நபி (ஸல்) அவர்கள் தமது முகத்தை திருப்பியது அதை அவர்கள் அனுமதித்த போதிலும் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். வெட்கத்தால் தமது ஆடையைக் கொண்டு தமது முகத்தை மூடிக் கொள்கிறார்கள். இது நபி (ஸல்) அவர்களின் உயர்வான பண்பு. இது அவர்களின் சாதுவான சாந்தம். இது அவர்களின் மென்மையான இரக்க குணமாகும். பெருநாள் அன்றும், திருமண வைபவங்களிலும், விருத்த சேதனத்திலும் அரபிகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த தஃப்பு அடிப்பது அவர்களின் பாரம்பரியமாகும். இவ்வாறு அடிப்பது அனுமதியாகும்.

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : "நான் ஒரு பெண்ணை அன்சாரிகளில் ஒருவருக்கு மணமுடித்து வைத்து அவளை அவரிடம் அனுப்பி வைத்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'ஆயிஷாவே! உங்களுடன் பாடல் (பகுதி சிறுமியர்) இல்லையா? ஏனெனில், அன்சாரிகளுக்குப் பாடல் என்றால் மிகவும் பிடிக்குமே!' என்றார்கள்" (நூல்: புகாரி 5162)

ஹள்ரத் ருபய்யிஉ பின்த் முஅவ்வித் பின் அஃப்ரா (ரளி) அவர்கள் ஹள்ரத் காலித் பின் தக்வான் (ரஹ்) அவர்களிடம் கூறினார்கள் : "எனக்குக் கல்யாணம் நடந்த நாள் (காலை) நபி (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். எனக்கருகில் நீங்கள் அமர்ந்திருப்பது போன்று நபி (ஸல்) அவர்கள் என்னுடைய விரிப்பின் மீது அமர்ந்தார்கள். அங்கு சில முஸ்லிம் சிறுமியர் சலங்கையில்லாத கருஞ்சிராக்களை (தஃப்பு) அடித்துக் கொண்டு பத்ருப் போரில்

## சொர்க்கத்தை பெற்றுத்தரும் எளிய நற்செயல்!

"(முற்காலத்தில்) ஒரு நாய் தாகத்தால் (தவித்து) ஈர மண்ணை (நக்கி) உண்டு கொண்டிருப்பதை ஒரு மனிதர் பார்த்தார். உடனே அவர் (தாம் அணிந்திருந்த தோல்) காலுறையை எடுத்து அதில் தண்ணீர் அள்ளிவந்து, அந்நாய் தாகம் தீரும்வரை கொடுத்தார். எனவே அல்லாஹ், அவரது நற்செயலைப் பாராட்டி (ஏற்று) அவரைச் சொர்க்கத்தில் அனுமதித்தான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

கொல்லப்பட்ட எம்முன்னோரைப் புகழ்ந்து (இரங்கல்) பாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களில் ஒரு சிறுமி 'எங்களிடையே ஓர் இறைத்தூதர் இருக்கிறார். அவர் நாளை நடக்க விருப்பதையும் அறிவார்' என்று கூறினார். உடனே, நபி (ஸல்) அவர்கள், (இப்படிச் சொல்லாதே!) இதை விட்டு விட்டு முன்பு நீ சொல்லிக் கொண்டிருந்ததை (வேண்டுமானால்) சொல்!' என்று கூறினார்கள்.

(நூல்: புகாரி 5147)

## தடை செய்யப்பட்ட இசைக் கருவிகள்

புல்லாங்குழல், சங்கு, மகுடி, கிலுகிலுப்பை, எக்காளம், யாழ், கடம், நாதசுரம், வீணை, தாளம், மணி, சலங்கை, பிடில், வில் இசைக்கருவி, கைமணி, வயலின், மிருதங்கம், கொம்பு, தூம்பு, தட்டுக்கழி, உறுமி மேளம் போன்ற இசைக் கருவிகள் 300 வகைகள் உள்ளன.

சிலவகை நரம்புக் கருவிகள்.

சிலவகை துளைக் கருவிகள்.

சிலவகை தோல் கருவிகள்.

சிலவகை கன கருவிகள்.

இவற்றில் இசைப்பதை இஸ்லாம் தடை செய்கிறது. இவற்றில் இசைத்து பாடுவதையும் இஸ்லாம் தடை செய்கிறது.

இஸ்லாம் இசையை தடை செய்வதற்கு பலவிதமான காரணங்கள் உண்டு.

1) இசையை கேட்பது விபச்சாரத்தின் பக்கம் இழுத்துச் செல்லும் வழியாக உள்ளது.
2) உள்ளத்தில் இச்சையை தூண்டி விடுகிறது.
3) இறை சிந்தனையை விட்டும், இறைவனை நினைப்பதை விட்டும் பாராமுகமாக ஆக்கி விடுகிறது; கவனத்தை திசை திருப்பி விடுகிறது.
4) இசை என்பது உள்ளத்தில் நயவஞ்சகத் தன்மையை ஏற்படுத்தி விடுகிறது.
5) இசை என்பது நேரத்தை வீண்விரயம் ஆக்குகிறது.
6) இசை என்பது உள்ளத்தை பாழாக்கி விடுகிறது.
7) இசைஎன்பதுதொழுகையை விட்டும் தடுக்கிறது.
8) இசை என்பது குர்ஆன் ஓதுவதை விட்டும் தடுக்கிறது.
9) இசை என்பது ஆபாசத்தை தூண்டுகிறது.
10) இசை என்பது அருவெறுக்கத்தக்கவற்றை அழகாக காட்டுகிறது.
11) இசை என்பது ஒழுக்கத்தை சிதைக்கிறது.
12) இசைஎன்பதுசமுதாயத்தில் பொய்களை பேசுவதை உருவாக்கி விடுகிறது.
13) இசை என்பதுசமுதாயத்தில் பாவங்களை உருவாக்கி விடுகிறது.

14) இசைஎன்பதுசமுதாயத்தில் மனமுரண்டை ஏற்படுத்து கிறது.

15) இசைஎன்பதுசமுதாயத்தில் அற்பத்தனத்தை ஏற்படுத்துகிறது.

16) இசை எனும் போதை உள்ளத்தில் குர்ஆன் இடம் பெறுவதை கடினமாக்கி விடுகிறது.

17) இசை ஷைத்தானின் வேதமாகும்.

18) இசைஎன்பதுஷைத்தானின் பேச்சாகும்.

19) இசை என்பது உள்ளத்தை கடினமாக்கி விடும்.

20) இசை என்பது சபிக்கப்பட்ட சப்தமாகும்.

ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் கன்ம் அல் அஷ்அரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: அபூ ஆமிர் (ரளி) அல்லது அபூமாலிக் அஷ்அரீ (ரளி) என்னிடம் கூறினார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! அவர்கள் என்னிடம் பொய் சொல்லவில்லை. (அவர்கள் கூறினார்கள்) நான் நபி (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டேன். என் சமுதாயத்தாரில் சில கூட்டத்தார் தோன்றுவார்கள். அவர்கள், விபச்சாரம் புரிவது, ஆண்கள் பட்டுத்துணி அணிவது, மது அருந்துவது, இசைக் கருவிகள் இசைப்பது ஆகியவற்றை அனுமதிக்கப்பட்டவையாகக் கருதுவார்கள்.

(நூல் : புகாரி - 5590)

“நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மது, சூதாட்டம், இசைக்கருவி, மத்தளம் ஆகியவற்றை தடை செய்துள்ளான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மது)

“இந்த சமுதாயத்தில் பூமியில் புதையுண்டு போவதும், உருவ மாற்றமும், கல் மழை பொழிவதும் ஏற்படும்” என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது ஒரு மனிதர், இறைவனின் தூதரே! அது எப்போது ஏற்படும்? என வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘பாடகிகளும், இசைக் கருவிகளும், மது அருந்துவதும் பெருகிவிட்டால் அது நிகழும்” எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூமாலிக் அஷ்அரீ (ரளி) அவர்கள் (நூல்: திர்மிதீ)

“நிச்சயமாக அல்லாஹ் என்னை அகிலத்தாருக்கு அருட்கொடையாகவும், நேர் வழிகாட்டியாகவும் அனுப்பி வைத்தான். எனது இறைவன் இசைக் கருவிகளையும், இசை பாடல்களையும், சிலைகளையும், சிலுவைகளையும், அறியாமைக் கால நடவடிக்கைகளையும் அழிக்கும்படி எனக்கு உத்தரவிட்டான்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"இவற்றை விற்பதோ, வாங்குவதோ, கற்றுக் கொடுப்பதோ, அவற்றில் முதலீடு செய்வதோ, அவற்றின் கிரயமோ ஆகுமானது அல்ல" எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள், (நூல் : அஹ்மது)

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்களின் பணியாளர் நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறும் போது, "ஹள்ரத் இப்னு உமர் (ரளி)ஓர் இடையனின்பாடலைக் கேட்டு, தமது இரண்டு காது களிலும் தமது இரண்டு விரல் களை வைத்து அடைத்துவிட்டு, தமது வாகனத்தை அந்தப் பாதையை விட்டும் திருப்பி விட்டார்கள். 'நாபிஉ அவர்களே! உமக்கு கேட்கிறதா? என்று ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் கேட்ட போது 'ஆம்," என நான் கூறியதும் அவாகள் அந்த இடத்தை விட்டும் கடந்து சென்றார்கள். நான், 'பாடல் கேட்கவில்லை' என்று கூறியதும் அவர்கள் தமது கை விரல்களை காதுகளிலிருந்து எடுத்து விட்டார்கள். பிறகு அந்தப் பாதையை நோக்கி வாகனத்தை திருப்பினார்கள்.

'நபி (ஸல்) அவர்கள் ஓர் இடையனின்பாடலைக்கேட்டு, அவர்களும்இவ்வாறு செய்வதை நான் கண்டேன்' என ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் நாஃபிஉ (ரஹ்) அவர்கள் (நூல் : அஹ்மது)

போர்க்களத்தில் கிடைக் கும் எதிரிகளின் பொருளைத் தமது செல்வமாகவும், அமானித மான பொருளை எதிரிகளின் (கனீமத்) பொருளாகவும் (நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளை உரியவரிடம் ஒப்படைக்காமல் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் நிலை வருமாணால்) ஜகாத்தை வரியாக கருதப்படுவதும், தீனுக்காக அல்லாமல் உலக ஆதாயத்திற் காக கல்வி கற்பதும், ஒருவர் தன் மனைவிக்கு கட்டுப்படு வதும், தன் தாய்க்கு மாறுதலாக செய்வதும், தன் நண்பனை நெருக்கமான வனாகவும், தன் தந்தையை தூரமானவராகவும் ஆக்கினாலும், பள்ளிவாசல் களில் பகிரங்க மாகக் கூச்சல் போடப்பட்டாலும், பெரும் பாவி ஒரு சமுதாயத்திற்குத் தலைவ னாக நியமிக்கப்பட்டாலும், ஒரு கூட்டத்தாரின் நிர்வாகப் பொறுப்பு மிகக் கேவலமான வன் வசம் ஒப்படைக்கப்பட் டாலும், ஒருவனின் கெடுதியை விட்டும் தப்பிக்க அவனுக்கு மரியாதை செலுத்தப்பட்டா லும், பாடகிகளும், இசைக்கருவி களும் வழக்கமாக இசைக்கப் பட்டாலும், மது அருந்துவது சர்வ சாதாரணமாக ஆகி

விட்டாலும், சமுதாயத்தின் முன்னோர்களை பின்னோர்கள் சபிப்பார்களேயானாலும், செந்நிறக்காற்று, பூமி அதிர்ச்சி, பூமியில் புதையுண்டு போதல், மனிதர்களின் முகங்கள் உரு மாற்றப்பட்டாலும், வானத்திலிருந்துகல்மாரிப்பொழிதல் ஆகிய வேதனைகளை எதிர்பார்த்திருங்கள். நூலில் கோர்க்கப் பட்ட மணிமாலை அறுந்துவிட்டால் அது ஒன்றன்பின் ஒன்றாக விழுவது போல் தொடர்ச்சியாக வேதனைகள் வரும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.'

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல்: திர்மிதீ)

எனவே, இசை என்பது அழிவின் அடையாளம். அது மறுமையின் அடையாளம். அது பாவத்தின் அடையாளம். இசையும், இசைக் கருவிகளும் அதிகம் இசைக்கப்படுமானால், அது மறுமையின் அடையாளம்.

ஹராமான இசைக் கருவிகள் இல்லாமல் ஆகுமான வழியில் பாடலாம். இசை இல்லாத சாதாரண பாடலில் கூட இறை மறுப்பும், இணைவைப்பு வாசகமும் கலந்து விட்டால், இந்த இசை இல்லாத பாடலும் பாவமாக மாறிவிடும்.

இசையை மறுப்போம்!
இசையை தவிர்ப்போம்!

## அண்ணல் நபியின் கன்னல் மொழிகள்!

"உங்களைவிட செல்வம் அதிகம் உள்ளவரைக் கண்டு ஏங்காதீர்கள். கீழுள்ளவர்களையே பாருங்கள்." (நூல் : புகாரீ)

"குடிகாரன், பெற்றோருக்கு தீங்கு செய்பவன், குடும்பத்தில் மானக்கேடான காரியங்களைச் செய்பவன் இம்மூவர் மீதும் அல்லாஹ் சொர்க்கத்தை தடை செய்து விட்டான்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள்.
(நூல் : முஸ்னத் அஹ்மத்)

"எந்த தந்தை தன் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கங்களை கற்பிக்கிறாரோ அவர் மீது அல்லாஹ்வின் அருள் உண்டாவதாக." அறிவிப்பாளர் : ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்.
(நூல் : இப்னு ஹிப்பான்)

"உங்கள் பிள்ளைகள் பேச ஆரம்பித்ததும் முதல் பேச்சு "லாயிலாஹ இல்லல்லாஹ்" ஆக இருக்கட்டும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்.
(நூல் : ஹாகிம்)

தருபவர் : **பா. ஹாஜி முஹம்மது,** சேந்தமங்கலம்.

# வரலாற்றில் ஓர் ஏடு

"உனது செல்வத்திற்குரிய ஸகாத்தை நீ வழங்கிவிட்டால், உன் மீதுள்ள (பொருளாதாரக்) கடமையை நிறைவேற்றி விட்டாய் (வேறு எதுவும் கொடுப்பது கடமையில்லை)" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வரலாற்றில் ஒரு நாள் :

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் ஹள்ரத் முஆத் பின் ஜபல் (ரளி) அவர்களை யமன் நாட்டுக்கு இஸ்லாமிய அழைப்புப் பணி மற்றும் நீதி நிர்வாகத்தை கவனிக்க அனுப்பி வைத்தபோது பின்வருமாறு கூறினார்கள் :

"நீங்கள் செல்லும் வேதக்காரர்களிடம் (முதலாவதாக) "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், நான் (ஹள்ரத் முஹம்மது நபி - ஸல் அவர்கள்) அல்லாஹ்வின் தூதர்" என்றும் உறுதிமொழி அளிக்கும்படி அழைப்பு விடுங்கள்.

அவர்கள் கட்டுப்பட்டால், அவர்கள் மீது அல்லாஹ் ஒவ்வொரு நாளும் ஐந்து (நேரத்) தொழுகைகளைக் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களுக்கு அறிவியுங்கள்.

இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால், அவர்களின் செல்வங்களில் ஸகாத்தை அவர்கள் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்; செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு, ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவியுங்கள்.

இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால், (அவர்களிடமிருந்து ஸகாத்தை வசூலிக்கும்போது) அவர்களின் செல்வங்களில் (நடுத்தரமானதை விடுத்து) உயர்தரமானவற்றை எடுக்க வேண்டாமென நான் எச்சரிக்கிறேன். அநீதி இழைக்கப்பட்ட வரின் பிரார்த்தனைக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். ஏனெனில், அவர் செய்யும் பிரார்த்தனைக்கும், அல்லாஹ்வுக்கும் இடையே திரையேதுமில்லை."

ஆதாரம் : ஜாமிஉத் திர்மிதீ ஹதீஸ் எண் - 561 மற்றும் 567

தருபவர் : **ப. பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

## ரஷ்யாவில் அதிகமாகக் கட்டப்பட்டு வரும் மஸ்ஜித்துகள்....!

உலக மக்களை அதிகம் கவர்ந்து வரும் மார்க்கமாக இஸ்லாமிய மார்க்கம் இருந்து வருகிறது. இதன் காரணமாக உலகம் முழுவதும் முஸ்லிம் களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. தற்போது உலகில் இரண்டா வது மிகப் பெரிய மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது. இஸ்லாமிய நெறிகள், போதனை கள் உலக மக்களை மிகவும் ஈர்த்து வருவதால் விரைவில் இஸ்லாம் உலகின் முதன்மை மார்க்கமாக மாறும் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஏக இறைக் கொள்கை, மறுமைக் கொள்கை, மனித நேயம், அனைத்து மக்களிடமும் அன்பு செலுத்தி சகோதரத்துவத் துடன் வாழ வேண்டும் என்பன போன்ற போதனைகள், முஸ்லிம் களை மட்டுமல்லாமல், பிற சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த மக்களையும் கவர்ந்து வருவதால் இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ளும் ஆவல் மக்களிடையே தொடாந்து அதிகரித்துவருகிறது. தற்போது உலகில் முஸ்லிம்கள் தொகை அதிகம் கொண்ட நாடாக இந்தோனேஷியா இருந்து வருகிறது. இந்திய நாடு 25 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வாழும் இரண்டாவது மிகப் பெரிய முஸ்லிம் மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்து வருகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா உள்ளிட்ட உலகின் பிற நாடுகளிலும் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு மக்களிடையே இஸ்லாமிய மார்க்கம் குறித்து அதிகம் அறிந்து கொள்ளும் ஆர்வம் மக்கள் மத்தியிலிருந்து வருவதால் முஸ்லிம்கள் குறித்து தவறாக சித்தரிக்கும் போக்கு தற்போது குறைந்துவருகிறது. இத்தகைய சூழ்நிலையில் ரஷ்யாவில் முஸ்லிம்கள் எப்படி வாழ்ந்து வருகிறார்கள்? அங்கு இஸ்லாம் எந்த வகையில் மக்களை கவர்ந்து வருகிறது? என்பதை அறிந்து கொள்வது சிறப்பாக இருக்கும்.

### ரஷ்யாவில் அதிகரிக்கும் மஸ்ஜித்கள்

ரஷ்யாவில் தற்போது சுமார் 146 மில்லியன் அளவுக்கு மக்கள் தொகை இருந்து வருகிறது. இதில் 27 மில்லியன் முஸ்லிம் கள் வாழ்கின்றனர் என்று அங் குள்ள முஃப்தீ கவுன்சில் தகவல் களை தெரிவிக்கிறது. அதாவது ரஷ்யாவில் தற்போது சுமார் 3

கோடி முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரஷ்யாவில் கடந்த 20 ஆண்டுகளில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மஸ்ஜித்கள் மற்றும் மதரஸா - இஸ்லாமிய பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன என்று ரஷ்ய முஃப்தீ கவுன்சிலின் துணைத் தலைவர் ருஷான் அபியசோவ் தெரிவித்துள்ளார். கடந்த 1917 ஆம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சிக்கு முன்பு ரஷ்யாவில் 18 ஆயிரம் மஸ்ஜித்கள், மதரஸாக்கள் மற்றும் பிரார்த்தனை இடங்கள் இருந்தன. ஆனால் 1991இல் 100 மட்டுமே எஞ்சியிருந்தன என்றும் வெறும் 20 ஆண்டுகளில் தாங்கள் நல்ல வசதிகளுடன் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மஸ்ஜித்களை உருவாக்கி புனரமைக்க முடிந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

**அதிபர் புதின் உறுதி**

இத்தகைய நிலையில் 20 ஆண்டுகளில் ரஷ்யா 8 ஆயிரம் பள்ளிவாசல்களை கட்டியுள்ளதாகவும், வரும் ஆண்டுகளில் மேலும் பல மஸ்ஜித்களை கட்ட இருப்பதாகவும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உறுதியளித்துள்ளார். ரஷ்ய கூட்டமைப்பின் முஸ்லிம்களின் மத வாரியத்தின் தலைவரான முஃப்தீ ரவில் கெய்னுதீன் கருத்துப்படி, கடந்த 2018இல் 25 மில்லியன் முஸ்லிம்கள் இருந்தனர். இது மக்கள் தொகையில் சுமார் 18 சதவீதமாகும். மத்திய ஆசியாவிலிருந்து புலம் பெயர்ந்தோர் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், நிபுணர்கள் ஆறு முதல் ஏழு மில்லியன்கள் என மதிப்பிடுகின்றனர். இவர்களில் பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாவர். இதன்மூலம் ரஷ்யாவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை தற்போது மேலும் அதிகரித்துள்ளது.

**பிற மக்களைக் கவரும் இஸ்லாம்**

கடந்த 20 ஆண்டுகளில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மஸ்ஜித்கள் கட்டப்பட்டு மேலும் தொடர்ந்து புதிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருவதன் மூலம் ரஷ்ய மக்களை இஸ்லாம் மிகப் பெரிய அளவுக்கு கவர்ந்து வருவது உறுதியாகத் தெரிகிறது. இஸ்லாமிய மார்க்கத்தின் நெறிகள், போதனைகள் ரஷ்யாவின் அனைத்துப் பகுதிகளிலும் மேலும் ஒளி வீசி, மக்கள் இதயங்களை வேகமாகத் தொடும் என்பதை இத்தகைய நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக, ரஷ்யப் பெண்களிடையே இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ளும் ஆர்வம் தற்போது அதிகரித்து வருகிறது. இதனால் அவர்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ரஷ்யாவில் ஒவ்வொரு ரமளான் மாதத்தின்போதும் அங்குள்ள மஸ்ஜித்கள் நிரம்பி

வழிந்து, தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கும் காட்சிகள் ஊடகங் களில் வெளியாகும்போது அதைப் பார்க்கும் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ள ஆர்வம் செலுத்து கிறார்கள் என ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். இதன்மூலம் ரஷ்யாவில் மட்டு மல்ல. மிகவும் குறைவாக முஸ்லிம் மக்கள் தொகை கொண்ட நாடுகளிலும் கூட விரைவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என்பது உறுதி.

## ஓர் ஆலிம் எம்.பி. ஆகிறார்!

உத்தரபிரதேச மாநிலத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தொடர்ந்து வளர்த்து வந்த வெறுப்புப் பரப்புரைகளுக்கும், பழி வாங்கும் அரசியலுக்கும் தேர்தல் முடிவுகள் சரியான பேரிடியைக் கொடுத்திருக் கிறது. உத்தரபிரதேசத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட இருவரின் வெற்றி தேசிய அளவில் பேசு பொருளாகி உள்ளது.

மவ்லானா முஹிப்புல்லாஹ் நத்வி, உத்தரபிரதேச ராம்பூர் தொகுதியில் சமாஜ்வாதி கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தலைநகர் டெல்லி நாடாளு மன்றம் அருகிலுள்ள ஜூம்ஆ பள்ளிவாசலின் தலைமை இமாமாக வெள்ளி மேடை களில் முழங்கிய குரல் இனி நாடாளுமன்ற அவைக்குள் சமூகதீமைகளுக்கு எதிராகவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் ஒலிக்கப் போகிறது.

### இள வயது எம்.பி.

மேற்கு உத்தரபிரதேச பூர்வாஞ்சல் பகுதியில் கைரானா தொகுதியில் பாரதீய ஜனதாவின் பலம் வாய்ந்த வேட்பாளரைத் தோற்கடித்து சமாஜ்வாதி கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார் இக்ரா ஹாசன். 27 வயதான இக்ரா ஹாசன், 18வது நாடாளுமன்ற அவை யில் மிகவும் இளைய உறுப்பினர் எனும் பெருமையைப் பெற்றுள் ளார். 2014ஆம் ஆண்டு வரை கைரானா தொகுதியில் இவரது குடும்பத்தினரே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப் பட்டு வந்த நிலையில், கடந்த பத்தாண்டுகளாக பாரதீய ஜனதா வெற்றி பெற்றது.

முதல்வர் யோகி அரசின் மக்கள் விரோத நடவடிக்கை களுக்கு எதிராகக் குரல் கொடுத்த முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரான தாயார் தபஸ்ஸும் ஹஸனும், சட்ட மன்ற உறுப்பினரான சகோதரர் நாஹித் ஹஸனும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இலண்டனில் சர்வதேச சட்டத்தில் முதுகலைப் பட்டம்

பெற்ற இக்ரா ஹாசன் 2022ஆம் ஆண்டு தாயகம் திரும்பி, யோகி ஆதித்யநாத் அரசின் பழிவாங்கும் நடவடிக்கைக்கு எதிராக தீவிர அரசியலில் ஈடுபட்டதோடு தற்போது தங்கள் மூதாதையர் இழந்த தொகுதியின் மக்கள் பிரதிநிதி யாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## கேரளாவில் 150 ரூபாய் முதலீட்டில் தொடங்கி ரூ.3ஆயிரம் கோடிக்கு தொழிலதிபரான முஸ்லிம் இளைஞர் முஸ்தஃபா!

கேரளாவிலுள்ள நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் பிறந்தார் பி.சி.முஸ்தஃபா. இஞ்சிப் பண்ணையில் தினசரி கூலி யாளாக வேலைபார்த்து வந்த இவரது தந்தை தினமும் சம்பள மாக ரூ.50 பெற்று வந்தார்.

இதனால் குடும்பத்தை நடத்தப் போதிய வருமானம் இல்லாத காரணத்தினால், முஸ்தஃபாவும் அவருடைய சகோதரர்களும் கிராமத்தில் விறகுக்கட்டைகளை விற்பனை செய்து வருமானம் ஈட்டி வந்த னர். அப்போது முஸ்தஃபா விற்கு வெறும் பத்து வயது மட்டுமே..

இப்படி கடுமையாக உழைத்து சம்பாதித்த பணத்தை சேர்த்து வைத்த முஸ்தஃபா, முதல் முறையாக ரூ.150 முதலீடு செய்து ஆடு ஒன்றை வாங்கினார். அதை வளர்த்து விற்பனை செய்து, அதற்குப் பதிலாக பசுமாடு ஒன்றை வாங்கினார். பசுமாட்டுப் பாலை விற்பனை செய்து அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு அவர்கள் குடும்பம் சற்று நிம்மதியாக வாழத் தொடங்கியது.

ஆறாம் வகுப்பிற்குப் பிறகு பள்ளிக்குச் செல்லாமல் இருந்த முஸ்தஃபாவை மறுபடியும் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆசிரியர் ஒருவர் உதவினார். தொடர்ந்து படிப்பில் சிறந்து விளங்கிய முஸ்தஃபா, தான் சேமித்து வைத்த பணம் மற்றும் சிறிய முதலீட்டை உதவியாகக் கொண்டு NIT கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவர் கணினி அறிவியல் பிரிவில் தேர்ச்சி பெற்றார். அதன் பின்னர் மோட்டோ ரோலா நிறுவனத் தில் பணியில் சேர்ந்த முஸ்தஃபா, அங்கிருந்து விலகி துபாயிலுள்ள சிட்டி பேங்கிற்கு மாற்றலானார்.

துபாயிலிருந்து இந்தியா திரும்பிய முஸ்தஃபா IIM பெங்களூரில் சேர்ந்து எம்.பி.ஏ. படிப்பை நிறைவு செய்தார். இந்தியாவின் கோடீஸ்வரர் களில் முதலிடத்தில் உள்ள ரிலையன்ஸ் நிறுவனர் முகேஷ் அம்பானியின் கையால்தான் தனது டிகிரி பட்டத்தை வாங்கினார் முஸ்தஃபா.

2005ஆம் ஆண்டு எம்.பி.ஏ. படித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே தன்னுடைய உறவினரோடு இணைந்து இட்லி மற்றும் தோசை மாவை விற்பனை செய்யும் "ID Fresh Food" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். இதற்காக அவர் முதலீடு செய்த தொகை வெறும் ரூ.50,000 மட்டுமே. ஆரம்பத்தில் இவர்கள் உடனே உண்ணக்கூடிய வகையிலான பாக்கெட் உணவுகளையே விற்பனை செய்து வந்தனர்.

அதன்பிறகே இட்லி, தோசை மாவை விற்பனை செய்யத் தொடங்கினர். இந்த முடிவு, நிறுவனத்தின் இலாபத்தை பன்மடங்கு பெருக்கியது. இன்று முஸ்தஃபாவிற்குச் சொந்தமான நிறுவனத்தின் மதிப்பு ரூ.3,000 கோடியாகும்.

## 18ஆவது மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட 24 முஸ்லிம் உறுப்பினர்கள்...!

18வது மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, தேசிய ஜனநாயக கூட்டணி அரசும் ஒன்றியத்தில் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இந்த 18வது மக்களவைத் தேர்தலில் மொத்தம் 24 முஸ்லிம் உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பட்டிருக்கிறார்கள். கடந்த 17வது மக்களவையில் 26 முஸ்லிம் உறுப்பினர்கள் இடம் பெற்ற நிலையில் தற்போது அதன் எண்ணிக்கையில் 2 குறைந்து 24 ஆக சரிந்துள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு 23 பேர் மட்டுமே இடம்பெற்ற நிலையில், 16வது மக்களவையை ஒப்பிடும்போது எண்ணிக்கையில் ஒன்று கூடியிருக்கிறது. 543 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாவது முறையாக மிகக்குறைந்துள்ளது. நாட்டிலுள்ள 25 கோடி முஸ்லிம் மக்கள் தொகைக்கேற்ப மக்களவையில் பிரதிநிதித்துவம் குறைந்து வருவது அதிர்ச்சியையும், வருத்தத்தையும் சமுதாயத்திற்கு மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

2014ஆம் ஆண்டில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தபிறகு பெரும்பாலான எதிர்க்கட்சிகள், ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும், ஒரு துருவப் போட்டிக்கு பயந்து, முஸ்லிம் வேட்பாளர்களுக்கு டிக்கெட் வழங்காமல் ஒதுங்கி விட்டதால், நாடாளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 17ஆவது மக்களவைத் தேர்தலில் 115 முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் 18ஆவது மக்களவைத் தேர்தலில் சுயேட்சைகள் உட்பட மொத்தம் 78 முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

**சுவையான தகவல்கள் :**

18ஆவது மக்களவையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் இடி முஹம்மது பஷீர், எம்.பி.அப்துல் ஸமது சமதானி, கே.நவாஸ்கனி ஆகிய 3 பேரையும் சேர்த்து மொத்தம் 24 முஸ்லிம்எம்.பி.க்கள் மட்டுமே இருப்பார்கள். இதே போன்று யூசுஃப் பதான், அசாதுதீன் ஒவைசி, இக்ரா சவுத்ரி உள்ளிட்டோரும் நாடாளுமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 24 பேரில் இருந்து வருகிறார்கள்.

தனது அரசியல் அறிமுகத்தில் வெற்றி பெற்ற கிரிக்கெட் வீரராக இருந்து அரசியல்வாதியாக மாறிய யூசுப் பதான் மேற்கு வங்க மாநிலம் பெர்ஹம்பூர் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு காங்கிரஸின் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை வீழ்த்தினார். உத்தர பிரதேசத்தில் சஹாரான்பூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் இம்ரான் மசூத் 64,542 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கைரானாவில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சமாஜ்வாதி கட்சியின் இக்ரா சவுத்ரி பாரதீய ஜனதாவின் பிரதீப் குமாரை 69,116 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

அகில இந்திய மஜ்லிஸ்இத்தேஹாதுல்முஸ்லிமீன் தலைவர் அசாதுதீன் ஒவைசி 3,38,087 வாக்குகள் வித்தியாசத்தில் பாரதீய ஜனதாவின் முன்னணித் தலைவர் மாதவி லதாவை தோற்கடித்து தனது ஹைதராபாத் கோட்டையை தக்க வைத்துக் கொண்டார். லடாக்கில் சுயேட்சை வேட்பாளர் முஹம்மது ஹனீபா, காங்கிரஸின் ஜம்பாங் சிங் நாம்யாலை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்.பி.க்கள் :**

18வது மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 24 உறுப்பினர்கள் குறித்த சில முக்கிய தகவல்களை நாம் அறிந்து கொள்வோம். இந்தியாவில் ஜனநாயக நடைமுறைகள் தொடங்கப்பட்டு, நாடாளுமன்ற நடவடிக்கைகள் அமலுக்கு வந்த நாள் முதல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இடம் பெற்று வருகிறார்கள். ஏக இறைவனின் கருணையால் இந்த 18வது மக்களவைத் தேர்தலிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் மூன்று பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கேரள மாநிலம் மலப்புரம் தொகுதியில் போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் இ.டி. முஹம்மது பஷீர் தம்மை எதிர்த்து போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வி.வாசிப்பை விட 3,00,118 வாக்குகள் அதிகம்

பெற்று வெற்றி பெற்றுள்ளார். இ.டி.முஹம்மது பஷீர் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 6,44,006 ஆக உள்ளது. இதுபோன்று கேரளா மாநிலம் பொன்னானி தொகுதியில் போட்டியிட்ட மற்றொரு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் எம்.பி.அப்துஸ் ஸமது சமதானி தம்மை எதிர்த்து போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் கே.எஸ். ஹம்சாவை விட 2,35,760 வாக்குகள் கூடுதல் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அப்துல் ஸமது சமதானிக்கு இந்தத் தேர்தலில் மொத்தம் 5,62,516 வாக்குகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில், இராமநாதபுரம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் போட்டியிட்ட கே.நவாஸ் கனி தம்மை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தை 1,66,782 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து சாதனை புரிந்தார். இந்த தொகுதியில் நவாஸ் கனிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 5,09,664 ஆக உள்ளது.

**காங்கிரஸ் முஸ்லிம் எம்.பி.க்கள் :**

18வது மக்களவைக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் மொத்தம் 7 முஸ்லிம் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். அசாம் மாநிலம் துப்ரி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட ரகீபுல் ஹுசைன் நாட்டிலேயே அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற வேட்பாளர் என்ற சாதனையை புரிந்துள்ளார். இவருக்கு மொத்தம் 14,71,885 வாக்குகள் கிடைக்க, எதிர்த்து போட்டியிட்ட மற்றொரு முஸ்லிம் வேட்பாளர் முஹம்மது பத்ருத்தீன் அஜ்மலுக்கு 4,59,409 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இதன்மூலம் 10,12,476 வாக்குகள் வித்தியாசத்தில் ரகீபுல் ஹுசைன் வெற்றி பெற்றுள்ளார். பீகார் மாநிலம் கிஷன்கஞ்ச் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் முஹம்மது ஜாவேத் மொத்தம் 4,02,850 வாக்குகள் பெற்று 59,692 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இதே போன்று கதிஹார் தொகுதியில் போட்டி யிட்ட காங்கிரஸ் வேட்பாளர் தாரிக் அன்வர் மொத்தம் 5,67,092 வாக்குகள் பெற்று எதிர்க்கட்சி வேட்பாளரை 49,863 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

கேரள மாநிலம் வடகரை தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஷாபி பரம்பில், மொத்தம் 5,57,528 வாக்குகள் பெற்று ஒரு இலட்சத்து 14,506 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்

றுள்ளார். உத்தரபிரதேசமாநிலம் சஹாரன்பூர் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் இம்ரான் மசூத் 64,542 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 5,47,967 ஆகும். மேற்கு வங்க மாநிலம் மல்த்ஹா தக்ஷின் தொகுதியில் போட்டியிட்ட இஷா கான் சவுத்ரி என்ற காங்கிரஸ் வேட்பாளர், மொத்தம் 5,72,396 வாக்குகள் பெற்று, தம்மை எதிர்த்து போட்டியிட்டவரை 1,28,368 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார். இலட்சத்தீவு தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் முஹம்மது ஹம்துல்லாஹ் சயீத், மொத்தம் 25,726 வாக்குகள் பெற்று, 2,647 வாக்குகள் வித்தியாசத்தில் எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை வீழ்த்தியுள்ளார்.

**சமாஜ்வாதி கட்சி முஸ்லிம் எம்.பி.க்கள் :**

இதே போன்று 18ஆவது மக்களவைக்கு சமாஜ்வாதி கட்சி சார்பில் மொத்தம் 4 முஸ்லிம் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். கைரானா தொகுதியில் சமாஜ்வாதி கட்சி சார்பில் போட்டியிட்ட பெண் வேட்பாளர் இக்ரா சவுத்ரி மொத்தம் 5,28,013 வாக்குகள் பெற்று, 69,116 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். ராம்பூர் தொகுதியில் போட்டியிட்ட மற்றொரு சமாஜ்வாதி கட்சி முஸ்லிம் வேட்பாளர் முஹிப்புல்லாஹ் 4,81,503 வாக்குகள் பெற்று, 87,434 வாக்குகள் வித்தியாசத்தில் தம்மை எதிர்த்து போட்டியிட்ட பாரதீய ஜனதா வேட்பாளரை வீழ்த்தியுள்ளார். சம்பல் தொகுதியில் போட்டியிட்ட ஜியா உர் ரஹ்மான், பாரதீய ஜனதா வேட்பாளரை விட 1,21,494 வாக்குகள் கூடுதல் பெற்று வெற்றியை சுவைத்துள்ளார். இவருக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 5,71,161 ஆக உள்ளது. காஜிபூர் தொகுதியில் போட்டியிட்ட அஃப்சல் அன்சாரி, மொத்தம் 5,39,912 வாக்குகள் பாரதீய ஜனதா வேட்பாளரை 1,24,861 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

**திரிணாமுல் காங்கிரஸ் முஸ்லிம் எம்.பி.க்கள் :**

மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி தலைவராக இருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் 18ஆவது மக்களவைக்கு மொத்தம் 5 முஸ்லிம் உறுப்பினர்கள் தேர்வாகியுள்ளனர். ஜாங்கிபூர் தொகுதியில் போட்டியிட்ட கலீலுர் ரஹ்மான், மொத்தம் 5,44,427 வாக்குகள் பெற்று, 1,16,637 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். பஹரம்பூர் தொகுதியில்

போட்டியிட்ட பிரபல கிரிக்கெட் வீரர் யூசுஃப் பதான் 5,24,516 வாக்குகள் பெற்று, 85,022 வாக்கு கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். முர்ஷிதாபாத் தொகுதியில் அபு தாஹா கான், மொத்தம் 6,82,442 வாக்குகள் பெற்று, 1,64,215 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். பர்ஹத் தொகுதியில் போட்டியிட்ட எஸ்.கே.நூருல் இஸ்லாம் மொத்தம் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 8,03,762 ஆகும். இவர் பாரதீய ஜனதா வேட்பாளரை 3,33,547 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளார். உலுபெரியா தொகுதியில்போட்டியிட்ட பெண் வேட்பாளர் சஜ்தா அஹமது, 2,18,673 வாக்குகள் வித்தியாசத்தில் தம்மை எதிர்த்து போட்டியிட்ட பாரதீய ஜனதா வேட்பாளரை வீழ்த்தியுள்ளார். இவருக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 7,24,622 ஆகும்.

**பிற கட்சி முஸ்லிம் எம்.பி.க்கள் :**

ஹைதராபாத் தொகுதியில் போட்டியிட்ட அகில இந்திய மஜ்லிஸ் இத்தேஹாதுல் முஸ்லிமீன் தலைவர் அசாதுதீன் ஒவைசி, மொத்தம் 6,61,981 வாக்குகள் பெற்று, 3,38,087 வாக்குகள் வித்தியாசத்தில் பாரதீய ஜனதாவின் முன்னணி தலைவர் மாதவிலதாவை தோற்கடித்து தனது ஹைதராபாத் கோட்டையை தக்க வைத்துக் கொண்டார். ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டு கட்சி சார்பில் ஸ்ரீநகர் தொகுதியில் போட்டியிட்ட ஆகா சையத் ரூஹுல்லாஹ் மெஹ்தி, 3,56,866 வாக்குகள் பெற்று, 1,88,416 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இதேபோன்று அனந்த் நாக்ரா ஜௌரி தொகுதியில் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளர் மியான் அல்தாஃப் அஹமத், 5,21,836 வாக்குகள் பெற்று, 2,81,794 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்தத் தேர்தலில் சுயேட்சையாக நின்ற 2 முஸ்லிம் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அதன்படி ஜம்மு கஷ்மீர் மாநிலம் பாரமுல்லா தொகுதியில் போட்டியிட்ட அப்துல் ரஷீத் ஷேக் 4,72,481 வாக்குகள் பெற்று, 2,04,142 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார். லடாக் தொகுதியில் மற்றொரு சுயேட்சை முஸ்லிம் வேட்பாளர் முஹம்மது ஹனீபா, மொத்தம் 65,259 வாக்குகள் பெற்று, தம்மை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை 27,862 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளார்.

**கவனம் செலுத்த வேண்டும் :**

இது ஒருபுறம் இருக்க, மக்களவையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைந்து கொண்டே வருவது மிகவும்

வேதனையளிக்கிறது. நாட்டில் 25 கோடிக்கும் அதிகமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் உரிய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் அவர்களின் பொருளாதார, சமூக வாழ்க்கை நிலைமை குறித்து ஆட்சியாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும். இனி வரும் காலங்களில் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசியல் கட்சிகள் கவனம் செலுத்த வேண்டும்.

## முஸ்லிம் ஆண் - இந்துப் பெண் கலப்பு மதத் திருமணம் செல்லாது!

முஸ்லிம் ஆணுக்கும், இந்து பெண்ணுக்கும் இடையே சிறப்பு திருமண சட்டத்தின் கீழ் திருமணம் நடைபெற்றிருந்தாலும், இஸ்லாமிய சட்டத்தின் கீழ் அந்தத் திருமணம் செல்லாது என்று மத்திய பிரதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய இளைஞர் ஒருவரும், இந்து பெண் ஒருவரும் திருமணம் செய்து கொண்டனர். இவர்களது திருமணத்திற்கு பெண் வீட்டில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மதம் மாறி செய்யும் இந்தத் திருமணத்தை ஏற்றுக் கொண்டால் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுவோம் என்ற அச்சத்தில் பெண் வீட்டில் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில்தான் சிறப்பு திருமண சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்ட பின்னர் திருமண பதிவு அதிகாரி முன்பு ஆஜராகும்போது தங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறி மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை தள்ளுபடி செய்தது மத்திய பிரதேச நீதிமன்றம். மேலும் மனு மீதான விசாரணையின் போது நீதிபதி குர்பால் சிங் அலுவாலியா சில கருத்துக்களை கூறினார். நீதிபதி கூறுகையில், “சிறப்பு திருமண சட்டத்தின்கீழ் அவர்கள் திருமணம் செய்து கொண்டாலும் கூட முஸ்லிம் சட்டத்தின்கீழ் வழக்கத்திற்கு மாறான திருமணமாகவே இது கருதப்படும்” என்று கூறினார்.

## இந்திய அரசியலில் மூன்று புதிய இளம் முஸ்லிம் பெண் ஆளுமைகள்....!

உலகில் மிக வேகமான முறையில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்கள் ஈடுபட்டு, ஆதிக்கம் செலுத்தி, சாதனை

புரிந்து வருகிறார்கள். கல்வி, அறிவியல், பொருளாதாரம், சமூகம் உள்ளிட்ட துறைகளில் மட்டுமல்லாமல் அரசியலிலும் பெண்கள் அதிக ஆர்வம் செலுத்தி, அதன்மூலம் மக்கள் நலப் பணிகளில் ஈடுபடுகிறார்கள். முஸ்லிம் பெண்களை பொறுத்தவரை, அவர்களும் தற்போது அரசியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆர்வம் செலுத்த தொடங்கியுள்ளார்கள். ஆர்வம் மட்டும் செலுத்தாமல் அதில் தங்களது திறமைகளை நன்கு வெளிப்படுத்தி மிகப்பெரிய அளவுக்கு சாதித்தும் வருகிறார்கள்.

அந்த வகையில் இந்திய முஸ்லிம் பெண்களும் சாதனை செய்ய தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்று கூறும் வகையில், அரசியலில் ஈடுபட்டு பெருமளவுக்கு சமுதாயத்தின் கவனத்தை கவர்ந்து வருகிறார்கள். அண்மையில் நடைபெற்ற 18ஆவது மக்களவைத் தேர்தலில் இரண்டு முஸ்லிம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். உத்தரப்பிரதேச மாநிலம் கைரானா தொகுதியில் சமாஜ்வாதி கட்சி சார்பில் போட்டியிட்ட இக்ரா சவுத்ரி வெற்றி பெற்று மக்களவைக்கு தேர்வாகியுள்ளார். மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் உலுபெரியா தொகுதியில் போட்டியிட்ட சஜ்தா அஹமதும் வெற்றி பெற்றுள்ளார். இதே போன்று, ஒடிசா மாநிலத்தில் காங்கிரஸ் சார்பில் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்ட சோபியா ஃபிர்தௌஸ், வெற்றி பெற்று, ஒடிசாவின் முதல் முஸ்லிம் பெண் எம்.எல்.ஏ. என்ற பெருமையை பெற்றுள்ளார். இந்த மூன்று பெண் ஆளுமைகள் குறித்து நாமும் கொஞ்சம் அறிந்து கொள்வோம்.

**இக்ரா சவுத்ரி**

29 வயதான சமாஜ்வாதி கட்சியின் அறிமுகமான இக்ரா சவுத்ரி, உத்தரப்பிரதேசத்தில் உள்ள கைரானா மக்களவைத் தொகுதியில் வெற்றி பெற்றதன் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளார். அங்கு அவர் பாரதீய ஜனதாவின் பிரதீப் குமாரை 69 ஆயிரத்து 116 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். சைனிகள், ராஜபுத்திரர்கள், குஜ்ஜார்கள், ஜாட்கள், தலித்கள் என அனைத்து சமூகத்தினரும் தமக்கு வாக்களித்ததைக் காட்டுகிறது என்று இக்ரா சவுத்ரி மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

நாம் ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் என்றாலும் தனது தொகுதியின் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பொறுப்பு தமக்கு உள்ளது என்றும் தொகுதி தொடர்பான பிரச்சனைகளை

துவக்கம் : 1958

நம்பர் 1 மாத இதழ்

# குர்ஆனின் குரல்

நிறுவனர்கள் :

அல்லாமா அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி ஹஸ்ரத் (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்" அ. முஹம்மது அஷ்ரஃப் அலி மன்பயீ ஹஸ்ரத் (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா முஃப்தீ மு. முஹம்மது இஸ்மாயீல்

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ ஹஸ்ரத்



**குர்ஆனின் குரல்** தபால் பெட்டி எண் : 45,

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் : **94420 56547**

E.mail : quraaninkural@gmail.com ★ web : www.quraaninkural.com


**ஓராண்டு சந்தா ரூ.300/- ⬟ தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **6851528029** IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**

M/s. INDIAN OVERSEAS BANK, Madurai Meenakshi College Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **17570100003467** IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH


குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

நாடாளுமன்றத்தில் எழுப்பு வதுடன் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டால் அதற்கு எதிராக குரல் எழுப்ப இருப்பதா கவும் இக்ரா சவுத்ரி உறுதி படத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேசிய ஜன நாயக கூட்டணி ஆட்சி, நீண்ட நாட்கள் நீடிக்கும் என்று நாம் நினைக்கவில்லை. இனி அவர் களால் ஒரே இரவில் சட்டங் களை இயற்ற முடியாது. இப்போது வலுவான எதிர்க்கட்சி உள்ளது. இன்னும் ஆறு மாதங்களில் "இண்டியா கூட்டணி" ஆட்சி அமைக்கும் என்றும் இக்ரா சவுத்ரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இக்ரா சவுத்ரி மூன்றாம் தலை முறை அரசியல்வாதி, அவரது தாத்தா அக்தர் ஹசன் மற்றும் அவரது தந்தை முனவ்வர் ஹஸன் ஆகியோர் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அவரது தாயார் தபஸ்ஸூம் ஹஸனும் 2009 மற்றும் 2018ஆம் ஆண்டு களின் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். இக்ராவின் மூத்த சகோதரர் நாஹித் ஹஸன் மூன்று முறை எம்.எல்.ஏ.வாக இருந்தவர்.

**சஜ்தா அஹமது :**

மேற்கு வங்க மாநிலம் உலுபெரியா மக்களவைத் தொகுதியில் அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முஸ்லிம் பெண் வேட்பாளர் சஜ்தா அஹமது பாரதீய ஜனதாவின் அருண் உதய்ப்பால் சவுத்ரியை சுமார் 2 இலட்சத்து 18 ஆயிரம் வாக்கு கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாதனை வெற்றியை பெற்றுள் ளார். 26 வயதான சஜ்தா அஹமது கொல்கத்தா பல்கலைக்கழகத் தில் கல்வி பயின்று 2013இல் பட்டம் பெற்றார். அவரது தந்தை சுல்தான் அஹமதுவின் மறைவுக்குப்பிறகு சஜ்தா அஹமது கடந்த 2018இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்று முதல் முறை யாக மக்களவை உறுப்பினராக சென்றார். தற்போது பெற்ற வெற்றியின் மூலம் அவர் உலுபெரியா மக்களவைத் தொகுதியைத் தக்க வைத்துக் கொண்டார்.

சஜ்தா அஹமதுவின் தந்தை மறைந்த சுல்தான் அஹமது உலுபெரியாவில் இருந்து இரண்டு முறை எம்.பி.யாகவும், டி.எம்.சியின் முக்கிய முஸ்லிம் முகமாகவும் இருந்தவர். தனது கணவர் தாம் அரசியலில் சேர வேண்டும் என்று விரும்பிய தாகக் கூறும் சஜ்தா அஹமது, ஆனால் தாம் அதை மறுத்து விட்டதாக நினைவுகூருகிறார். "குடும்பத்தில் ஏற்கனவே இரண்டு அரசியல்வாதிகள் இருந்தனர். என் குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். நான் தீவிரமாக பிரச்சாரம் செய்யாமல் இருந்

திருக்கலாம். ஆனால் எனது தந்தையின் 30 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான் நிழலாக இருந்தேன்" என்றும் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது தனது கணவரின் விருப்பத்தை ஒரு வழியில் நிறைவேற்றி இருப்பதாக சஜ்தா தெரிவித்துள்ளார்.

**சோபியா ஃபிர்தௌஸ் :**

ஒடிசாவின் முதல் முஸ்லிம் எம்.எல்.ஏ. என்ற பெருமையை பெற்றுள்ளார். காங்கிரஸைச் சேர்ந்த சோபியா ஃபிர்தௌஸ் என்ற பெண்மணி அண்மையில் நடைபெற்ற ஒடிசா சட்டப் பேரவைத் தேர்தலில் 32 வயதான சோபியா ஃபிர்தௌஸ், பாராபதி கட்டாக் தொகுதியில் பாரதீய ஜனதா வேட்பாளரும், புகழ்பெற்ற மகளிர் மருத்துவ நிபுணருமான டாக்டர் பூர்ண சந்திர மகாபத்ராவை சுமார் 8 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார். தனது இந்த வெற்றியை சகோதரத்துவத்தின் செய்தியாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் பெண்ணாக தாம் சரித்திரம் புரிந்திருப்பதாகவும், ஆனால், சட்டப்பேரவையில் 147 எம்.எல்.ஏ.க்களில் இந்த முறை 11 பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், இதன் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும், பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும், அரசியலில் பெண்கள் தம்மை ஒரு முன்மாதிரியாக பார்க்க முடியும் என்றும் சோபியா குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ஐ.எம். பெங்களூருவின் முன்னாள் மாணவியான சோபியா, ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் இயக்குநராகவும், இந்திய ரியல் எஸ்டேட் டெவலப்பர்கள் சங்கத்தின் (கிரெடாய்) புவனேஸ்வர் பிரிவின் தலைவராகவும் பதவி வகித்த முதல் பெண்மணி ஆவார். மகிழ்ச்சியான நடத்தைக்காக "சிரிக்கும் எம்.எல்.ஏ." என்று அழைக்கப்படும் சோபியாவை "கட்டாக்கின் மகள், கட்டாக்கின் மருமகள்" என்றும் மக்கள் அன்புடன் அழைத்து வருகிறார்கள்.

சோபியா, கட்டாக்கை ஒரு நிலையான நகரமாகவும், ஃபிலிகிரி வேலைகளுக்கான மையமாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். அத்துடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், தனது தொகுதியை மேம்படுத்த மக்களிடம் ஏற்கனவே ஆலோசனைகள் கேட்டுள்ளதாகவும் சோபியா ஃபிர்தௌஸ் கூறியிருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கிறது.

இஸ்லாமிய பெண்கள் நல்ல கல்வி பெற்று அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சாதிக்க தொடங்கி விட்டார்கள். இதன்மூலம் இஸ்லாமிய மார்க்கம் பெண்களை

அடிமைப்படுத்தி வைக்கிறது, அவர்களுக்கு உரிமைகளை கொடுக்கவில்லை என்ற சிலரின் குற்றச்சாட்டுகள் பொய்யாகி வருகின்றன.

## தியாகத் திருநாளில் கிராமப்புற முஸ்லிம்கள் மனிதநேயத்துடன் செய்த தியாகம்...!

இந்தியாவில் ஜூன் 17 ஆம் தேதி தியாகத் திருநாள் எனப்படும் ஹஜ் பெருநாள், முஸ்லிம்களால் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப் பட்டது. அந்தத் திருநாளில் இஸ்லாமிய மக்கள் குர்பானி கொடுத்து, அதன் இறைச்சியை ஏழை, எளிய மக்களுக்கு பங்கிட்டு வழங்கி, தாங்களும் உண்டு மகிழ்ந்தனர். தியாகத் திருநாள், இஸ்லாமியப் பெரு மக்களால் கொண்டாடப்பட்டா லும், இந்தத் திருநாள் மூலம் பொருளாதார ரீதியாக அதிகப் பலன் அடைவது சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த கிராமப்புற விவசாயிகள்தான் என்பது நாம் அனைவரும் அறிந்த செய்தியாகும்.

தியாகத் திருநாள் தரும் செய்தி என்னவென்றால், மனிதன் தன்னுடையவாழ்க்கை யின் ஒவ்வொரு கட்டத்திலும் தியாகம் செய்யத் தயங்கவே கூடாது என்பதாகும். இதன் காரணமாகத்தான், முஸ்லிம் களில் பெரும்பாலானோர், தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது, மனிதநேய நடவடிக்கைகளிலும், நலப்பணிகளிலும் கொஞ்சம் கூடத் தயங்காமல், உடனடியாக உதவிக்கரம் நீட்டி விடுவார்கள். மற்றவர்களுக்கு உதவ முன் வருவார்கள். இதற்கு உலகம் முழுவதும் பல சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம். ஏன், இந்தியத் திருநாட்டில் கூட பல அழகிய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழகத் தில் இவைபோன்ற சம்பவங்கள் ஏராளம் எனக் கூறலாம்.

### தியாகத் திருநாளில் ரயில் விபத்து :

ஜூன் 17 ஆம் தேதி திங்கட் கிழமை இந்தியாவில் தியாகத் திருநாள் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம்தான் மேற்கு வங்கமாநிலம்டார்ஜிலிங் அருகே கஞ்சன்சங்கா விரைவு ரயில் மற்றொரு சரக்கு ரயில் மீது பயங்கரமாக மோதி விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் 10 பயணிகள் உயிரிழந்தார்கள். 40 பேர் படுகாயமடைந்தனர்.

ரயில் விபத்து நடந்த இடம் ரங்காபானி என்ற கிராமத்திற்கு அருகே இருந்த இடமாகும். இந்தக் கிராமத்தில் வாழும் மக்களில், பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள் ஆவார்கள். அன்று தியாகத் திருநாள் என்ப தால், அங்குள்ள முஸ்லிம்கள் பெருநாள் தொழுகைக்குத்

தயாராகி, மஸ்ஜிதிற்குச் சென்று சிறப்புத் தொழுகையை நிறைவேற்றி, உலக அமைதிக் காக ஏக இறைவனிடம் துஆ செய்தனர்.

அப்போது தான், ஒரு பயங்கர சத்தம் அவர்களுக்குக் கேட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்த முஸ்லிம்கள், நிலநடுக்கம் ஏற்பட்டு விட்டதோ என அஞ்சினர். பிறகு தான், அது நிலநடுக்கம் இல்லை, பெரிய ரயில் விபத்து என அவர் களுக்குத் தெரிந்தது. உடனே விபத்து நடந்த பகுதிக்கு முஸ்லிம்கள் விரைந்து ஓடோடிச் சென்றனர்.

**பண்டிகையை தியாகம் செய்து மீட்புப் பணி :**

தியாகத் திருநாளில் வீட்டில் குடும்பத்திலுள்ள அனைவருடனும் சேர்ந்து மகிழ்ச்சியாக பண்டிகையைக் கொண்டாட வேண்டிய அவர் கள் கொண்டாட்டங்களைத் தியாகம் செய்து விட்டு, ரயில் விபத்தில் சிக்கிக் கொண்டு, உயிருக்குப் போராடிய பயணி களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அத்துடன், ரயில் விபத்து குறித்த தகவல் களை ரயில்வே துறை மற்றும் மேற்கு வங்க மாநில அரசு உயர் அதிகாரிகளிடம் தெரிவித் தனர். காவல்துறைக்கும் தகவல் கொடுத்தனர். கிராமப்புற முஸ்லிம் மக்கள் கொடுத்த இந்தத் தகவலின் பேரில், மேற்குவங்க அரசும், ரயில்வே துறையும் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டன. இவர்களுக்கு உதவியாக முஸ்லிம் இளைஞர்கள் கடைசி வரை இருந்து மனிதநேய உதவிகளைச் செய்தனர்.

அத்துடன், அவர்கள் நின்று விடவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புகலிடம் அளித்து, அவர்களுக்கு உணவு, தண்ணீர் ஆகியவற்றைக் கொடுத்து தங்களது அன்பை வெளிப் படுத்தினர். குறிப்பாக, முஸ்லிம் இளைஞர்கள், மாணவர்கள் தங்கள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து விட்டு, மீட்புப் பணி யில் ஈடுபட்டது, அவர்களிடம் இருந்த மனித நேயத்தை வெளிச்சம்போட்டுக்காட்டியது.

**முதுகில் தூக்கிச் சென்று உதவி:**

ரயில் விபத்து நடந்த இடம் மருத்துவமனைக்கு வெகு தொலைவில் இருந்த இடமா கும். எனவே, அங்கு மருத்துவ வாகனம் வருவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த முஸ்லிம் இளைஞர்கள், விபத்தில் காயம் அடைந்த பயணிகளைத் தங்கள் முதுகுகளில் சுமந்து சென்று, அவர்களை மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதன் மூலம், பலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

முஸ்லிம் இளைஞர்கள், மாணவர்கள், கிராம மக்கள் செய்த இந்த மனிதநேய செயலைக் கண்டு, சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த பயணிகள் வியப்பு அடைந்து, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த மனிதநேய உதவியைச் செய்தது குறித்து பெயர் குறிப்பிட விரும்பாத முஸ்லிம் இளைஞர் ஒருவர், தியாகத் திருநாளில், கொண்டாட்டத்தைக் கை விட்டு, விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தது மன நிறைவுடன் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்று, மீட்புப் பணிகளில் ஈடுபட்ட மற்ற இளைஞர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். இஸ்லாம் மார்க்கம் தியாகத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை தங்களுடைய பணிகள் மூலம் உணர்ந்து கொண்டதாக கிராமப்புற முஸ்லிம் மக்கள் கூறியது உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கிறது.

**மம்தா பானர்ஜி பாராட்டு:**

கஞ்சன்சங்கா விரைவு ரயில் விபத்து மீட்புப் பணியில் ஈடுபட்ட ரங்காபானி கிராம முஸ்லிம் மக்களின் மனிதநேய சேவையை அறிந்து, மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி பாராட்டு தெரிவித்துள்ளார். இந்தச் சேவையில் ஈடுபட்டு, பல உயிர்களைக் காப்பாற்றிய இளைஞர்களுக்கு அரசுப் பணி வழங்க ஆவன செய்யப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

**தயக்கமே வேண்டாம்:**

வாழ்க்கையில் தியாகங்களைச் செய்ய கொஞ்சமும் தயங்கக் கூடாது. தியாகத் திருநாள் அன்று கொண்டாட்டங்களைத் தியாகம் செய்யாமல், ரங்காபானி முஸ்லிம் இளைஞர்கள் இல்லாதிருந்தால், ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். முஸ்லிம் இளைஞர்களின் தியாகம், பல உயிர்களைக் காப்பாற்றியது. இஸ்லாமிய மக்கள் எப்போதும் மனிதநேயம் கொண்டவர்கள். அனைத்து மக்களையும் நேசிப்பவர்கள். அன்பு செலுத்தக் கூடியவர்கள். முஸ்லிம் மக்கள் குறித்து, சில அரசியல் கட்சிகள் செய்யும் பொய்ப் பிரச்சாரங்களை தங்களது அன்பு மற்றும் மனிதநேய உதவிகள் மூலம் முறியடிப்பவர்கள். இதற்கு கஞ்சன்சங்கா விரைவு ரயில் விபத்து மீட்புப் பணியே சிறந்த எடுத்துக்காட்டு.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

மக்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், பயணிகளுக்கும் பலன்தரும்வகையில் முஹம்மது பின் துக்ளக் ஆட்சியின்போது டெல்லியில் நதயானாவில் கிணறு வெட்டப்பட்ட செய்தியை 6.8.1327 தேதியிட்ட கல்வெட்டு அறிவிக்கிறது. இந்தக் கல்வெட்டு பற்றிய குறிப்பு எங்கு கிடைக்கிறது என்று தெரியுமா? டெல்லி தொல்லியல் வெளியிட்டுள்ள நூலில் அந்த விபரம் உள்ளது.

இதே நூல் தரும் இன்னொரு கல்வெட்டு முஹம்மது பின்துக்ளக் ஆட்சியில் 1328ஆம் ஆண்டில் வெளிவந்தது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள அந்தக் கல்வெட்டு டெல்லிக்கு அருகில் கிடைத்தது.

**சர்பான்**

டெல்லிக்கு அருகில் 5 மைல் தொலைவில் சர்பான் (Sarban) என்ற கிராமத்தில் கிடைத்தது. சர்வலா (Sarvala) அல்லது சரபலா (Sarabala) என்று அந்தக் கல்வெட்டில் அந்தக் கிராமத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. கருப்புக் கல்லில் 17" இன்ச் அளவில் 18 வரிகளைக் கொண்டது இந்தக் கல்வெட்டு. சமஸ்கிருத கவிதை வடிவில் உள்ளது.

**16.2.1328 செவ்வாய்க்கிழமை**

16.2.1328 செவ்வாய்க் கிழமை பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு அக்ரோதகா (Agrotaka) என்ற இடத்தில் வாழ்ந்து வந்த இந்து வியாபாரிகளின் செழுமையை விளக்குகிறது.

**ஆக்ரா வியாபாரிகள்**

அக்ரோதகா என்பது ஆக்ரா வியாபாரிகள் டெல்லியில் தங்கியிருந்த குடியிருப்பு பகுதியாகும். நரெய்டு சர்பான் கல்வெட்டுகள் மூலம், டெல்லியில் வாழ்ந்திருந்த இந்துக்கள் முஹம்மது பின் துக்ளக்கின் தலைநகர மாற்றத்தினால் பாதிக்கப்படவில்லை என்பது புலனாகிறது. அத்தோடு அவர்கள் டெல்லியில் வாழ்ந்து வந்தார்கள் என்பதும் தெளிவாகிறது.

**இரண்டாவது நிர்வாக மையம்**

டெல்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை முஹம்மதுபின் துக்ளக் மாற்ற

வில்லை. மாறாக அதனை இரண்டாவது நிர்வாக மைய மாக மாற்றிடவே முயன்றார். டெல்லியில் (Second Administrative City) பேரரசுக்கு இரண்டு தலைநகரங்கள் இருந்தன.

### குவ்வத் துல் இஸ்லாம்

டெல்லி, தேவகிரி (குவ்வத் துல் இஸ்லாம்) என்ற இரு தலைநகரங்கள் இருந்ததாக அல் கல் சஉதி (Al Qul Shaudi) கூறுகிறார்.

### தக்த்கா - இ - டெல்லி (அல்ஹிஜ்ரி 730)

கி.பி.1329 - 1330இல் முஹம்மது பின் துக்ளக் வெளி யிட்ட நாணயத்தில் தக்த்கா - இ - டெல்லி என்ற (Takhtgah-i Delhi) வாசகத்தைக் காண் கிறோம்.

### தக்த்கா - இ - தௌலதாபாத்

அல்ஹிஜ்ரி 731இல் வெளியான நாணயம் 1330 - 1331 தக்த்கா - இ - தௌலதபாத் என்று உள்ளது Takhtgah-i Daulatabad.

எனவே, டெல்லியும், தேவகிரியும் இரண்டு தலை நகரங்களாக முஹம்மது பின் துக்ளக் காலத்தில் விளங்கி யிருத்தல் வேண்டும் என்ப தனை இந்த நாணயங்கள் உணர்த்துகின்றன.

### டெல்லியில் நிர்மாணப்பணிகள்

தேவகிரிக்கு மக்களை கொஞ்சம் அனுப்பி வைத்த பிறகு முஹம்மது பின் துக்ளக் டெல்லியில் சில நிர்மாணப் பணிகளைத் திட்டமிட்டு மேற் கொண்டார் என்றும் வரலாற்றில் குறிப்பாக காணப்படுகிறது.

### அரண்மனையில் சந்தடி

கி.பி.1327, 1330 ஆகிய இரண்டு ஆண்டுகளில் டெல்லி அரண்மனையில் அவ்வப்போது முஹம்மது பின் துக்ளக் தங்கியிருந்தார் என்றும் எப்போதும் அரண்மனையில் சந்தடியிருந்து வந்தது என்றும் கூறப்படுகிறது.

### வரலாற்றில் சொல்லப்படும் தவறு

தேவகிரி (The hill of the Gods) குத்புதீன் முபாரக் கில்ஜி. (Qutbuddin Mubarak Kilji) காலத்தில் குத்பாபாத் (Qutbabad) என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டது. குத்பாபாத் என்ற பெயரைத்தான் தௌலதாபாத் (Daulatabad) என்று முஹம்மது பின் துக்ளக் மாற்றினார்.

தேவகிரியை பெயர் மாற்றம் செய்தது, குத்புதீன் முபாரக் கில்ஜி, குத்பாபாத் என்று அவர் மாற்றிய பெயரை தௌலதாபாத் என்று முஹம்மது பின் துக்ளக் மாற்றினார் என்பதுதான் வரலாற்று உண்மையாகும்.

### W.H. மோர்லாண்டு, A.C. சாட்டர்ஜி

ஆங்கிலத்தில் W.H. மோர்லாண்டு,

A.C.சாட்டர்ஜி இருவரும் சேர்ந்து எழுதிய நூல் இந்திய வரலாற்றுச் சுருக்கம். அதன் தமிழாக்கத்தை 1951இல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. M.R. பெருமாள், முதலியார் இராமச்சந்திர தீட்சிதர் தமிழாக்கம் செய்தவர்களாவர்.

அந்த நூலில் பக்கம் 219இல் முஹம்மது துக்ளக்கின் முக்கிய திட்டங்களில் ஒன்று தன்னுடைய தலைநகரை தேவகிரிக்கு மாற்றுவது.

**புத்திசாலித்தனமானது**

அந்தத் திட்டம் ஒரு வகையில் புத்திசாலித்தனமானது தான். அந்த நகரம் இராஜ்ஜியத்தின் மத்தியிலுள்ளதால் மங்கோலியர்களால் டெல்லிக்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம். ஆனால் தேவகிரிக்கு அந்த ஆபத்து இல்லை.

**நல்லதுதான்**

ஆகவே தலைநகரத்தை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றுவது நல்லது தான் என்று W.H.மோர்லாண்டும், A.C.சாட்டர்ஜியும் தெரிவித்துள்ளனர். .

**வின்ஸ்டன் ஸ்மித் - சரியன்று**

ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாற்றில் வின்ஸ்டன் ஸ்மித் கூறுகிறார்.

கி.பி.1327இல் மக்கள் தௌலதாபாத்துக்கு மாற்றப்பட்டனர். இது தண்டிப்பதற்காகச் செய்யப்பட்டதென்றும், முஹம்மது பின் துக்ளக்கின் வெடுவெடுப்பின் உற்பத்தி அது என்றும், மிகக் கடுமையாகச் செய்து முடிக்கப்பட்டது என்றும் கூறுவது சரியன்று.

விந்தியமலைக்கு இப்பால் பேரரசின் இராணுவ நிர்வாகப் பிரச்சனையை முடிப்பதற்கு இராணுவக் கண்ணோட்டத்தில் சிறந்த இடத்தில் அமைந்திருந்தது தௌலதாபாத். எனவே, அந்நகரம் தேர்ந்தெடுக்கப் பட்டது.

தெற்கில் முஸ்லிம்களின் எண்ணிக்கையும், செல்வாக்கும் அதிகரிக்க ஒரு வேளை இம்மாற்றம் செய்யப்பட்டிருக்கக்கூடும்.

நாணயச்சாலை ஒன்றினை டெல்லியில் நீடித்து வைத்து அந்நகரில் கட்டடங்களைக் கட்டிக் கொண்டேயிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் டெல்லியில் தனது இராணுவத்தை முஹம்மது பின் துக்ளக் வலுப்படுத்தியது ஆகியவையெல்லாம் பிரபுக்களும் அலுவலர் களும் தான் தௌலதாபாத் திற்கு மாற்றப்பட்டனர் என்பதை அறிவிக்கின்றன.

But the continuance of amint in Delhi and of building activity, and the Sultan's re-equipment of his army

there only two years later, suggest that the move was for nobles and officials only.

**எட்டு ஆண்டுகள்**

தேவகிரி அல்லது தௌலதாபாத் மற்றுமொரு தலைநகரமாக அறிவிக்கப் பட்ட எட்டு ஆண்டுகளில் முஹம்மது பின் துக்ளக், டெல்லிக்கு திரும்புபவர்கள் திரும்பிச் செல்லட்டும் என்று அறிவித்தார்.

**17 ஆண்டுகள்**

17 ஆண்டுகள் கடந்த பின் (கி.பி.1344இல்)தான் தேவகிரி தலைநகரமாக முஹம்மது பின் துக்ளக்கால் அறிவிக்கப்பட் டது என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார்.

Though the Sulthan allowed, eight years after the experiment, those who wished to return to Delhi to do so. Devagiri was abandoned as the imperial capital only after seventeen years.

**வியத்தகு இந்தியா**

A.L.பாசம் B.A.,Ph.D., FRAS இலண்டன் பல்கலைக்கழகத் தில் பணியாற்றிய இந்திய வரலாற்றுப் பேராசிரியர் 1954இல் "The Wonder that was India" என்ற நூலை எழுதினார். 1956இல் மறுபதிப்பு கண்டது அந்த நூல். 1963இல் இலங்கை அரசாங்கம் அதனைத் தமிழாக் கம் செய்து வெளியிட்டது.

**செ.வேலாயுதம் பிள்ளை - மகேசுவரி பாலகிருட்டிணன்**

A.L.பாசம் நூலை செ.வேலாயுதம் பிள்ளை, மகேசுவரி - பாலகிருட்டிணன் ஆகியோர் தமிழில் மொழி பெயர்த்து இலண்டன் சிட்சுவிக்கு அனுப்பினர். யாக்சன் கம்பெனியார் அனுமதியுடன் வெளிவந்தது.

முகமதியர் (முஸ்லிம்கள்) வருகைக்கு முன் இந்தியத் துணைக்கண்டத்திலே நிலவிய பண்பாட்டை ஆராய்வது என்ற அளவில் A.L.பாசத்தின் "வியத் தகு இந்தியா" வெளி வந்தது. அதில் தேவகிரி குறித்துச் சொல்கிறார். பக்கம் : 187.

முஸ்லிம் வருகைக்கு முற்பட்ட மிகச்சிறந்த அரண் தேவகிரிக்கோட்டையாகும். இன்று இது தௌலதாபாத் எனப்படும். இது 1312இல் அலாவுதீன் கில்ஜி என்பவ ருடைய படைகளால் கைப்பற்றப்படும் வரை வடதக்காணத்தில் அரசாண்ட யாதவ மன்னரின் தலைநகரமாய்த் திகழ்ந்தது.

(தொடரும்)

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

தொடர் : 3

# ஹஜ் பயண வரலாறு

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

1920ஆம் ஆண்டு வரை ஸ்பெயின் நாட்டில் ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

இஸ்லாம் மதிக்கப்பட வேண்டும். அதன் கோட்பாடுகள் ஸ்பெயின் நாட்டின் அரசியல் கொள்கைகளுக்கு முரணானது இல்லை.

ஆகவே ஹஜ் பயணத்திற்கு ஸ்பெயின் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று 1920ஆம் ஆண்டில் உள்நாட்டு விவகாரங்களின் பிரதிநிதிகள் குழு (Delegation of Indigenous Affair) அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது.

ஹஜ் பிரயாணத்திற்கு சலுகைகள் அளிக்க வேண்டும் என்றும் அந்தக் குழு சிபாரிசு செய்தது. ஸ்பெயின் நாட்டின் இராணுவ மற்றும் அரசியல் தலைவர் உள்நாட்டு விவகாரங்களின் தலைவர் உயர் ஆணையர் என பல பதவி களை வகித்த ஜுவான்லூயி பீக்படர் என்பவர் 1936ஆம் ஆண்டில் டோமினே என்ற கப்பலில் ஹஜ் பயணிகளை அனுப்பும்படி சிபாரிசு செய்தார். 1937ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் தேதி அன்று டோமினேகப்பல் 298 ஹஜ் பயணிகளை ஏற்றிக் கொண்டு சியூடா துறைமுகத்திலிருந்து மக்கா நகரை நோக்கி புறப்பட் டது. ஒரு மவ்லானா தலைவர், ஒரு மூத்த மருத்துவர், தொழுகை நடத்த ஒரு இமாம், பாங்கு சொல்ல இரண்டு பிலால்கள், காவலாளர், மருத்துவ குழுவினர் ஆகியோர் ஹஜ் பயணிகளுடன் செல்ல வேண்டும் என்று ஹஜ் குழுவினர் சிபாரிசு செய்தனர். அதன்படி இஸ்லாமிய சட்டம் மற்றும் சரித்திர பேராசிரியர் மவ்லானா அஹ்மது அல் ரூஹானி என்பவரின் தலைமையில் 1939ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் தேதி அன்று மார்கஸ்டிகேமிலாஸ் என்ற நீராவிக் கப்பல் 800 ஹஜ் பயணிகளை ஏற்றிக் கொண்டு சியூடா துறைமுகத்திலிருந்து மக்கா நகரை நோக்கி புறப்பட் டது. மவ்லானா அஹ்மது அல் ரூஹானி அவர்கள் எழுதிய ஹஜ் பயண அனுபவங்களை

ஃபிரான்கோ அரபு ஸ்பானிஷ் ஆய்வு நிறுவனம் (The Franco Institute of Arabo-Spanish Research) ஒரு புத்தகமாக வெளியிட்டது.

ஹஜ் பயணிகளுக்கு பிர யாண சலுகைகள் தரப்பட்டன. 1939ஆம் ஆண்டில் மொராக்கோ நாட்டைச் சேர்ந்த ஏழை இராணுவத்தினரின் ஹஜ் பயண செலவுகளுக்காக பல இலட்சம் ரூபாய்களை உயர் ஆணையர் ஜுவான்லூயி பீகபடர் தானமாகக் கொடுத்தார். இரண்டாம் உலகப் போரின் காரணமாக ஸ்பெயின் அரசாங்கம் ஹஜ் பயணங்களை 1940ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை ரத்து செய்தது. இப்போது ஒவ்வொரு ஆண்டும் ஸ்பெயின் நாட்டிலிருந்து ஹஜ் பயணம் தொடர்ந்து நடைபெறுகிறது.

500 ஆண்டுகளுக்கு முன் ஹஜ் பயணிகள் அரபிக்கடலில் நீண்ட பயணத்திற்குப்பின் அல்அஸ்வாத் துறைமுகத்தில் இளைப்பாறுவது வழக்கம். அல் அஸ்வாத் ஜித்தா துறைமுகத்தி லிருந்து 12 மைல் தொலைவில் இருந்தது. மூன்றாம் கலீஃபா ஹள்ரத் உதுமான் பின் அஃப்பான் (ரளி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஜித்தா அதிகாரப்பூர்வமான துறை முகமாக அறிவிக்கப்பட்டது.

செங்கடலின் மணமகள் (Bride of the Red Sea) என்று ஜித்தா அழைக்கப்படுகிறது. ஜித்தா துறைமுகம் மக்காவின் நுழைவாயிலாக இருப்பது மட்டுமல்லாமல் செங்கடல் வழியான வர்த்தகத்திற்கான முன்னணி துறைமுகமாகவும் அமைந்திருப்பதால், இது ஒவ்வொரு ஆண்டும் வணிகர் களையும், யாத்ரீகர்களையும் அதிக அளவில் ஈர்த்தது. மக்கா, மதீனா, ஜித்தா, தபூக், யான்பு, தாயிஃப் போன்ற நகரங்கள் அடங்கிய ஹிஜாஸ் என்ற பிராந்திய மக்கள் இந்தியாவி லிருந்து வரும் கப்பல்களை ஆர்வமுடன் எதிர்பார்த்தார்கள். ஏனென்றால், முத்துக்கள், விலையுயர்ந்த கற்கள், பட்டு, சந்தனம், மற்றும் வாசனை திரவியங்கள் ஆகியவற்றை இந்தியவர்த்தகர்கள் விற்பனைக் காகக் கொண்டு வருவார்கள்.

நாகூரில் அடங்கப்பட்டிருக் கும் சையத் அப்துல் காதர் ஷா அல்-ஹமீத் அவர்கள் தங் களுடைய சீடர்களுடன் ஹஜ் கடமையை பதினாறாம் நூற் றாண்டில் நிறைவேற்றினார்கள்.

கான்டினென்டல் போச்சுகல், ஸ்பெயின், அன்டோரா, ஜிப்ரால்டர் மற்றும் தெற்கு பிரான்ஸின் ஒரு சிறிய பகுதியையும் உள்ளடக்கிய அல்மோகத் என்ற சாம்ராஜ்யத் தின் முதல் மன்னர் அப்துல் முஃமின் இப்னு அலீ என்பவ ருடைய ஆட்சிக் காலத்தில்

கிரனாடா என்ற நகரில் கவர்னர் அபூ சைய்யத் உஸ்மான் ஆளுநராக பதவி வகித்தார். அபுல்ஹுஸைன்முஹம்மதுஇப்னு ஜுபைர் அல்கினானி என்பவர் ஆளுநருக்கு காரியதரிசியாக பணியாற்றினார். இப்னு ஜுபைர் ஸ்பெயின் நாட்டிலுள்ள வலென்சியா என்ற நகரில் பிறந்தவர். இவருடைய முன்னோர்கள் மக்கா நகரை சுற்றியுள்ள பிராந்தியத்தை சேர்ந்தவர்கள். இவர் நல்ல கல்வி கற்றவர்; இறையச்சம் கொண்டவராகவும் இருந்தார். ஒரு நாள் மன்னர் அப்துல் முஃமினின் மகன் இளவரசன், இப்னு ஜுபைரை மிரட்டி ஏழு கோப்பை மதுவை குடிக்க வைத்தான். மிரண்டு போன இப்னு ஜுபைர் ஏழு கோப்பை மதுவையும் குடித்தார். இதற்கு பின் வருத்தமடைந்த இளவரசன், இப்னு ஜுபைருக்கு ஏழு கோப்பை நிறைய தங்க நாணயங்களை கொடுத்தான். மதுவை குடித்த பாவத்தை போக்க ஹஜ் கடமையை நிறை வேற்ற முடிவு செய்து, இப்னு ஜுபைர் 38 வயதில் ஹஜ் பயணத்தை மேற்கொண்டார். இவர் 1183ஆம் ஆண்டிலிருந்து 1185ஆம் ஆண்டு வரை மக்கா, மதீனா, பாக்தாத் ஆகிய நகரங் களுக்கு பயணம் செய்தார்.

முதன் முதலில் இப்னு ஜுபைர் வட ஆப்ரிக்காவிலுள்ள சியூடா என்ற நகருக்கு சென்று, அங்கிருந்து 1183ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி அன்று ஜெனோவான் என்ற படகில் ஏறி எகிப்து நாட்டி லுள்ள அலெக்ஸாண்டிரியா நகரை அடைந்தார். அங்கிருந்து நைல் நதியில் படகில் பயணம் செய்து குஸ் (Qus) என்ற நகரை அடைந்தார். 2000 ஆண்டு களுக்கு முன் ரோமப் பேரரசு காலத்தில் இந்த நகரம் அப்பல்லோனோபோலிஸ்பர்வா என்று அழைக்கப்பட்டது. அந்த இடத்தில் ஒரு நாள் தங்கி விட்டு ஒட்டகப் பயணத்தின் மூலம் மறுநாள் அய்தாப் (Aydhab) என்ற துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார். 1500 ஆண்டு களுக்கு முன் அய்தாப் (Aydhab) துறைமுகம் ஹஜ் பயணத்திற்கு அதிகமாக பயன்படுத்தப்பட்ட துறைமுகமாகும். ஏமன், இந்தியா, கம்போடியா, சீனா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மங்கோலியா, மியான்மர் (பர்மா), தாய்லாந்து, ஹாங்காங், தைவான் ஆகிய நாடுகளின் வர்த்தகர்கள் இந்த துறைமுகத்தை இளைப்பாறும் துறைமுகமாக பயன்படுத்தினர். ஜித்தா துறைமுகத்தின் வளர்ச்சிக்குப் பின்பு இந்த துறைமுகம் கைவிடப்பட்டது. அய்தாப் துறைமுகத்திலிருந்து செங்கடலில் பயணம் செய்து இப்னு ஜுபைர் ஜித்தா துறை

முகத்தை அடைந்தார். 1183ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மக்கா நகரை அடைந்தார்.

ஹஜ் கடமையை நிறைவேற்றிய பின் இவர் 9 மாதங்கள் மக்கா நகரில் தங்கியிருந்தார். அங்கிருந்து மதீனா நகருக்கு வந்து அங்கு இரண்டு நாட்கள் தங்கிய பின் தபூக், யான்பு, தாயிஃப் மற்றும் பல்ஜுராஷி ஆகிய நகர்ப் புறங்களிலிருந்த பாலைவனத்தின் வழியாகவும், நஜ்த் பிராந்தியத்தின் வழியாகவும் பாக்தாத் நகரை அடைந்தார்.

அங்கிருந்து மெசபடோமியா பிராந்தியத்தை கடந்து சிரியா நாட்டின் தலைநகரமான டமாஸ்கஸ் நகரத்தை அடைந்து அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். அப்போது சிரியாவில் பேரரசர் சுல்தான் சலாஹுத்தீன் அவர்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. இவர் சிரியாவில் சுல்தான் சலாஹுத்தீனின் பிரம்மாண்டமான இராணுவத்தை கண்டு அதிர்ச்சியடைந்தார். பேரரசர் சுல்தான் சலாஹுத்தீன் நடத்திய ஆண்கள் பயின்ற மதரஸாக்களையும், பெண்கள் பயின்ற மதராஸாக்களையும் மாணவ, மாணவிகள் தங்கியிருந்த விடுதிகளையும், அந்த விடுதிகளில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட உயர் தரமான உணவுகளையும் நேரில் கண்டு மகிழ்ச்சியடைந்தார். மாணவ, மாணவிகளுக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகை பற்றியும் கேட்டறிந்தார். மதரஸாக்களில் கல்வி கற்றுக் கொடுத்த உலமா பெருமக்களுக்கு உயர்தரமான ஊதியம் கொடுக்கப்பட்ட விபரங்களையும், அவர்களுக்கு வீடுகள் மற்றும் பல விதமான சலுகைகள் வழங்கப்பட்ட விபரங்களையும் இப்னு ஜுபைர் அவருடைய பயண நூலில் குறிப்பிட்டுள்ளார். நகரிலும், நகர்ப்புறங்களிலும் இரவும், பகலும் சுல்தான் சலாஹுத்தீனின் இராணுவம் மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து வந்ததால் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர் என்றும், வெகு தூரத்தில் இருந்தும் வியாபாரிகள் வந்து ஊருக்குள் சந்தைகளை நடத்தியதால் வேண்டிய பொருட்கள் நியாயமான விலைகளில் கிடைத்ததாகவும் இப்னு ஜுபைர் அவருடைய நூலில் கூறியுள்ளார். எங்கு பார்த்தாலும் மஸ்ஜிதுகளும், மதரஸாக்களும், ஏழைகள் உண்ணும் இலவச உணவு முகாம்களும், மருத்துவக் கூடங்களும், தண்ணீர் பந்தல்களும், பெண்கள் வெளியில் செல்வதற்கு இலவச பல்லக்குகளும் காணப்பட்டன என்றும் அவர், அவருடைய நூலில் பதிவு செய்துள்ளார்.

(தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## பரிபூரண சுகம் பெற...

என் கழுத்தில் உள்ள வலி பிரச்சனை நீங்கி, ஆப்ரேஷன் செய்யாமலேயே மருந்து, மாத்திரைகள் மூலம் வலி நீங்கி பரிபூரண சுகம் பெற்று, ஆரோக்கியத்துடன் வாழ துஆ செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். **- குரல் வாசகர் - மதுரை.**

ஃபாரூக் ஆடிட்டர் - உடுமலைப்பேட்டை; சுகர்ணா மவ்லானா - விழுப்புரம்; முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; ஷபியுல்லாஹ், நாஜியா பேகம் - பெங்களூரு; சாரா பானு - திருச்சி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம்-மதுரை;எம்.ஹபீபுன்னிஸா - ஈரோடு; நஜீர் - தஞ்சாவூர்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; ஹாஜ்ஜா பீ.யாஸ்மீன் நிஹார் - உத்தமபாளையம்; எம்.ஷானவாஸ் - திருச்சி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; எம்.அன்சாரி - உடுமலை; எம்.உமர் - லக்னோ; சந்தா எண் F595 - திருச்சி; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; அ.பாரூக் அலீ - ஆத்தூர்; ஷபீர் அஹமது - துபாய்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; அ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; ஜெ.முஹம்மது யூசுப் - திட்டச்சேரி; பீ.முஹைதீன் பாத்திமா - கோத்தகிரி; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; ஹாஜி எம்.பீர்முஹம்மது, ஹாஜ்ஜா பீ.ருகையாள் பீவி - உத்தமபாளையம்; ராபியத் - மூணார்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசிர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை;

சந்தா எண் L 105 – மணப்பாறை; குரல் வாசகி – பள்ளபட்டி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் – மதுரை; முஹம்மது சிராஜுதீன் – விழுப்புரம்; என்.மும்தாஜ் – தஞ்சாவூர்; நசீர் அஹமது – தஞ்சாவூர்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் – சென்னை; ஹஸன் பானு, முனீர் மீரான் – தஞ்சாவூர்; ரிஸ்வானா பேகம் – புதுக்கோட்டை; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா – மதுரை; காமிலா பானு, ஹக்கீம் – சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா – அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் – இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி – சென்னை; காஜா ஹுஸைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் – மதுரை; பி.சுபைதா – சோழமாதேவி; சாதிக் – மங்கலம்; நூருல்லாஹ் – பெங்களூரு; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் – ஒத்தக்கடை; முஹம்மது இப்ராஹிம்ஷா – மதுரை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹஸ்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

என் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க துஆ செய்யுமாறு துஆ மஜ்லிஸில் கோரியிருந்தேன். வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் என் மனைவி கர்ப்பமாக இருக்கிறார் என்பதை மகிழ்ச்சி கலந்த நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகப்பிரசவத்துடன் குழந்தை பிறந்து தாயும் சேயும் நலமுடன், ஆரோக்கியத்துடன் வாழ மீண்டும் துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். **முஜம்மில் – டெல்லி.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஜனாப் முஹம்மது ரியாஸ்கான் அவர்களின் தகப்பனாரும், ஜனாபா மெஹருன்னிஸா அவர்களின் கணவருமான ஜனாப் I.அப்பாஸ் அலீ அவர்கள் (Retd. Superintendent Madurai HPO) அவர்கள் 19.01.24 அன்றும்,

சிங்கம்புணரி மர்ஹூம் I.அப்பாஸ் அலீ (Retd. Supdt. Madurai HPO) (ரஹ்) அவர்களின் மகனாரும், ஜனாப் முஹம்மது ரியாஸ்கான் அவர்களின் அண்ணனுமான ஜனாப் ரஷீத் அஹமது (எ) ராஜா அவர்கள் 06.02.24 அன்றும்,

தேனி மாவட்டம் கம்பம் ஜனாப் எம்.ஏ. ரமீஸ் அஸ்மத் அவர் களின் மகனார் ஜனாப் அஹமது ஆதம் அவர்கள் 29.05.24 அன்றும்,

கேரளா பழையகோட்டை ஜனாப் காஜா உசேன் அவர்கள் 22.05.24 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மர்ஹூம் எம்.முஹம்மது மீரான் (ரஹ்) அவர்களின் மனைவி ஜனாபா எம்.முஹம்மது பாத்திமா அவர்கள் 26.05.24 அன்றும்,

உத்தமபாளையம் ஜனாப் ஷேக் பீர் சாயபு அவர்களின் மகனாரும், ஜனாப் நூர்தீன் மற்றும் மர்ஹூம் சுல்தான் அலாவுதீன் (ரஹ்) ஆகியோரின் சகோதரருமான ஜனாப் அன்வர் அலீ அவர்கள் 04.06.24 அன்றும்,

உத்தமபாளையம் மக்கா பள்ளிவாசல் & மதீனா பள்ளிவாசல் களின் தலைவர் அல்ஹாஜ் எம்.ஃபெரோஸ்கான் அவர்களின் மருமகளாரும், பழனி ஜனாப் முஹம்மது உசேன் அவர்களின் மகளாரும், உத்தமபாளையம் டாக்டர் எஃப்.ஷாஹித் முஹம்மது அவர்களின் மனைவியுமான ஜனாபா முஜாஹிதா பாத்திமா அவர்கள் 05.06.24 அன்றும்,

உத்தமபாளையம் மர்ஹூம் ஷேக் மைதீன் (மீசைக்காரர்) இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மூத்த மகனார் ஜனாப் என்.எஸ்.அப்துல் ரஹீம் அவர்கள் 06.06.24 அன்றும்,

உத்தமபாளையம் நைனார் முஹம்மது பெரிய பள்ளிவாசலில் கணக்கராக பணிபுரிந்து வந்த ஜனாப் எம்.ஜே. ஹைதர் அலீ அவர்கள் 12.06.24 அன்றும்,

தேனி மாவட்டம் கோம்பை அல்ஹாஜ் மர்ஹூம் சின்னத்துரை (ரஹ்) அவர்களின் மகளார் ஜனாபா மும்தாஜ் அம்மாள் அவர்கள் 12.06.24 அன்றும்,

கேரளா, அத்திக்கோடு முன்னாள் இமாமும், மர்ஹூம் C.வீரான்குட்டி முஸ்லியார் (ரஹ்) அவர்களின் மகனாருமான மவ்லானா மவ்லவீ C.V. தாஹா சர்புதீன் ஜமாலி ஹஸ்ரத் அவர்கள் 22.06.24 அன்றும்,

உத்தமபாளையம் கோட்டைமேடு லோடுமேன் மர்ஹூம் அப்துல் ரஹீம் (ரஹ்) அவர்களின் மனைவியும், டெய்லர் அக்பர் அலீ அவர்களின் தாயாருமான ஜனாபா மைமூனா அம்மாள் அவர்கள் 24.06.24 அன்றும்,

கேரளா பட்டாம்பி மர்ஹூம் எஸ்.எம் முஹம்மது இஸ்மாயீல் ஹாதி (ரஹ்) அவர்களின் மனைவியும், ஜமீன் ஆத்தூர் ஜனாப் அ. மு. சமீமுல்லாஹ் அவர்களின் மூத்த மகளாரும், சோமனூர் ஜனாப் எஸ்.சாதிக் பாட்சா அவர்களின் மூத்த சகோதரியுமான ஜனாபா மரியம் பீவி அவர்கள் 01.07.24 அன்றும்,

பள்ளபட்டி முன்னாள் M.L.A. அல்ஹாஜ் மர்ஹூம் ஈரோட்டாம் லியாவுதீன் சேட் (ரஹ்) அவர்களின் மகனாரும், பள்ளபட்டி "இம்ரான் இன்சைட்" உரிமையாளருமான ஜனாப் இம்ரான் அவர்கள் 01.07.24 அன்றும்,

மதுரை "ராயல் டெக்ஸ்" நிறுவனர் கத்தீப் லெவை அல்ஹாஜ் அல்ஹாஃபிழ் மர்ஹூம் அப்துல் ஹை (ரஹ்) அவர்களின் மூத்த மருமகளாரும், அல்ஹாஜ் K.A.இல்யாஸ் அவர்களின் அன்பு துணைவியாருமான (ஆம்பூர் சாயபு) அல்ஹாஜ்ஜா முனவர் சுல்தானா அவர்கள் 03.07.24 அன்றும்,

பள்ளபட்டி அஸ்மியான் மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஹை (ரஹ்) அவர்களின் கடைசி மகனாரும், அஸ்மியான் அல்ஹாஜ் H.M. அப்துல் பாரி மற்றும் சகோதரர்களின் அருமை தம்பியுமான ஜனாப் H.M. முஹம்மது இல்யாஸ் அவர்கள் 19.07.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

# வாசகர் வட்டம்

“மவுத்தையே நீ மறந்து வாழலாகுமா?” கட்டுரையில் ஜம்பை ஜப்பார் ஹஸ்ரத் பல ஹதீஸ்களை மேற்கோள் காட்டி எழுதியிருந்தவை மிக அருமை. குறிப்பாக மரணித்தவர்களின் நற்செயல்களை மட்டும் பேசுங்கள். அதற்கு மலக்குகள் ஆமீன் சொல்கிறார்கள் என்பது எப்பொழுதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.



“வரலாற்றில் ஓர் ஏடு” என்ற தலைப்பில் பீர் இலாஹி மாதாமாதம் ஹதீஸ்களை குறிப்பிட்டு எழுதி வருவது நம்மை படிக்க வைக்கின்றது.

“துஆ மஜ்லிஸ்” பகுதி மிகவும் அவசியமாக இருக்கின்றது. காரணம் : துஆவுக்கு விதியை மாற்றக்கூடிய சக்தியுள்ளது. அதேபோல் செய்கின்ற நல் அமல்களும் ஆயுளை நீட்டிக்கக்காரணமாக இருக்கின்றன என்பதும் நாம் அறிந்ததே. அதன் அடிப்படையில் “இதயம் பேசுகிறது” என்ற பகுதியும் நம் இதயத்தை குளிர்விப்பதாக உள்ளது.

பா.ஹாஜி முஹம்மது.
சேந்தமங்கலம்.

நாய் வகைகளில் 225 இனங்கள் இருப்பதை டாக்டர் பீ.ஹாமிது அப்துல் ஹை அவர்கள் எழுதிய “நாமும், நாயும்” கட்டுரையின் மூலம் தான் தெரிந்து கொண்டேன். நாய் பற்றித் திருமறையும், நபிமொழியும் குறிப்பிடுவதை மனதில் கொண்டு அதன்படி செயல்பட்டு நாம் வசிக்கும் பகுதிகளில் நாய்கள் இருந்தால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கட்டுரையாளருக்கு என் பாராட்டுக்கள்!

**எம்.ஆசாத் முஹம்மது,**
**சென்னை.**


ஜூலை மாத இதழில் நபி (ஸல்) அவர்களின் புனித ரவ்ளா ஷரீஃபை ஜியாரத் செய்யும் வழிமுறைகளையும், அதன் சிறப்புகளையும் சொல்லப்பட்ட விதம் மிகவும் அருமை. அல்லாஹ் நம் அனைவருக்கும் அந்த நற்பேற்றினை வழங்குவானாக! மிஸ்வாக் செய்வதின் நன்மைகளைப் பற்றிய செய்திகளும் மிகவும் பயன்தரக் கூடியவையாக உள்ளன. ஒவ்வொரு மாதமும் “பதில்கள்” பகுதியில் முஃப்தீ அவர்களின் விளக்கங்கள் மூலம் மார்க்கச் சட்ட திட்டங்களை தெரிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. அல்ஹம்துலில்லாஹ்!

ஜெ. முஹம்மது யூசுப்,
பனங்காட்டூர்.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

**LUNGIES * VESTS * BRIEFS**

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India